# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

▪ தடி-2, அடி-10 ▪ ஜனவரி 2019 ▪ தனிச்சுற்றுக்கு மட்டும் ▪ நன்கொடை ரூ.30



## தமிழர் திருநாள்

பொங்கல் சிறப்புக் கட்டுரை

## ஓரணியில் நிற்க வேண்டிய போர் வீரர்கள் நாம்

வழக்கறிஞர் அ.அருள்மொழி

கடலின் கோரத்தால் ((((கஜாபுயல்))) கண்ணீர் கடலில் மக்கள்

**கண்ணீர் துடைப்பில்**

**(( களத்தில் இளைய சமுதாயம் ))**

**மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்**

**MAKKAL JANANAYAKA MUNNETRA KAZHAGAM**



**மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்**

தலைமை அலுவலகம்:

16, ராமுகாலனி முதல் வீதி, தனலட்சுமி திரையரங்கம் பின்புறம், கொங்கு மெயின் ரோடு, திருப்பூர்-641607.

Contact: **90426 25725, 95851 16796, 80129 36465** Mail ID: mjmktamilnadu2017@gmail.com Website:www.mjmktamilnadu.com

Fb : mjmktamilnadu Fb likepage: மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்

# பொங்கல் பண்டிகை


பொங்கல் பண்டிகை என்பது நாள் நட்சத்திரம் மதக்கதை ஆதாரம் முதலியவை எதுவுமே இல்லாமல் தை மாதம் ஒன்றாம் தேதி என்பதாகத் தை மாதத்தையும் முதல் தேதியையுமே ஆதாரமாகக் கொண்டதாகும்.

இதற்கு எவ்விதமான கதையும் கிடையாது. இந்தப் பண்டிகை உலகில் எந்தப் பாகத்திற்கும் எந்த மக்களுக்கும் உரிமையுள்ள பண்டிகையாகும். என்றாலும். மற்ற இடங்களில் மற்ற மக்களால் பல மாதங்களில் பல தேதிகளில் பல பேர்களால் கொண்டாடப் படுவதாகும். இக்கொண்டாட்டத்தின் தத்துவம் என்னவென்றால், விவசாயத்தையும் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டு அறுவடைப் பண்டிகையென்று சொல்லப்படுவதாகும். ஆங்கிலத்தில் ஹார்வேஸ்ட் பெஸ்டிவல் (Harvest Festival) என்று சொல்லப்படுவதின் கருத்தும் இது தான்.

என்றாலும், பார்ப்பனர் இதை மத சம்பந்தம் ஆக்குவதற்காக விவசாயம், வெள்ளாண்மை, அறுவடை ஆகிய கருத்தையே அடிப்படையாகக் கொண்டு இதற்கு "இந்திரன் பண்டிகை" என்றும் அதற்குக் காரணம் வெள்ளாண்மைக்கு முக்கிய ஆதாரமான நீரை (மழையைப்) பொழிகிறவன் இந்திரன் ஆதலால் இந்திரனைக் குறிப்பாய் வைத்து, விவசாயத்தில் விளைந்து வெள்ளாண்மையாகியதைப் பொங்கி சமைத்து மழைக்கடவுளாகிய இந்திரனுக்கு வைத்து படைத்து பூசிப்பது என்றும் கதை கட்டி விட்டார்கள்.

இந்தக் கதையை இவ்வளவோடு விட்டுவிடவில்லை.

இம் மாதிரியான இந்திர விழாபற்றி கிருஷ்ணன் பொறாமைப்பட்டு தனக்கும் அந்த விழாவை (பூசையை) நடத்த வேண்டுமென்று மக்களுக்குக் கட்டளை இட்டதாகவும், மக்கள் அதன்படிச் செய்ததாகவும், இந்த இந்திரவிழா கிருஷ்ணமூர்த்தி விழாவாக மாறியது இதனைக் கண்ட இந்திரன் கோபித்து ஆத்திரப்பட்டு, இந்த கிருஷ்ணமூர்த்தி விழா ஈடேறாமல் நடைபெறாமல் போகும் பொருட்டு பெரிய மழையை உண்டாக்கி விழாக் கொண்டாடுவோர் வெள்ளாண்மைக்கு ஆதரவாக இருந்த கால்நடைகள்,ஆடு மாடுகள் அழியும் வண்ணமாகப் பெரும் மழையாகப் பெய்யச் செய்துவிட்டான் என்றும் இதற்கு ஆளான மக்கள் கிருஷ்ணமூர்த்தியிடம் சென்று முறையிட்டதாகவும், கிருஷ்ணமூர்த்தி மக்களையும் மாடுகளையும் காப்பாற்ற ஒரு பெரிய மலை (கோவர்த்தனகிரி) யைத் தூக்கி அதைத் தனது சுண்டுவிரலால் தாங்கிப் பிடித்து காப்பாற்றியதாகவும், இதனால் இந்திரன் வெட்கமடைந்து கிருஷ்ணனிடம் தஞ்சமடைந்து தனது மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு இரங்கி கிருஷ்ணன், எனக்கு ஒரு நாள் பண்டிகை, உனக்கு ஒரு நாள் பண்டிகையாக, மக்கள் முதல் நாள் எனக்காக பொங்கல் பண்டிகையாகவும், பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் என்று கொண்டாடும்படியும் ராஜி செய்து கொண்டார்கள் என்றும் சிரிப்பிற்கிடமான ஆபாச முட்டாள் தனமான கதைகளைச் சுட்டிப் பொருத்திவிட்டார்கள்.



இதிலிருந்து தேவர்களுக்கு அரசனான இந்திரனின் யோக்கியதை எப்படிப்பட்டது ? மக்களுக்குக் கடவுளான கிருஷ்ணனின் யோக்கியதை எப்படிப்பட்டது என்பதை மக்கள் சிந்தித்து உணர வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மற்றும் இதில் பொங்கலுக்கு முதல் நாளைக்கு ஒரு கதையையும், மறு நாளைக்கு ஒரு கதையையும் போகிப் பண்டிகையென்றும் பெயர் வைத்து மூன்று நாள் பண்டிகையாக்கி, அதில் ஏராளமான முட்டாள் தனத்தையும் மூடநம்பிக்கையையும் புகுத்திவிட்டார்கள். நமது பார்ப்பனர்களுக்கு எந்தக் காரியம் எப்படியிருந்தாலும், யார் எக்கேடு கெட்டாலும் தாங்கள் மனித சமுதாயத்தில் உயர்ந்த பிறவி மக்களாகவும், உடலுழைப்பு இல்லாமல் வாழும் சுக ஜீவிகளாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக மனித சமுதாயம் முழுவதுமே அறிவைப் பயன்படுத்தாத, ஆராய்ச்சியைப் பற்றியே சிந்திக்காத முட்டாள்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும் இருக்கச் செய்யவேண்டும் என்பதே அவர்களுடைய பிறவிப் புத்தியானதால் அதற்கேற்ப உலக நடப்பைத் திருப்பிப் பாதுகாத்து வைக்கிறார்கள்.

பார்ப்பனர்களின் இம் மாதிரியான அட்டூழிய அக்கிரம காரியங்களில் இருந்து விடுபட்டு மனிதர்களாக நாம் வாழவேண்டுமானால் பொங்கல் பண்டிகை என்கிறதை முதல்நாள் அன்று மட்டும் நல்ல உயர்வான உணவு அருந்துவதையும், நல்லுடை உடுத்துவதையும் மனைவி மக்கள் முதலியவர்களுடன் இன்பமாகக் காலம் கழிப்பதையும் கொண்டு, நம்மால் கூடிய அளவு மற்றவர்களுக்கும் உதவி அவர்களுடன் குலாவுவதான காரியங்களையும் செய்வதன் மூலம் விழாக் கொண்டாட வேண்டியது அவசியமாகும்.

மற்றப்படியாக, மதச் சார்பாக உண்டாக்கப்பட்டிருக்கும் பண்டிகைகள் அனைத்தும் பெரியதும் நம் இழிவிற்கும், பார்ப்பனர் உயர்விற்கும், நம் மடமைக்கும், காட்டுமிராண்டித் தன்மைக்கும் பயன்படத்தக்கதாகவே இருந்து வருவதால் பயனளித்து வருவதால் அறிவுள்ள, மானமுள்ள மக்கள் மத சம்பந்தமான எந்தப் பண்டிகையையும் கொண்டாடாமலிருந்து, தங்களை மானமும் அறிவுமுள்ள மக்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மானமும் அறிவுமே மனிதருக்கழகு.

– அறிக்கை – விடுதலை – 13–1–1970

# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

ஆசிரியர் குழு:
**கா. தமிழரசன்**
புலவர் **நாகை பாலு**, த.மு.எ.ச.
முனைவர் **கு. முருகேசன்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன்**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ்**, ஓவியர் **ரா.ராஜசேகர்**,
ஓவியர் **சிகரன்**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப், 76677 55673**

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, திராவிடராசன், ஜெர்லின் பிரீமா, கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா**, வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்**, வழக்கறிஞர்

ஆசிரியர் குழு & அலுவலக முகவரி

கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்


2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ),
காரிமங்கலம் (வ), தருமபுரி & 635 205.
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்:kaithadimonthly@gmail.com இணையதளம்:kaithadi.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


தமிழர் திருநாள் 5

ஓரணியில் நிற்க வேண்டிய போர் வீரர்கள் நாம்! 7

‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’ 12

வாழ்தல் இனிது 14

அயோத்தி அரசியல் 16

மந்திரமா? தந்திரமா? 17

எச்சில் தொட்டி - தொடர்கதை 18

தமிழர் விளையாட்டுகள் - கரகாட்டம் 20

இன்றைய இந்தியாவில் பெண் குழந்தைகளின் நிலையென்ன? 22

அம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா? 24

வயதான பெண்/ ஆண்களை வதைக்கும் எலும்புப்புரை நோய் (Osteoporosis) 28

ஒரு கேள்விக்குறியின் ஊடாக - கவிதை 29

சட்டமும் பேஸ்புக்கும் 30

உயிர்மெய் - தொடர்கதை 32

செல்லக்கண்ணு - கவிதை 34


### கைத்தடி சந்தா விபரம்

தனி இதழ் ₹ 30

| | |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 300 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 600 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 1200 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1500 |
| ஆயுள் சந்தா (10 ஆண்டு மட்டும்) | ₹ 3000 |

NAME : KAITHADI
A/C NO : 20160200001582
IFSC CODE : FDRL0002016 PH. NO: 7373333078
A/C TYPE : CURRENT ACCOUNT
FEDERAL BANK, DHARMAPURI

முனைவர் **துரை சந்திரசேகரன்**
பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்



# தமிழர் திருநாள்

“தமிழனுக்குள்ள கலைகள் என்பனவெல்லாம் தமிழனை அடிமை ஆக்குவனவாகவே இருந்துவருகின்றன. தமிழனுக்கு அடியோடு சமயம் என்பதே இல்லாமல் போய்விட்டதே எனலாம். மக்களுக்கு விழா, முக்கியமான தேவையாகும். விழாவை முன்னிட்டு மக்களுக்கு, மகிழ்ச்சி, ஓய்வு, மக்களுடன் அளவளாவுதல், கவலையற்ற கொண்டாட்டம் கொள்ளுதல், அன்பு, ஆசைப்பரிமாற்றம், களியாட்டம் முதலியவைகளை அனுபவிக்க முடிகின்றது. இவைகளை ஏற்படுத்துவதால் தான் இவற்றை விழா என்று கூறுகிறோம்.

அரசாங்க விடுமுறைக்கு உரிய பண்டிகைகள் போகி, பொங்கல், மாட்டுப்பொங்கல், மகா சிவராத்திரி, தமிழ் வருஷப் பிறப்பு, ஆவணி அவிட்டம், கோகுலாஷ்டமி, சரஸ்வதி பூஜை, தீபாவளி. விடுமுறை இல்லாத பண்டிகைகள் பிள்ளையார் சதூர்த்தி, கார்த்திகை தீபம், பங்குனி உத்திரம், தைப்பூசம் இந்தப்படியாக இன்னும் பல.

இவைகளில் தமிழனுக்கு, தமிழ்ச்சமுதாயத்துக்கு தமிழன் பண்பிற்கு, தமிழன் வரலாற்று நடப்புக்கு, தமிழனின் அறிவு ஆராய்ச்சி பொருத்தத்துக்கு ஏற்றவாறு விழா அல்லது பண்டிகை என்பதாக எதையாவது சொல்ல முடிகிறதா?

இப்படிப்பட்ட நிலையில், தமிழர் விழா (பண்டிகை) என்பதாக நான் எதைச் சொல்ல முடியும்? ஏதாவது ஒன்று வேண்டுமே? அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக்கூடியது அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாக கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகட்கு முன் நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம்.

இந்தப் பண்டிகையும் அறுவடைத் திருவிழா (Hervest Festivel) என்ற கருத்தில்தானே ஒழிய, சங்கராந்திப் பண்டிகை, போகிப்பண்டிகை, இந்திரவிழா என்று சொல்லப்படும் கருத்தில் அல்ல.

இந்த பொங்கல் பண்டிகையை தமிழர் எல்லோரும் கொண்டாட வேண்டும்.” (விடுதலை : 30/1/1959))

*மூட நம்பிக்கைகளை மூலதனமாகக் கொண்டு ஆரிய பார்ப்பனர்களால் புகுத்தப்பட்ட பண்டிகைகளும் விழாக்களும் மக்களின் நேரத்தை வீணடித்து, பொருளாதாரத்தைச் சீரழித்து, அறிவைக் கெடுத்து நாட்டை பிற்போக்குத்தனத்தில் ஆழ்த்துவதைக்கண்ட பெரியாரின் உள்ளக் கொதிப்பே மேலே உள்ள அவரின் கருத்து. சமுதாயத்தை ஏற்றம் பெறச் செய்யவும், வாழ்வை உயர்த்தவும், நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்லவும் எது பயன்படவில்லையோ அவற்றை தந்தை பெரியார் எதிர்த்தார்; சாடினார். அறிவுலக ஆசான் பெரியாரால் கொண்டாடப்படவேண்டிய விழாவாக அடையாளப்படுத்தப்பட்ட ஒரே விழா தமிழர் திருநாள் மட்டுமே.*

*தமிழர் திருநாள் எனும் பொங்கல் விழா என்பது சமய*




▪ வெற்றி பெறுவது எப்படி என்று யோசிப்பதை விட, தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப்பார் நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய். – ***ஹிட்லர்***

சார்பற்ற விழா மட்டுமல்ல இயற்கை சார்ந்த விழாவாகும். எல்லாத் தமிழர்களுக்கும் பொதுவான விழாவும் கூட. வான் சார்ந்து, மண் சார்ந்து முழுமையான வேளாண்மை சார்ந்து உருவான திருநாள் ஆகும். தமிழர்களான திராவிட குடியான நமக்கு மகிழ்ச்சியை பெருமையை தருகிற விழாயென்றால் மிகையில்லை. தமிழர் தம் பண்பாட்டு விழாவான பொங்கல் முதல் நாளை போகி என்றும், தமிழ் புத்தாண்டின் தொடக்க நாளை பொங்கல் என்றும், அடுத்த நாளை மாட்டுப்பொங்கல் என்றும், உறவினர்களை, அறிவிற்சான்றோர்களை கண்டு உறவாடும் நாளை காணும் பொங்கல் என்றும் மக்களால் மகிழ்வாக கொண்டாடப்படும் மகிழ்ச்சிக்குரிய திருநாளே தமிழர் திருநாள்.

ஓர் ஆஷ்டைப் போக்கியது 'போக்கி' (போகி) எனவும், அந்நாளில் பழையன கழிதல் புதியன புகுதல் என்பதாக பழைய தேவையற்ற பொருட்களை எரித்தல் போன்ற வழக்கங்களும் உண்டு. இதனைப் பயன்படுத்தி ஆரிய பார்ப்பனர்கள் தமிழர்தம் வரலாற்றுச் சுவடுகளை எரித்திட மக்களைத் தூண்டி சூழ்ச்சியாய் காரியமாற்றிய செய்திகளும் உண்டு. அடுத்து பொங்கல் நாளில் புத்தாடை உடுத்தி, புத்தரிசி பொங்கலிட்டு, வீடு தெரு எங்கும் தோரணங்கள் கட்டி, செங்கரும்பும் மஞ்சளும் கொண்டு வீட்டை அழகுப்படுத்தி 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சியாக கொண்டாடுவர். அதற்கும் அடுத்த நாள் வேளாண் குடிமக்களுக்கு உற்ற தோழனாக உதவிடும் மாடுகளை, இயற்கையை ஏற்றம் பெறச் செய்யும்வண்ணம் மாட்டுப்பொங்கல் கிராமப்புறங்களில் சீரோடும் சிறப்போடும் கொண்டாடிவருவதை காணலாம்.

இருளைப்போக்கி புத்தொளி வழங்கிடும் சூரியனைப் போற்றியும், உழைப்பை மட்டுமல்ல தனக்கு துணைநின்ற உயிரையும் போற்றிய சீர் உரு பண்பாட்டை பொங்கல்விழா என்பது எடுத்துக்காட்டுகிறது. இன்றும் கிராமப்புறங்களில் மிகவும் சிறப்பான விழாவாக பொங்கல்விழா பொலிவுடன் கொண்டாடப்படுகிறது. வடவரால் ஆரியத்தால் வழங்கப்பட்ட 'தீபாவளி' கொண்டாடுவதை முற்றாக தவிர்க்க வேண்டும். தமிழர் திருநாளை தமிழர் வாழும் ஊரெல்லாம், நாடெல்லாம் கொண்டாட வேண்டும்.

> "கிறிஸ்தவர்கள் காலத்தைக் காட்ட கிறிஸ்தவ ஆண்டு (கி.பி, கி.மு) இருக்கிறது. முஸ்லீம்கள் காலத்தைக்காட்ட இஸ்லாம் ஆண்டு (ஹிஜ்ரி) இருக்கிறது. இதுபோல தமிழனுக்கு என்ன இருக்கிறது? இதற்கு தமிழனின் ஆதாரம் என்ன இருக்கிறது?" (விடுதலை : 30/1/1959)

இப்படிக் கேட்டவர் பகுத்தறிவுப் பகலவன் பெரியார். தமிழனுக்கென்று ஆண்டு கணக்குமுறை இல்லையே! ஆரியர்களால் சூதாககற்பிக்கப்பட்ட பிரபவ முதல் அட்சய வரை வருடங்களாக, அதுவும் சுழற்சி முறையில் 60 வருடங்களாக! 60 வயதுக்கு மேல் வாழும் ஒவ்வொரு மனிதனின் வயதுக்கணக்கு என்னவாகும்? 60 ஆண்டுகள் உருவாக்கத்துக்குச் சொல்லப்பட்ட கிருஷ்ணன் நாரதன் கதை ஏற்படுத்திய சீரழிவு?

இந்த அவலத்தைப் போக்கத்தான் 1921 மே 19-ஆம் நாள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் அறிஞர்களும், சான்றோர்களும், புலவர்களும் அய்நூறுக்கும் மேலாகக் கூடி ஆய்வு செய்து ஒத்த முடிவுக்கு வந்து நான்கு முடிவுகளை வெளிப்படுத்தினர் தமிழ்கடல் மறைமலை அடிகள் தலைமையில்!

- தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள்
- திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டுக்கணக்கு
- திருவள்ளுவர் காலம் கி.மு. 31
- திருவள்ளுவர் ஆண்டே தமிழ் ஆண்டு என கொள்வது

இம்முடிவைத் தான் 1935 சனவரி 18-ஆம் நாள் தமிழ்க்கடல் மறைமலை அடிகள் அறிவித்தார். திருவள்ளுவர் ஆண்டு கணக்கிட ஆங்கில ஆண்டுடன் 31-னை கூட்டல் வேண்டும்.

தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுத் தொடங்க நாள் என்பதை தமிழ்நாடு அரசு ஏற்று அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக முதல்வரிடம் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களே முன்வைத்தார். பல்வேறு தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்கள் கோரிக்கையைத் தொடர்ந்தனர்.

தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அரசு சார்பில் 2008-ஆம் ஆண்டு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என அறிவித்தார். உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் வரவேற்று மகிழ்ந்தனர்; உவகை பூத்தனர். மகிழ்ச்சி நீண்ட காலம் நிலைபெறவில்லை. காரணம் 2011-இல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசின் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் சித்திரை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டின் முதல்நாள் என இந்துத்துவ மனப்பான்மையுடன் அறிவித்தார்.

1971 முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும் 1972 முதல் அரசிதழிலும் திருவள்ளுவர் ஆண்டு எனும் நடைமுறையை செயல்பெறச் செய்தவரும் கலைஞரே. 1981 முதல் அரசு சார்ந்த அனைத்து அலுவலகங்களிலும் திருவள்ளுவர் ஆண்டு பின்பற்றப்பட்டு வருவது பாராட்டுக்கு உரியதே! தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு தொடக்க நாளாக மீண்டும் நடைமுறைக்கு வரச்செய்ய முயலுவோமாக.

"தையே முதற்றிங்கள்; தை முதலே ஆண்டு முதல்
பத்தன்று; நூறன்று; பன்னூறன்று
பல்லாயிரத் தாண்டாய்த் தமிழர் வாழ்வில்
புத்தாண்டு தைம் முதல்நாள் பொங்கல் நன்னாள்
நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரை அல்ல உனக்குத் தமிழ்ப்புத்தாண்டு
அண்டிப்பிழைக்கவந்த ஆரியக்கூட்டம் காட்டியதே
அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழர்க்கு
தைமுதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு"

எனும் புரட்சிக்கவிஞரின் வரிகளை நினைவில் கொள்வோம்! பார்ப்பன பண்பாட்டு படையெடுப்பை முறியடிப்போம்! தந்தை பெரியாரின் கொள்கைப்பாட்டையில் திராவிடர் திறம் கூட்டுவோம்; தமிழர் உரிமை காப்போம்! தமிழர் திருநாளின் சிறப்பை, மதிப்பை பறைசாற்றுவோம்!. ●



■ உங்களால் பறக்க முடியாவிட்டால் ஓடுங்கள். ஓடமுடியாவிட்டால் நடந்து செல்லுங்கள். நடக்கவும் முடியாவிட்டால் தவழுங்கள். இலக்குகளை நோக்கி சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதே முக்கியமானது. - *ஹிட்லர்*

# ஓரணியில் நிற்க வேண்டிய போர் வீரர்கள் நாம்!

மகாராஷ்டிர மாநிலத்தில், ஜாதி, தீண்டாமை ஒழிப்பு மாநாடு இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு காரணமாக இதனை ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கக் கூடிய மும்பை பகுத்தறிவாளர் கழகத்தின் பொறுப்பாளர்களே,

இங்கே சிறப்புரையாற்ற வருகை தந்திருக்கின்ற எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன் அவர்களே, இந்த மும்பை மண்ணில் பகுத்தறிவு வேர்களை நிலை நிறுத்தச் செய்த தமிழர்களான மும்பையில் திராவிட இயக்கம் என்கிற சொற்கள் ஒலிக்கும் பொழுதெல்லாம் அதற்கான அடி வேராக இருந்து மறைந்த அய்யா மந்திரமூர்த்தி அவர்கள், அய்யா சுப்பைய்யா அவர்கள், அய்யா சோமசுந்தரன் அவர்கள், அய்யா பொற்கோ அவர்கள், அய்யா ஆரிய சங்கரன் அவர்கள், அய்யா அன்பழகன் அவர்கள் இப்படி இந்த திராவிட இயக்கத்தின் அடிக்கல்லாக வாழ்ந்த அவர்களுடைய வழியில் இன்றும் இந்த இயக்கத்தினை நடத்திச் சென்று கொண்டிருக்கின்ற கழகப் பொறுப்பாளர்களே,

தமிழ் லெமூரியா மூலமாக தமிழர்களின் வரலாற்றுத் தேடலை முன்னெடுத்து நடத்துகின்ற தோழர் குமணராசன் அவர்களே, திராவிடர் கழகத்தின் வெளியுறவுத்துறை செயலாளர் சிறந்த பகுத்தறிவாளரும் பகுத்தறிவாளர் கழகத்தின் வழிகாட்டி தோழர். குமரேசன் அவர்களே,

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் கேப்டன் தமிழ்ச்செல்வன் அவர்களே, மேலும் நிறைய பேரின் பெயரைச் சொல்ல வேண்டும். அனைவரின் பெயர்களையும் தோழர் திருமா அவர்கள் குறிப்பிடுவார். அவருடைய உரைக்காக இவ்வளவு நேரம் எழுச்சியோடும் பொறுமையோடும் ஆர்வத்தோடும், எதிர்பார்ப்புகளோடும் கூடி இருக்கின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழர்களின் தமிழ்நாட்டில் இருந்து வெகு தூரம் வேலைக்காகத் தொழில், வணிகம், அரசியல் என்று எங்கெல்லாம் சென்று வாழ்கிறார்களோ அந்த இடத்தில் சென்று தமிழர்களைச் சந்திப்பது என்பது தனக்கு மிகவும் பிடித்தமான ஒரு வேலை என்பது தான் ஆசிரியர்அவர்களுடைய கருத்து. அப்படிப்பட்டச் சூழலில் அவர் இங்கு வர இயலாத அந்த வாய்ப்பினை எனக்கு அளித்து இந்தச் சமூகம், நீதி, ஜாதி, தீண்டாமை ஒழிப்பு என்கிற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கருத்தரங்கத்தில் பங்கு பெறுகிறச் சூழலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

இந்த வாய்ப்பளித்ததற்காக அய்யா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





▪ பக்தி என்பது தனிச்சொத்து. ஒழுக்கம் என்பது பொது சொத்து. - தந்தை பெரியார்

இன்றைய அரசியல் சூழலில் இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொருவிதமான பிரச்சனைகள் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் இந்தியா முழுவதும் பேச வேண்டிய பிரச்சனை என்றால் ஜாதி, தீண்டாமை. அதை ஒழிக்கிற சமூகநீதி இவைதான். மாநிலத்திற்கு மாநிலம் மற்ற பிரச்சனைகள் மாறலாம். ஆனால் இந்தியாவின் மாறாத பிரச்சனை ஜாதி, ஜாதி.., ஜாதி..,

இந்த ஜாதியும், தீண்டாமையும் மனிதர்களை எந்த இடத்திற்குக் கொண்டு போய் விட்டிருக்கிறதென்று அண்மையில் நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். ஜாதி என்பது எப்படிப்பட்டது? மழை, வெள்ளம், புயல், சூறாவளி அடித்து வீடெல்லாம் இழந்து முகாமில் தங்கி இருக்கின்ற மக்கள், நாங்கள் அவர்களோடு தங்க மாட்டோம் என்று சொல்கின்ற இடத்தில் இருக்கிறார்கள். இது தமிழர்களுக்கு மட்டுமல்ல, பொதுவாக இந்து மதத்தினுடைய மிகப் பழமையான ஒரு நோய், இது எல்லோருக்கும் பிடிக்காது. மன வலிமையற்றவர்களைத் தான் தாக்கும். அந்த நோய்க்கான மருந்து பகுத்தறிவு.

இங்கு மட்டுமல்ல. ஈழத்தமிழர்களுடைய மிகக் கொடுமை வாய்ந்தச் சூழலை விவரித்து பல கதைகள் வந்திருக்கின்றன. அன்றைக்கு அவர்கள் அனுபவித்த அந்த இன்னல்களையும், சிக்கல்களையும் விவரிக்கும் நாவல்களையும் படிக்கும் பொழுது அதிலும் சொல்கிறார்கள்.

அகதி முகாம்களில் தங்கி இருக்கும் பொழுது பக்கத்தில் இருப்பவரைப் பார்த்து, “இந்த சாதிப் பயலோட எல்லாம் நான் இங்க வந்து இருக்க வேண்டியிருக்கிறது” என்று அந்த அகதி முகாமில் சொல்கிறார்கள்.

இந்த மன நோய் என்பது எத்தனை ஆண்டு காலம், எத்தனை ஆயிரம் ஆண்டுகளாய் இந்த மனிதர்களைப் பிடித்து வைத்திருக்கிறது. அது எப்படி எந்த இடத்திற்குப் போனாலும் எப்படி ஒரு மனிதனுடைய வாழ்நிலையை, சூழ்நிலையை, திறமையை, ஆற்றலை, வேலை வாய்ப்புகளைத் தட்டிப் பறிக்கிறது. அரசியல் ரீதியாக நாங்கள் இதைச் சலுகையாக வழங்குகிறோம் என்று அரசுகள் சொல்ல நினைத்தால் அந்தச் சலுகை எவ்வளவு காலம் என்று நீதிமன்றம் கேள்வி கேட்கிறது.

இந்த மனநோய் ஒரு மனிதனை ஒட்டு மொத்தமாக கை கால்களை கட்டிப் போட்டுவிட்டு, என்னோடு நீ வந்து தேர்வு எழுத வா என்று போட்டி போட வைக்கிறது. அந்தப் போட்டி சமமானப் போட்டி அல்ல. அந்தப் போட்டியிலே நமக்குத் தெரிந்த நம்முடைய ஆற்றலும், திறமையும் தேர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை. இந்தப் போட்டியை நடத்துகின்றவர் யாரோ, அந்தப் போட்டிக்கு விதியை நிர்ணயிக்கிறவர் யாரோ, அந்தத் தேர்வு நடைபெறுகிற இடத்திற்கு நாம் வந்து சேரவே ரொம்ப நாள் ஆகும்.

இப்பொழுது பரவாயில்லை, கொஞ்சம் படித்து விட்டோம், பரீட்சை எழுதத் தயாராகி விட்டோம். இந்தக் களத்திற்கு வந்து விட்டோம். ஆனால் போட்டிக்கு வந்து இறங்கிவிட்டோம் என்றால் கோல் போஸ்டை மாற்றி வைத்து விடுவார்கள். “நீட் வைப்பார்கள்”, உங்கள் தாய் மொழியில் தேர்வு வைக்க மாட்டார்கள். உங்கள் தாய் மொழியில் கேள்வித் தாள் கொடுத்தால் கேள்வியே தப்புத் தப்பாகக் கொடுப்பார்கள். தப்பாகக் கொடுத்த கேள்விக்கு மற்றவர்களுக்கு மதிப்பெண் வழங்குவார்கள், எங்களுக்கு ஏன் மதிப்பெண் போடவில்லை என்று கேட்டால், போட முடியாது என்று சொல்வதற்கு மிக உச்சத்தில் ஒரு கோர்ட் வைத்திருக்கிறார்கள். இப்படி ஒரு பக்கம் நிர்வாகம், மற்றொரு பக்கம் அரசு, இன்னொரு புறம் நீதிமன்றம். இந்த மூன்றிற்கும் நடுவிலே ஓடி ஓடி களைத்துப் போன ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகத்தினுடைய அடுத்த தலைமுறை, நம்பிக்கை இழக்கின்றச் சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இனிமேல் இந்தியாவில் கல்வி என்பதும், வேலை வாய்ப்பு என்பதும் நமக்கு கிடைக்குமா? சாதாரணமாக அரசுப் பள்ளியிலே, அரசு உதவி பெறும் பள்ளியிலே படித்தவர்களுக்கு உயர்கல்விக்குப் போவதற்கான வாய்ப்பு இருக்கிறதா? இன்றைக்கு உயர் பதவியில் இருக்கின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், உயர்நிலைப் பதவியிலே இருக்கின்றவர்களைக் கேட்டால் அவர்கள் எல்லாம் அரசுப் பள்ளியிலே படித்தவர்களாக இட ஒதுக்கீடு பெற்றவர்களாக இருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டிலே படித்து வந்திருப்பார்கள். ஆனால் இனி இட ஒதுக்கீடு என்பதே கேள்விக் குறியாக மாறக் கூடியச் சூழ்நிலை வந்து விட்டது.

அரசு வேலை இருந்தால் தானே இட ஒதுக்கீடு. இனி அனைத்து அரசுத் துறைகளும் தனியார் மயமாக்கப்படும். இரயில்வே ரெக்ரூமெண்ட் போர்ட் தேர்வு எழுதினால் அதில் யார் தேர்வாகிறார்கள். யார் அதிக மதிப்பெண் பெறுகிறார்கள் என்று பாருங்கள். இனி அரசு வங்கி என்பது இருக்காது.

இப்படி திக்குத் திசை இல்லாமல் எங்கோ முட்டிக் கொண்டு நிற்பதைப் போல நிற்கின்ற இந்தச் சூழலில் நமக்கு இந்த இருட்டில் வழிகாட்டக் கூடியவர்கள் யார் என்றால் இந்த இருட்டை விரட்ட இரண்டே இரண்டு ஒளிக் கதிர்கள் தான் இருக்கின்றன. ஒருவர் தந்தை பெரியார். மற்றொருவர் அண்ணல் அம்பேத்கர்.

இன்றைக்கு, இவ்வளவு விழிப்புற்ற நமக்கு இவ்வளவு தூரம் கூட்டம் போட்டு கூடுகின்ற வாய்ப்பு உள்ள நமக்கு இப்படிப்பட்டத் தடையும் என்ன செய்யப் போகிறோம் என்கின்ற திகைப்பும் வருமானால் பாதையே இல்லாமல் புதர்களாய்க்கிடந்த இந்தச் சமுதாயத்திற்குப் பாதை போட்ட அந்தத் தலைவர்களுடைய போராட்டத்தை இன்றைக்கு நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் எப்படிப்பட்ட எதிரிகளை எதிர் கொண்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட எதிரிகளைச் சந்தித்திருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

இங்கே பேசிய சகோதரி சீதாபாய்பூலே அவர்கள், அவர்களுடைய முன்னோர்களின் வரலாற்றிலே இருந்து பெருமிதத்தோடு பேசினார். புரிகிறதோ இல்லையோ, அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை உங்கள் கை தட்டலில் இருந்து புரிந்து கொள்ள முடியும். அந்த வரலாற்றை யார் நிறுவி இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்னால் ஆங்கிலேயர்கள் காலத்தில் சனாதனிகளோடு போராடுவது என்பது சாதாரண காரியம் இல்லை. இந்த உலகத்தில் பெண்கள் படிப்பது என்பது ஒவ்வொரு நாட்டிலும் பிரச்சனையாகத் தான் இருக்கிறது.

**நம்முடைய தலைவர்கள் ஒருவரை ஒருவர் எப்படி மதித்தார்கள். நமது தலைவர்கள் எப்படி மற்றவர்களுடைய உழைப்பை நம்முடைய சமுதாயத்திற்குப் பயன்படுத்தினார்கள். அவர்களிடம் இருந்து நாம் பாடம் கற்று தந்தை பெரியாரை, அண்ணல் அம்பேத்கர் அவர்களை மக்களிடத்தில் எதிர் எதிராக நிறுத்துகிற சுயநலவாதிகளை அடையாளம் கண்டு ஒரே அணியில் நிற்கின்ற போர் வீரர்களாக மாறினால் தான் நம்மால் சமூகநீதியை வெல்ல முடியும். ஜாதியை, தீண்டாமையை ஒழிக்க முடியும்.**

பெண்கள் என்ன படிக்கலாம் என்பதை ஆண்கள் தான் தீர்மானம் செய்கிறார்கள். பெண்கள் மருத்துவராகப் படிக்க வந்தால் அவர்கள் பிரசவ மருத்துவராகத் தான் போக வேண்டும். அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவராக வர வேண்டும் என்றால் அதற்கான படிப்பும், படிப்பிற்கான வாய்ப்பும் பெண்களுக்குக் கிடையாது (என்பது தான் நம் சமூகத்தின் சிந்தனை). பெண் மருத்துவர்கள் பிரசவம் பார்க்கின்றவராக இருக்கலாமே தவிர அறுவை சிகிச்சை செய்கின்றவர்களாக இருக்க முடியாது.

1800-களில் இந்த நாட்டில், இந்த மும்பை மாநகரத்தில் பெண்களுக்கான பள்ளிக் கூடத்தை திறந்த சாவித்திரி பாய்பூலே அவர்கள் தான் பெண்களுடைய முதல் ஆசிரியர். இனி ஆசிரியர் தினம் என்றால் அருடைய பெயரைத் தான் சொல்ல வேண்டும். ஆசிரியர் தினம் என்பது சாவித்திரி பாய்பூலே என்பவருடைய நாளாகச் சொல்லப்பட வேண்டும். உலகத்தில் பெண் உரிமை என்று சொல்ல வேண்டுமானால், பெண்கள் அடிமைகளாக இருக்கிறார்கள் என்ற கருத்தில் இருந்து தான் தொடங்க வேண்டும். ஆனால், இந்தியாவில் பெண்ணுரிமையைப் பற்றிப் பேச வேண்டுமென்றால், வேத காலத்தில் பெண்கள் மிகவும் மரியாதையுடன் நடத்தப்பட்டனர் என்று ஆரம்பிப்பார்கள். வேத காலத்தில் பெண்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டது எனத் தொடங்குவார்கள். கல்வி உரிமை என்றால் நமது ஊரில் சொல்வார்கள் வெள்ளைக்காரர்கள் வந்து தான் நமது கல்வி கெட்டு விட்டது. அதற்கு முன்னால் மிகவும் சிறப்பாக இருந்தது என்பார்கள். என்ன சிறப்பாக இருந்தது? குருகுலக் கல்வியாக இருந்தது. குருகுலக்கல்வியில் யார் படித்தார்கள்? கற்றுக் கொடுத்தவர், கற்றுக் கொண்டவர் என இருவருடையப் படத்தை போடுகிறார்கள். The Ancinent Education இதில் இரண்டு பேரும் குடுமி வைத்துக் கொண்டு பூணூல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு பெயர் குருகுலக் கல்வி. இந்த குருகுலக் கல்வியில் நமக்கு எங்கே இடம் இருந்தது?

முதன் முதலாகத் திண்ணைப் பள்ளி தொடங்கினார்கள். பிறகு தான் அந்தத் திண்ணைப் பள்ளியைத் தெருவிற்குக் கொண்டு வருகிறார்கள். அவ்வாறான திண்ணைப் பள்ளி ஆசிரியர் வீட்டில் தான் இருக்கும். ஆசிரியர் ஏன் பள்ளியை திண்ணையில் நடத்தினார். வீட்டினுள் நடத்தியிருக்கலாமே? ஏனென்றால் அவர் மற்றவர்கள் வீட்டிற்குள் விட மாட்டார்கள் (பணக்காரர்களாக இருந்தாலும் கூட) திண்ணையில் வைத்துத் தான் சொல்லிக் கொடுப்பார். அந்த திண்ணைப் பள்ளியை தெருவிற்கு கொண்டு வந்து, பொது வீதிக்கு கொண்டு வந்து அனைவருக்குமான பள்ளிக்கூடம் தொடங்கியது என்பது ஆங்கிலேயர்களின் காலத்தில் தான் நடந்தது.

அன்றைக்குத் தொடங்கப்பட்ட அந்தக் கல்விப் போராட்டம் கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய தெருக்கதவை, ஊர்க் கதவைத் தட்டுவதற்கு இவ்வளவு ஆண்டுகள் ஆகியிருக்கிறது. இப்படிப்பட்டச் சூழலில் நம்முடைய டாக்டர். அம்பேத்கர் அவர்களுடைய கல்விப் பட்டியலைப் பார்க்கும் போது எத்தனைப் பட்டங்கள். பட்டங்களைப் பட்டியல் போடுவது என்பது இன்றைக்கு அவ்வளவு எளிதல்ல. அவர் கற்ற கல்வியினுடைய பட்டியலைப் படித்துப் பார்ப்பதற்குக் கூட பல பேருக்குத் தகுதி இல்லை. ஆனால் இந்தியாவின் சிறந்த கல்வியாளர்களில் ஒருவராகக் கூட நாம் அவரைச் சொல்வது இல்லை. சிறந்த தத்துவம் படித்தவர். மானுடவியல் படித்தவர். மானுடவியலை ஆராய்ச்சி செய்தவர் என்று சொல்வதில்லை.

அவருடைய அறிவும், திறமையும், அவருடைய முன்னேற்றத்திற்கு மிகவும் பயன்பட்டிருக்குமானால் அவரின் இறுதிக் காலம் வசதியாக இருந்திருக்கும். நல்ல நல்ல அமைச்சர் பதவிகளில் நிம்மதியாக இருந்திருக்க முடியும். அவருக்குப் பதவியும் நிம்மதியாக இல்லை. அவர் தொண்டு செய்த அந்த வாழ்க்கையிலும் வெற்றி பெற்றதற்கான மகிழ்ச்சியும் வரவில்லை. ஆனால் அவர் சாதித்தது என்ன? என்று பார்த்தால், இன்றைக்கு வரைக்கும் இந்த இந்தியா இந்தியாவாக இருப்பதற்கான காரணம் அவர் உருவாக்கிய சட்டம் தான். யாருக்காக? இந்த பிரிவினருக்காக, அந்த பிரிவினருக்காக என்று இல்லாமல் இந்திய மக்களுக்காக, மக்களுக்கு இரண்டு சட்டப் பிரச்சனைகள் வரும். ஜாதி என்பது என்ன? தீண்டாமை என்பது என்ன? இவை இரண்டையும் ஒழிப்பதற்கு சமூக நீதி என்பது என்ன? என்பவைகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு வேண்டும். அந்த அரசியல் சாசனம் எழுதப்படும் பொழுது வேறு யாராவது அங்கு இருந்திருந்தால் அவர்களுக்கு இது தோன்றுமா?

இந்த ஊரில் ஒரு மனிதனை ஒரு தெருவிற்குள் நடக்க விடமாட்டார்கள். தண்ணீர் எடுக்க விடமாட்டார்கள். கோவிலிற்குள் விடமாட்டார்கள். பள்ளிக்கூடத்தில் விடமாட்டார்கள். அதனால் அதை அரசியல் சட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று சொல்வதற்கு அந்த குழுவில் இருந்த வேறு யாருக்காவது தோன்றியிருக்குமா? அவர் அந்த இடத்தில் இருந்ததினால் நமக்கு ஆர்டிகிள் 14 (அரசியல் சாசனத்தின் உறுப்பு 14) கிடைத்தது. இன்று எந்த கோர்ட்டில் நின்று பேசினாலும், எதையுமே பேசத் தெரியவில்லை என்றாலும், "அய்யா இது அரசியல் சாசனப் பிரிவு 14-க்கு எதிரானது என்று சொல்லி அந்த வழக்கை ஒரு வழக்கறிஞரால் வெற்றி பெற வைக்க



■ வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும். – *தந்தை பெரியார்*



முடியும் என்று சொன்னால் அது எப்படி நடந்தது, எந்த இரண்டு பேரையும் நீங்கள் சட்டத்தின் முன்னால் சமமாக நடத்த வேண்டும், அவ்வளவு தான் இருக்க வேண்டும் சட்டத்தில். ஆனால் அந்த சட்டப் பிரிவில் என்ன சொல்கிறது என்றால் ஒருவருடைய பிறப்பால், ஜாதியால், மொழியால், மதத்தால், நிறத்தால், ஆண் பெண் என்கின்ற பேதத்தால் அவர்களை பொது வீதிக்கோ, பள்ளிக்கோ, நீர்நிலைக்கோ இன்னும் எந்தப் பொதுவான பயன்பாட்டிற்கும் வராமல் தடுக்கக் கூடாது என்று சட்டம் சொல்கிறது. மற்ற நாடுகளில் எல்லாரும் சமம் என்று சொல்லி சட்டம், அதோடு நின்று விடுகிறது. ஆனால் நம் நாட்டு அரசியல் சட்டம் தான் நீங்கள் சமம் என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் இவ்வாறெல்லாம் செய்யக் கூடாது என்று அர்த்தம் என்று சொல்கிறது.

ஆனால், இதைக் கொண்டு தான் இந்தியாவில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக முதன் முதலில் செண்பகம் துரைராஜன் என்பவருக்காக வழக்கு தொடுத்த, அந்த அரசியல் சாசனத்தை எழுதியவர்களில் ஒருவரான அல்லாடி கிருஷ்ணசாமி அவர்கள் இதே அரசியல் சாசனத்தின் 14-ஆம் பிரிவைச் சொல்லி, ஒருவர் தாழ்த்தப்பட்டவராகப் பிறந்தால் அவருக்குக் குறைந்த மார்க் வாங்கினால் கூட மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து விடுகிறது. நான் உயர்ந்த சாதியில் பிறந்தேன். அதிக மதிப்பெண் வாங்கியும் எனக்கு இடம் கிடைக்கவில்லை. இந்த சட்டம் சரியா? தவறா? என கம்யூனல் ஜி.ஓ.வை எதிர்த்து வழக்கு போட்டு உச்ச நீதிமன்றம் வரை வாதாடினார், அவரால் வெற்றியும் பெற முடிந்தது.

நமக்காக உருவான கம்யூனல் ஜி.ஓ. நமக்காக டாக்டர். அம்பேத்கர் அவர்கள் உருவாக்கிய சட்டத்தைக் காண்பித்துத் தகர்க்கப்பட்டது. சட்டத்தை உருவாக்கியவர் அவர். அதற்கு முன்னர் தென்னிந்தியாவில் மெட்ராஸ் ராஜதானியில் இருந்த கம்யூனல் ஜி.ஓ. என்கிற சட்டம் இந்த அரசியல் சட்டத்தைக் காண்பித்துத் தகர்க்கப்பட்டது. இனி கம்யூனல் ஜி.ஓ. மூலம் இட ஒதுக்கீடு கிடையாது, என்று அந்த இடத்தில் அருகில் சட்டம் நமக்கு எதிராக நிறுத்தப்பட்ட போது அந்த இடத்தை எப்படி அடைவது என்பதற்கான போராட்டத்தை மக்கள் மன்றத்தில் நடத்தியவர் தந்தை பெரியார்.மக்களுக்காகத் தான் சட்டம் இந்த மக்களுக்கான திட்டத்திற்கு சட்டம் தடையாக இருக்குமானால் நாங்கள் அந்தச் சட்டத்தைக் கொளுத்துவோம் என்று தந்தை பெரியார் தெருவில் இறங்கி மக்கள் மன்றத்திலே போராடிய போது அதே சட்டத்தில், இன்னொரு உட்பிரிவு சேர்க்கப்பட்டது. அது தான் இந்தியாவினுடைய முதல் சட்ட திருத்தம் என்ற பெயரைப் பெற்றது.

இந்தச் சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்து இன்றைக்கு வரை நடத்திக் கொண்டே இருக்கின்றோம். இப்படியெல்லாம் சட்டம் போட்டு போராடி படித்து வரும் பொழுது, நீங்கள் மாநிலக் கல்லூரிகள் வரை வர முடியும். இதைத் தவிர இந்தியாவில் நிறைய முக்கியமான படிப்பு மிகப் பெரிய கல்வி நிறுவனங்கள் வைத்திருக்கும் ஐ.ஐ.டி, ஏ.ஐ.எம்.எம்.எஸ், *(IIT, AIMMS)* போன்ற கல்வி நிறுவனங்களுக்கு பத்து கல்லூரிக்குத் தேவையானப் பணத்தை அந்த கல்லூரிக்கு அரசு செலுத்த வேண்டும். அங்கு நாம் சென்று படிக்க முடியாது. ஏன்? முடியாத படி வடிகட்டும் ஏற்பாடுகள் இருப்பதால் முடியாது. அதையும் மீறி அங்கு படிக்கச் சென்றால் நம் மாணவர்கள் ஆண்டுக்கு ஒருவர் தற்கொலைக்குத் தள்ளப்படுவார்கள். தற்கொலை இல்லையென்றால் வேறு மாதிரியான கொலை நடக்கும். அவர் போராட்டம் நடத்தி சாகத் தூண்டப்படுகிறாரா? காரணமில்லாமல் தற்கொலைக்குத் தள்ளப்பட்டாரா? என்பது நமக்குத் தெரியாது. ஆனால் ஆண்டுக்கு ஒருவர் மத்திய பல்கலைக் கழகத்தில் மர்மமான முறையில் செத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அடுத்ததாக, மனிதனுக்கு நோக்கம் சாதாரணமான வாழ்க்கை, காதல், திருமணம், இன்றைய சினிமாவிலும் காதல் கதையைப் படமாக எடுத்தால் அதுவும் 18 அல்லது 16 வயதில் காதலித்தால் படம் பிச்சிக்கிட்டு ஓடும். 18 வயதிலும் 16 வயதிலும் காதலிக்கக் கூடாது என்பது தான் உண்மை. பெண்ணோ அல்லது ஆணோ காதலிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஒரு குறைந்த அளவாவது படிப்பு இருக்க வேண்டும், வேலை இருக்க வேண்டும், பொருளாதாரப் பாதுகாப்பு இருக்க வேண்டும், திருமணம் செய்து கொண்டு தைரியமாக வாழ வேண்டும், வாழ்வதற்கான சூழ்நிலை இருக்க வேண்டும், இதெல்லாம் இல்லையென்றால் என்ன செய்யலாம்? அறிவுள்ளவர்கள், அந்த இரண்டு பேரையும் தகுதி உள்ளவர்களாக ஆக்குவதற்கு யோசிக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கின்ற போக்கு காதல் திருமணம் செய்து கொண்டு இரண்டு பேர் நிம்மதியாக வாழ முடியாது என்பது அல்ல. வாழவே முடியாது, வாழ விடக் கூடாது என்பதாக இருக்கிறது.

மாதத்திற்கு ஒன்றாக வெளிவந்து கொண்டிருந்த ஒரு செய்திகள் இன்றைக்கு ஒரே மாதத்தில் இரண்டு ஆணவக் கொலைகள் நடந்துள்ளன. மற்ற பகுதிகளிலும் நடப்பது உண்டு என்று நமக்குச் செய்தி மூலம் தெரிகிறது. ஆனால் தமிழ்நாட்டில் நடக்கிறது என்பது தான் நாம் கவலைப்பட வேண்டிய ஒரு செய்தி. மனிதர்கள் எப்படி மாறிக்கொண்டிருக்கிறார்கள்? மதம் என்ன, ஜாதி என்பது மனிதனுக்கு ஏதோ ஒரு சமூக அந்தஸ்து, உறவு என்பது மட்டுமல்ல. இன்றைக்கு மாறுகின்ற சூழ்நிலை எப்படி

இருக்கிறது என்றால் 1990-91களில் இரண்டு வழக்குகளை நான் நடத்தியிருந்தேன். இரண்டு வழக்கிலும் அந்தப் பெண்கள் வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள். இரண்டு பட்டியல் இனத்தைச் சேர்ந்த இளைஞர்களை விரும்பித் திருமணம் செய்து கொண்டார்கள். இரண்டு பேருக்குமே அவர்கள் பெற்றோர் வழக்கு போட்டார்கள். அந்த பெண்கள் நீதிமன்றத்திற்கு வந்த போது கோர்ட்டில் கூப்பிட்டுக்கேட்டார்கள். "என்னம்மா சொல்றீங்க" என்று கேட்டதற்கு "அவரைத் திருமணம் செய்து கொண்டேன். அவரோடு தான் வாழ்வேன்" என்றனர். நீதிபதி அனுப்பி வைத்தார்கள். "அந்தப் பெண் அப்படிச் சொல்லும் பொழுது நாங்கள் என்ன செய்ய முடியும். அந்தப் பெண்ணிற்கும் எங்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. முடிந்தால் அந்தப் பெண் காதில் கழுத்தில் போட்டிருக்கும் நகையை வாங்கிக் கொடுங்கள். எங்களிடம் சொத்து கேட்டு வரமாட்டோம் என எழுதிக்கொடுக்கச் சொல்லுங்கள்" என்று பெற்றோர் கூறினர். அதன் பின்னர் சில நாட்களுக்குப்பின் சேர்ந்து கொண்டவர்களும் இருக்கிறார்கள். சேர்த்துக் கொண்ட பெற்றோர்களும் இருக்கிறார்கள். இது 90-களின் தொடக்கம்.

ஆனால் கடந்த 10, 15 ஆண்டுகளில் இந்த நிலைமை எப்படி மாற்றப்பட்டது. அப்படியே ஒரு அப்பாவோ, அம்மாவோ என் மகள் போய்விட்டாள், பரவாயில்லை என்று சொன்னால் கூட மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் நீங்கள் இப்படி விடலாமா? இப்படி விட்டா நம்ம ஜாதிக்குச் சரியாகுமா? என்ற அந்தப் பெண்ணை பெற்றவர்களுக்கு மன உளைச்சலைக் கொடுத்து ஒன்று அவர்களாக அந்தப் பெண்ணையும், இளைஞனையும் கொலை செய்ய வேண்டும் அல்லது நாங்கள் செய்வோம் என்று யார் சொல்வார்கள் என்றால், அந்தப் பெண்ணிற்கு சம்மந்தமே இல்லாத ஒருவன், அந்த ஜாதியில் பிறந்தவன் என்ற உரிமைக்குரியவன் என்று தைரியமாகச் சொல்கிறான்.

திருநெல்வேலியில் தன் சகோதரி வேறு ஜாதியைச் சேர்ந்த ஒருவரை விரும்பினார் என்று அறிந்து 6 பேர் சேர்ந்து ஒரு இளைஞனைக் கொலை செய்துள்ளனர். அந்த 6 பேரும் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும். ஆனால் அவனுடைய சகோதரி வேறு ஜாதியைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்யக் கூடாது என்பது மட்டும் தெரிந்திருக்கின்றது. அதற்காகக் கொலை செய்யலாம் என்கிற தைரியம் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் வாழ்க்கை இனி என்னவாகும் என்பதைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. இப்படிப்பட்ட ஒரு கொடிய நோய் எப்படிப் பரவுகிறது என்பதையும் சிந்திக்க வேண்டியது நமது கடமை.

இட ஒதுக்கீடு அதற்கு சட்ட ரீதியான போராட்டம் அரசு நிறுவனங்கள் தனியார் மயமாகின்றன. ஆகவே, தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு வேண்டும் என்கிற போராட்டம் அதே நேரத்தில் சமூகத்தில் மக்களுடைய மனநிலை பிறழ்ந்து கொண்டு போகிறது. "இருட்டறையில் உள்ளதடா உலகம் ஜாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே" (புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்) என்று பேசிய தலைமுறையிலிருந்து மாறி ஜாதி என்பது எங்கள் பெருமை என்று உயர் கல்வி நிறுவனங்களில் படித்தவர்கள் அவர்கள் பெயருக்குப் பின்னால் ஜாதியை அடையாளமாகப் போட்டுக் கொள்வதற்கான பிரச்சாரம் செய்யப்படுகிறது. இது தான் புயல் முகாம் வரைக்கும் கொண்டு போய் அவனைப் பிரித்து உட்காரச் சொல்கிறது. இப்படிப்பட்டச்சூழலில் நாம் வெளிப்படையாக அடைகின்ற வெற்றிகள் மட்டும் போதாது. சமூகத்தில் தொடர்ந்து பிரச்சாரம். பிரச்சாரம்.., பிரச்சாரம்..., எல்லோரும் கேட்பார்கள். தந்தை பெரியார் என்ன செய்தார் என்று பெரியார் இதைத்தான் பேசினார் பேசிக்கொண்டே இருந்தார். பெரியார் சாகும் வரை பேசிக் கொண்டிருந்தார். நாமும் மக்களிடத்தில் பேச வேண்டும். பேசிக்கொண்டே தான் இருக்க வேண்டும்.

இது சண்டைப் போட்டு தீரும் பிரச்சனை அல்ல. மக்களிடத்திலே தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டி இருக்கிறது. அரசுகளோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டியது. நீதிமன்றங்களோடு போராட வேண்டியது. நீதி மன்றங்களில் நமக்கான பிரதிநிதிகள் இருப்பதற்கு போராட வேண்டியிருக்கிறது.

கடைசியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன். சகோதரி புதிய மாதவி அவர்கள் நிறைய என்னைப் பற்றிப் பாராட்டிச் சொன்னார்கள். ஆனால் இந்தியா முழுக்க இருக்கின்ற பெண்கள். எழுத்தாளர்கள், கவிஞர்கள் வியந்து பாராட்டுகின்ற சிறந்த ஆளுமையான கவிஞர் புதிய மாதவி அவர்கள் என்னைப் பாராட்டியதற்கு நன்றி.

இன்றைக்கு இருக்கக் கூடிய நேர நெருக்கடியில் ஒரே ஒரு கருத்தினை மட்டும் தான் இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் நண்பர்களே, உச்சநீதிமன்றம் தினம் தினம் ஒரு தீர்ப்பை சொல்கிறது. ஆனால் அந்தத் தீர்ப்பில் எதுவுமே நமக்குச் சாதகமானது கிடையாது. அவர்கள் யாரைப் பற்றிக் கவலைப்படுவார்கள். உயர் ஜாதி மாணவர்களுக்கு இரண்டு சீட்டு போய் விட்டால் கவலைப்படுவார்கள். ஆனால் இத்தனையாயிரம் மாணவர்கள் இந்த தேர்வுகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? ஒரே வார்த்தையில் சொல்கிறார்கள். ஏன் அந்த உச்சநீதிமன்றத்திலே இருக்கும் இத்தனை நீதிபதிகளில் ஒருவர் பிற்படுத்தப்பட்டவர். பிற்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கைக்கு இருப்பது ஒரே ஒருவர். தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதுவும் இல்லை. இப்படி ஒரு நீதிமன்றம் இருக்கிறது. அந்த நீதிமன்றத்தின் தலைமையில் தான் மாநிலங்களுக்கு நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் தான் மக்களுக்கு கடவுள்களாக இருந்து நமது சட்ட உரிமைகளை எல்லாம் காப்பாற்றுகிறார்கள்.

அப்படியென்றால் எத்தனை இடத்தில் நம்முடைய போராட்டங்கள் நடக்க வேண்டுமாய் இருக்கிறது என்பதை பொறுப்போடு உணர்ந்து தோழர்கள் செயல்பட வேண்டும்.

நம்முடைய தலைவர்கள் ஒருவரை ஒருவர் எப்படி மதித்தார்கள். நமது தலைவர்கள் எப்படி மற்றவர்களுடைய உழைப்பை நம்முடைய சமுதாயத்திற்குப் பயன்படுத்தினார்கள். அவர்களிடம் இருந்து நாம் பாடம் கற்று தந்தை பெரியாரை, அண்ணல் அம்பேத்கர் அவர்களை மக்களிடத்தில் எதிர் எதிராக நிறுத்துகிற சுயநலவாதிகளை அடையாளம் கண்டு ஒரே அணியில் நிற்கின்ற போர் வீரர்களாக மாறினால் தான் நம்மால் சமூகநீதியை வெல்ல முடியும். ஜாதியை, தீண்டாமையை ஒழிக்க முடியும்.

நன்றி வணக்கம். ●



▪ ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும். - *தந்தை பெரியார்*

# ‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’

**மொத்தம்** : அய்வர்

**கருப்பொருள்** : கேள்விகள், விவாத மேடை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழிச் சிறப்பு

**பங்குபெறுவோர்** : புத்தன், யாழினி, ஸ்ரீராம், அக்ஷரா

**நெறியாளர்** : திருவள்ளுவர்

**தலைப்பு** : தொன்மையான மொழி தமிழா? சமஸ்கிருதமா?

**உடை** : திருவள்ளுவர் with coat suit

**உடை நிறம்** : புத்தன் - கருப்பு உடை

யாழினி - வெளிர் சிவப்பு உடை

ஸ்ரீராம் - காவி உடை

அக்ஷரா - மஞ்சள் உடை

**திருவள்ளுவர் :** *அனைவருக்கும் வணக்கம்! இது தமிழர் தொலைக்காட்சி வழங்கும், "மெய்ப்பொருள் காண்பது அறிவு" நிகழ்ச்சி. இந்த நிகழ்வில் ஓர் அதிமுக்கியமான தலைப்பைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். இது பரபரப்பான சூடான விவாதமாக இருக்கும் என்பதில் எள்ளளவும் அய்யம் இல்லை. ஆம்! நாம்விவாதிக்க இருப்பது, நம் ‘இனம்’ சார்ந்தது, நம் ‘மொழி’ சார்ந்தது, நம் ‘பண்பாடு’ சார்ந்தது, ‘அறிவியல்’ சார்ந்தது. நாம் விவாதிக்க இருக்கும், அந்த அதி முக்கிய தலைப்பு, "தொன்மையான மொழி? தமிழா? ஜம்ஷ்ஃகிரதமா? மன்னிக்கவும் - சமஸ்கிருதமா? அறிவியல் ஆதாரங்கள் என்ன?" விவாதிப்போம்! நம்மோடு நான்கு ஆளுமைகள் இணைகிறார்கள். திரு. புத்தன், திருமிகு.யாழினி, திரு.ஸ்ரீராம், திருமிகு.அக்ஷரா*

*(திருவள்ளுவர் அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கிறார். அனைவரும் திருவள்ளுவருக்கு வணக்கம் தெரிவிக்கின்றனர்)*

**திருவள்ளுவர் :** *முதலில் திரு.ஸ்ரீராமிடம் கேட்போம், தொன்மையான மொழி என்று நீங்க எதை கருதுறீங்க? ஏன்?*

**ஸ்ரீராம் :** *நீங்க பாத்தேள்னா, இந்த லோகத்திலேயே பேஷான பாஷைன்னாலும் தொன்மையான பாஷைன்னாலும்...... சமஸ்கிருதம்தான். ஏன்னா சமஸ்கிருதம் பல்லாயிரம் பல்லாயிரம் யுகமா இருக்கு. கடவுள் லோகத்த படச்ச, நெக்ஸ்ட் செகண்ட் சமஸ்கிருதத்த படச்சுட்டார். அதனாலதான், சமஸ்கிருதம் தேவ பாஷையாக்கும். ஆங்..புரிஞ்சுதோன்னோ?*

**திருவள்ளுவர் :** *அடுத்து, திருமிகு.யாழினியிடம் கேட்போம். உங்க கருத்து என்ன யாழினி? தொன்மையான மொழி என்று நீங்க எதை கருதுறீங்க? ஏன்?*

**யாழினி :** *தமிழ்தான்னு நான் நெனக்கிறேன். கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மொழி தமிழ். தமிழ் கண்டிப்பா தேவ பாஷையெல்லாம் இல்ல. ஆனாலும், நிச்சயமாக மக்களின் மொழி.*

**திருவள்ளுவர் :** *அடுத்து, திருமிகு.அக்ஷராவிடம் கேட்போம். அக்ஷரா, உங்கள் கருத்து என்ன? தொன்மையான மொழின்னு நீங்க எதை கருதுறீங்க? ஏன்?*


**அக்ஷரா :** *லோகம் சிருஷ்டிக்கப் பட்டவே, சமஸ்கிருதம் படைக்கப் பட்டதா பெரியவா...... சொல்றா. அதனால தொன்மையான மொழி சமஸ்கிருதமே.*

**திருவள்ளுவர் :** *அடுத்து, திரு.புத்தனிடம் கேட்போம். புத்தன், நீங்க சொல்லுங்க. உங்க கருத்து என்ன?*

**புத்தன் :** *நிச்சயம் தமிழ்தான். ஏன்னா உலகம்ன்னு ஒண்ணு உருவாகி, ஒரு செல் உயிரி உருவாகி, பரிணாம வளர்ச்சியில் உயிர் உருவாகி, பின் மனிதர் உருவாகிய பின்னர்; மனிதரிடையே ஒலிகள் பரிமாற, ஒலிகள் இயற்கையாய் பக்குவம் அடைந்து, பரிணாமம் அடைந்த மொழி ’தமிழ்’ என்று மொழிச்சான்றோர் கூறுகின்றனர். ஆகையால் தமிழ் மொழியே தொன்மையான மொழி.*

**திருவள்ளுவர் :** *மிகவும் சுவாரசியமான வாதங்களை எடுத்து வைத்துள்ளார்கள் முதல் சுற்றில். விவாதத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வோம். சரி, உணர்வின் அடிப்படையில் கருத்துகளைப் பகிர்ந்தீர்கள். அடுத்து மொழியியலில் சொல்லாய்வைச் சார்ந்து சில கருத்தை இந்த சுற்றில் கூறுங்கள். சொல்லுங்கள் திரு.ஸ்ரீராம்*

**ஸ்ரீராம் :** *உதாரணமாக “லோகம்” அப்டிங்கற சமஸ்கிருத சொல்லில் இருந்தே “உலகம்” அப்படிங்கற தமிழ் சொல்*



ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து, லண்டன்

வந்தது. மறுக்க முடியுமா?

**புத்தன் :** ஏன் முடியாது? "லோகம்" அப்டிங்கற சமஸ்கிருத சொல்லுக்கு வேர் சொல் என்ன ?

**ஸ்ரீராம் :** அது வந்து வந்து வந்து ........ (தலையை சொறிகிறார் ஸ்ரீராம்)

**புத்தன் :** அது என்னங்க வந்து போயின்னு இ..........முவை? தமிழில் "உலகம்" எனும் சொல்லுக்கு "உல்", "உலம்" அப்படின்னு வேர்ச் சொற்கள் இருக்கின்றன. சமஸ்கிருதத்தில் இருக்கிறதா? இல்லையே!

உல் - உலம் = உருட்சி, திரட்சி, உருண்ட கல்.

உலக்கை = உருண்டு நீண்ட பெருந்தடி.

உலண்டு = உருண்டு நீண்ட புழு.

உலம் - உலவு. உலவுதல் = சுற்றுதல், திரிதல்.

**ஸ்ரீராம் :** அது.... அது.... (முழிக்கிறார்)

**யாழினி :** அது சரி "நாவாய்" அப்படிங்கிற தமிழ்ச் சொல் சமஸ்கிருத சொல்லா தமிழ் சொல்லா ?

**அக்ஷரா :** சந்தேகம் என்ன? சமஸ்கிருத சொல்தான். சமஸ்கிருத மொழியிலேந்துதான் தமிழ் மொழியே பிறந்தது. அப்ப நாவாய் சமஸ்கிருத சொல்தானே! (தலையை குதூகலத்தில் ஆட்டுகிறார்)

**யாழினி :** அதான் இல்லை. சமஸ்கிருத கலாச்சாரத்தில் கடல் பிரயாணம் செல்வதே பாவம். அதாவது 'தோஷம்'. ஆனால் தமிழர்கள் கடலோடிகள். கப்பலில் கடல் கடந்து வாணிபம் செய்துள்ளார்கள். கடல் கடந்து நாடுகளை வாகைச் சூடி உள்ளனர். கட்டுமரம் அப்படிங்கற சொல்லிலே இருந்தே *catamaran* அப்படிங்கற ஆங்கில சொல்லே வந்துள்ளது. 'நாவாய்' என்கிற தமிழ் சொல்லில் இருந்தே *NAVY* என்று ஆங்கிலத்தில் வந்துள்ளது. இதற்கு என்ன சொல்கிறீர்? (கை விரல்களை விரித்து கேள்வி கேட்கிறார்)

**திருவள்ளுவர் :** பலே பலே!! விவாதம் சூடு பிடிக்கிறது. சரி தொல்லியற் துறையையும் தொட்டு பார்ப்போம். தொல்லியற் ஆதாரம் சமஸ்கிருதம் மற்றும் தமிழில் எவ்வளவு இருக்கிறது?

**ஸ்ரீராம் :** சமஸ்கிருத இலக்கியங்கள் மிகத் தொன்மையானவை. பல செப்பேடுகள் கல்வெட்டுகள் சமஸ்கிருதத்தில் இருப்பதாக சொல்வதாக நம்புவதாக கருதப்படுகிறது?

**புத்தன் :** யார் கூறினார்கள்? (கையால் கேள்வி கேட்கிறார்)

**ஸ்ரீராம் :** அது..... வந்து.... வந்து (முழித்துக் கொண்டே) யாரோ சொன்னாங்க?

**புத்தன் :** இந்தியாவில் இது வரை கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் கல்வெட்டுகளில் 60 விழுக்காட்டுக்கும் மேலான கல்வெட்டுகள் தமிழ்க் கல்வெட்டுகள் என இந்திய அரசாங்கத்தின் தொல்லியல் துறையே சொல்கிறது. அப்படின்னா, தமிழ் மொழியின் தொல்லியல் சான்று எவ்வளவோ இருக்கிறது என்பது இதிலேந்து தெரியலியா? அது மட்டுமா!

**திருவள்ளுவர் :** ஓ! இன்னும் தொல்லியல் சான்றுகள் வேறு இருக்கிறதா?

**புத்தன் :** ஆமாம். உலகத்தின் தலை சிறந்த ஆராய்ச்சியாளர் திரு. அஸ்கோ பார்ப்போலா (*Asko Parpola*), சிந்து சமவெளி நாகரிகம் திராவிடர் (தமிழர்) நாகரிகம் என்றும், சிந்து சமவெளி நாகரிக எழுத்துகள், திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழியான தமிழ்தான் என்றும் அறிவியல் சான்றுகளுடன் நிறுவி உள்ளார். அது மட்டுமா? தமிழ் ஈழத்தில் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள ஆதிச்சநல்லூரில், பூம்புகாரில் ஏராளமான அகழாய்வுகள் தமிழ் மொழிச் சான்றைத் தாங்கி நிற்கிறது. மிக மிக சமீபத்தில் கீழடி எனும் ஓர் ஊரையே அகழ்வாய்வில் கண்டு பிடித்துள்ளனர். இவ்வாறு சமஸ்கிருதச் சான்றுகள் உள்ள ஊர்கள் அகழ்வாய்வில் எங்காவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா? அதற்கு அறிவியல் சான்றுகள் உள்ளதா?



**ஸ்ரீராம் :** அஅஅஅ..... து ( தடுமாறுகிறார்)

**அக்ஷரா :** சமஸ்கிருதத்தில் பல சுவையான இலக்கிய சாரம் இருக்கிறது.

**யாழினி :** எப்படிப்பட்ட இலக்கிய சாரம்? பிறப்பால் ஒருவர் மேல், ஒருவர் கீழ் என்பதெல்லாம் ஒரு இலக்கியமா? தமிழிலே இலக்கிய சாரம் என்றால் எவ்வளவோ இருக்கிறது. எடுத்து காட்டுக்கு, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' , 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' போன்ற இலக்கிய சுவை மற்றும், மானுட மாண்புகள் நிறைந்து உள்ளன. இவற்றிற்கு இணையான அல்லது இதைக்காட்டிலும் சிறந்த கருத்துகள் ஏதாவது சமஸ்கிருதத்தில் உள்ளனவா? வேதத்தில்தான் இருக்கிறதா? மனு ஸ்மிருதியில்தான் இருக்கிறதா? அல்லது இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதையிலாவது இருக்கிறதா? சொல்லுங்கள்!

**அக்ஷரா :** அ......து, அ......து (விழிக்கிறார். யோசிக்கிறார்)

**ஸ்ரீராம் :** அது சரி. அதெல்லாம் இருக்கட்டும் ... பெரும்பாலான தமிழர்கள், தமிழ் தமிழ்ன்னு வாய் கிழிய பேசறாங்களே, ஆனா, ஏன் அவங்க வாழ்வியல் சடங்கு எல்லாத்தையும், அதாவது திருமணச் சடங்கு, வீட்டு மனை பூஜை, கிரகப்பிரவேச பூஜை, கோவிலில் பூஜை, சொல்லப் போனா, ஏன் இறந்த பிறகு, திதி கொடுப்பதையும் தாய்மொழி தமிழிலா செய்கிறார்கள்? சமஸ்கிருதத்தில் தானே செய்கிறார்கள்? அப்ப தமிழ விட சமஸ்கிருதத்துக்கு தானே மதிப்பு கொடுக்கறாங்க.

**புத்தன் :** அது என்னவோ உண்மைதான். அது சில தமிழரின் அறியாமை. அறியாமை நிலையானது அல்ல. 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று உணரும் போதும், 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பதையும் உணரும் போது, நிலைமை மாறும், தன்மானமும் பகுத்தறிவும் நிறைந்த மகிழ்ச்சியான தமிழ்ச் சமூகம் நிச்சயம் உருவாகும்.

புத்தன் + யாழினி : இது உறுதி! உறுதி !!! (உரத்த குரலில்)

**திருவள்ளுவர் :** அருமை! நல்ல ஆரோக்கியமான உணர்வு பூர்வமான, ஆழமான அறிவியல் சான்றுகளுடன் கூடிய விவாதம். தமிழ் செம்மொழி ஆகும். அப்படிப்பட்ட உயர்தனி செம்மொழி பற்றி பலச் செய்திகளையும், பல்வேறு பார்வைகளையும் அறிவியல் துணை கொண்டும், அனுபவம் துணை கொண்டும் பார்த்தோம். மீண்டும் இன்னொரு அமர்வில் வேறு ஒரு தலைப்பில் விவாதிப்போம்.

இது, "மெய்ப்பொருள் பொருள் காண்பது அறிவு".

எட்டு திக்கும் எட்டட்டும் பகுத்தறிவு !

**அனைவரும் உரத்தக் குரலில்:** வாழ்க தமிழ்! பெறுக தன்மானம்!! வளர்க பகுத்தறிவு !!! ●



▪ விதியை நம்பி மதியை இழக்காதே. – தந்தை பெரியார்



# வாழ்தல் இனிது

உயிர் எப்படித் தோன்றியது என்பது நமக்குத் தெரியும். ஆனால் இந்த உயிர் ஏன் தோன்றியது?

உயிரின் பயன் என்ன?

உயிருள்ளவற்றுக்கும் உயிரற்றதற்கும் என்னென்ன வித்தியாசங்கள் இருக்கின்றன?

உயிருள்ளவை சுவாசிக்கும் என்கிறீர்களா? மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் வெண்டிலேட்டர் எனும் கருவி, நம் நுரையீரல் வேலை செய்யாவிட்டால், நமக்குப் பதிலாக மூச்சைத் தருகிறதே.. ஆனாலும் அது உயிரற்ற கருவிதானே. ஆக, மூச்சு விட்டால் மட்டும் உயிர் இருப்பதாக அர்த்தமில்லை!.

உணர்ச்சி இருக்க வேண்டும், அப்போதுதான் அது உயிர் வாழ்வதாக அர்த்தம் என்கிறீர்களா? பல ஓட்டல்களில் கைகழுவும் இடத்தில் உள்ள குழாயடியில் நீங்கள் கையை நீட்டினால் மட்டும்தான் தண்ணீர் வெளியே வருகிறது, நீங்கள் அருகே வந்தால் தான் கண்ணாடிக் கதவு திறக்கிறது, மின்விளக்கு எரிகிறது. அவ்வளவு ஏன், சுனாமி வருகிறதா இல்லையா, என்று கடல் அடியில் இருந்து உணர்ந்து சொல்வதே ஒரு கருவி தான். இப்படி பல சமிக்ஞைகளை உணரும் கருவிகள் இன்று உபயோகத்தில் இருந்தாலும், இவை எவற்றுக்குமே உயிர் கிடையாதே.

அப்படியானால், அறிவு வேண்டும், அப்போதுதான் அதற்கு உயிர் இருக்கிறது என்று அர்த்தம் என்றும் பலர் பதில் அளிப்பதுண்டு. பாக்டீரியா, வைரஸ், காளானுக்கெல்லாம் மூளையே இல்லையே. அப்படிப் பார்த்தால் எந்தச் செடி, கொடி, மரத்திற்கும் மூளையே இல்லையே, ஆனால் அவை எல்லாமே உயிருள்ள ஜீவன்கள்தானே!

அதை எல்லாம் விடுங்கள், ஆத்மா இருக்க வேண்டும், அப்போதுதான் உயிருள்ளதென்று அர்த்தம் என்றும் சிலர் சொல்வதுண்டு. வைரஸ் எனும் நுண்கிருமிக்கு ஏது ஆத்மா? ஏதாவது ஒரு வைரசைப் பிடித்து அதை பதப்படுத்தி கிறிஸ்டல் கல் மாதிரி உணத்தி எடுத்து ஒரு டப்பாவில் போட்டு அடைத்து வைத்தால் எத்தனை யுகங்கள் ஆனாலும் அது அப்படியே உறைந்தே கிடக்கும். இந்த நிலையில் அதை யார் பார்த்தாலும் உயிரற்ற ஏதோ பொடி என்றே நினைப்பார்கள். ஆனால், அதையே கொஞ்சம் லேசாய்த் திறந்து, கொஞ்சமே கொஞ்சம் காற்றாடவிட்டால் போதும், புசுக் என்று புடைத்து பெரிதாகி, உயிர் பெற்றுவிடும்.

இப்போதும் ஆர்டிக், அண்டார்டிக் பனி உருகும் போது, விஞ்ஞானிகள் அஞ்சும் மிகப் பெரிய அச்சுறுத்தல் என்ன தெரியுமா? அந்தப் பனியில் பல யுகங்களாய் உறைந்து போயிருக்கும் கிருமிகள் மீண்டும் உஷ்ணம் பட்டு உயிர்பெற்றுவிட்டால் என்ன ஆகும் என்பதுதான்!

உயிர் பெற்றுவிடும் என்றால் என்ன அர்த்தமாம்? அது வளரும். சரி, வளர்ந்தால்தான் உயிர் இருக்கிறது என்றால், நம்மூர்க் குப்பை மேடுகள் கூடத்தான் வேகமாய்ப் பெரிதாய் வளர்கின்றன. ஆங், அதெப்படி, குப்பையை நாம் கொட்டித்தானே வளர்க்கிறோம், தானாய் வளர்ந்தால்தானே வளர்ச்சி என்கிறீர்களா? அப்படிப் பார்த்தால், மலைகள் கூடத்தான் தானாகவே உயரமாய் வளர்கின்றன! ஆனால் அவற்றுக்கு உயிர் இல்லையே!

ஆக, வெறும் வளர்ச்சி மட்டும் போதாது, அது குட்டியும் போட வேண்டும், அப்போது தான் அது உயிருள்ளதென்று எடுத்துக்கொள்ள முடியும். குட்டி போடுவது என்றால் எப்படி? தன் மரபணுக்களை பிரதி எடுத்து அடுத்தடுத்த தலைமுறைக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

ஆக, மரபணுக்களை அழியவிடாமல், மீண்டும் மீண்டும் மறுதலைமுறை மூலமாய் அப்படியே நிலைக்க வைக்கும் தன்மை கொண்டவற்றை மட்டும்தான் உயிருள்ளவை என்கிறோம். இந்த ஆற்றல் இல்லாத மற்ற எல்லாவற்றையுமே உயிரற்றவை என்றே கருதுகிறோம்.

அப்படியானால், குழந்தையே இல்லாதவர் உயிரற்றவரா, என்ன பேத்தல் இது என்று கேட்கத் தோன்றுகிறதா? குழந்தை இல்லாத மனிதரின் எல்லா செல்களும் குட்டிபோட்டுக்கொண்டே தான் இருக்கின்றன. நகத்தின் செல், முடியின் செல், நுரை ஈரலின் செல்கள் என்று எல்லாமே குட்டி போடும், மூளையின் நியூரான் செல்லைத் தவிர. இப்படி மைடாட்டிக் குட்டிபோட்டால் போதாது, இனப்பெருக்க செல் மூலமாக மியாடிக் குட்டி போட்டால் தான் ஏற்பீர்கள் என்றால், அவரின் ஒரே ஒரு செல்லை எடுத்து அதிலிருக்கும் மரபணுக்களை அபிவிருத்தி செய்து ஒரு புதிய மனிதக் குட்டியை உருவாக்கலாம் தெரியுமா?

இப்படித்தான் என்பதில்லை, எப்படியாவது, தன் மரபணுக்களை அபிவிருத்தி செய்யும் ஆற்றல் இருந்தாலே போதும், அது உயிருள்ள ஜந்து என்று கருதப்படும். மற்ற எல்லாமே உயிரற்ற வஸ்துவாகிவிடும்.



■ மற்றவர்களிடம் பழகும் வித்தைகளையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால் அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான். - *தந்தை பெரியார்*

இந்த பிரபஞ்சத்தில் எத்தனையோ கிரகங்கள் உள்ளன. ஆனால் உயிர் உலாவும் கிரகங்கள் எத்தனை? நமக்குத் தெரிந்து இந்த பூமி ஒன்றுதான். இந்த அண்ட சராசரத்தின் வேறு ஏதாவது கோடியில், இன்னும் பெயரே வைக்காத ஏதோ ஒரு கிரகத்தில் வேறு விதமான உயிர்கள் இருக்கலாம். ஆனால் அது பற்றி நமக்குத் தெளிவு கிடைக்கும் வரை இப்போதைக்குப் பெருமைபட்டுக்கொள்ளலாம், நாம் எல்லோருமே இந்த பிரபஞ்சத்தின் பேரதிசயங்கள் என்று!

சரி, இன்னொரு மனவிளையாட்டு: உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு ஜீவராசியை நினைத்துக்கொள்ளுங்கள். மரம், செடி, கொடியா? விலங்கினமா? பறவையா? அல்லது பாக்டீரியா, வைரஸ், காளான் மாதிரியான குட்டி ஜீவனா? மனிதர்கள் வளர்க்கும் ஜீவன்களை விட்டு விடுங்கள். மனித வாசனையே அறியாத ஏதாவது ஒரு காட்டு உயிரினத்தைத் தேர்ந்தெடுங்கள்.

இப்போது கூடு விட்டுக் கூடு பாய்ந்து, உங்களுக்குப் பிடித்த ஜீவனாகவே நீங்கள் ஒரு கணம் மாறிவிட்டதாய்க் கற்பனை செய்யுங்களேன்.

உதாரணத்திற்கு, உங்களுக்குப் புலிதான் பிடிக்கும் என்று வையுங்கள். புலியாக உங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இப்போது நீங்கள் காட்டில் வேட்டையாடித் திரிந்து கொண்டிருக்கும் ஒரு புலி மட்டுமே.

இப்போது சொல்லுங்கள், புலி ஆகிவிட்ட உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்னவாக இருக்கும்? நல்லா சாப்பிடணும், தூங்கணும், நல்லா வேட்டையாடணும், என்றால், எல்லாம் சரிதான். அதற்கும் மேலே? எதிர்பாலினப் புலியோடு கூடி ஜாலியா என்ஜாய் பண்ணணும்! என்கிறீர்களா, சரி. அதை எதற்காகச் செய்ய வேண்டும்? அப்போதுதான் நிறைய குட்டிகள் பிறக்கும். அது வளர்ந்து ஆளாகி, நாலாப்பக்கமும் போய், அதன் துணையோடு சேர்ந்து மீண்டும் பல குட்டிகளைப் போட்டு உங்கள் மரபணுக்களைப் பரப்பும். இப்படி மரபணுக்களை மறுமைக்குப் பரப்பிக்கொள்வதுதான் புலியின் ஒரே குறிக்கோள்.

இதை யாரும் புலிகளைக் கூப்பிட்டு வைத்துச் சொல்லி எல்லாம் தருவதில்லை. புலிகளின் மனதில் இயற்கையிலேயே அமைந்த உந்துதல் இது. அதனால் புலி வாழ்வதும், வளர்வதும், உணர்வதும், புணர்வதும், இதை இலக்காக வைத்துத்தான். இந்தப் புலியைப் போலத்தான் எல்லா உயிரினங்களுமே. தம் மரபணுக்களை அழியாமல் காப்பாற்றப் போராடுகின்றன.

ஆனால் எல்லா உயிர்களுமே இந்த மரபணு ஆட்டத்தில் வெற்றி அடைய முடியாதே. இருப்பதே ஒரே ஒரு பூமி, ஒரே ஒரு சூரியன். இந்தக் கிரகத்தில் ஜெனித்த அனைத்து உயிரினத்திற்கும் இதன் வளங்களின் மீது உரிமை உண்டு. பங்கு உண்டு. ஆனால் எல்லோரும் சம வாய்ப்புப் பெற்று உயிர் வாழ்வதென்பது முடியாத காரியம், காரணம், இயற்கை வளங்கள் அளவோடுதான் இருக்கின்றன.

அதனால் ஜீவராசிகள் அனைத்திற்குள்ளும் உயிர்வாழ்வதற்கே பெரும் போட்டி நிகழ்கிறது. இந்த *Struggle for existence* எனும் வாழ்வியல் போட்டியில் ஜெயிக்க வேண்டும் என்றால், எந்தச் சூழலிலும் பிழைக்கும் வல்லமை வேண்டும். இயற்கையில் எதுவுமே நிலையானதல்ல, எல்லாமே காலத்தோடு மாறிக்கொண்டே இருக்கும், இந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுத்துத் தானும் அதற்குத் தோதாக மாறி, *adapt* செய்துகொண்டே இருந்தால்தான், இயற்கையின் இந்தச் சவால்களை மீறிப் பிழைக்க முடியும். இப்படி, இயற்கையோடு இணைந்து மாறிக்கொண்டே இருக்கும் வல்லமை கொண்ட ஜீவராசிகளால் மட்டும்தான் தாமும் பிழைத்து, அதிக எண்ணிக்கையில் தன் இனத்தையும் பரப்பிக்கொள்ள முடியும். இதைத் தான் இயற்கைத் தேர்வு, *Natural selection* என்றார் சார்லெஸ் டார்வின். இந்தத் தேர்வில் தேற ஒரே ஒரு விதிதான்: *survival of the fittest*, சூழ்நிலைக்கு ஏற்ப, தன்னைத் தானே மாற்றிக் கொண்டு எதற்கும் ஃபிட்டாய்த் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் வல்லமை பெற்றவை மட்டும்தான் பிழைத்துக்கொள்ள முடியும்.



சூழலை உணராமல் இருப்பது, அதற்கேற்ப மாறாமல் இருப்பது, பொருத்தமாய் மாறாமல் இருப்பது என்று பிழைக்கத் தெரியாமல் சொதப்பும் ஜீவன்களை அப்புறப்படுத்திவிட்டு, போட்டியில் பங்கேற்கும் தயார் நிலையில் இருப்பனவற்றை மட்டும் ஆட்டத்தில் சேர்த்துக்கொள்கிறது இயற்கை.

*survival* என்றால், இன்று ஒரு பொழுது மட்டும் பிழைத்திருந்து நன்றாக மூக்கு பிடிக்கச் சாப்பிட்டு, நிறைய சொத்து சுகங்களை அனுபவிப்பதில்லை. சாப்பாட்டிற்கே வழி இல்லை என்றாலும், எந்த உடைமைகளுமே இல்லாவிட்டாலும், தன் உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் விடாப்பிடியாகக் குட்டி போட்டு, தன் மரபணுக்களை அடுத்த தலை முறையினுள் பத்திரப்படுத்தி வைப்பதுதான் நிஜ சர்வைவல்.

இந்த மரபணு ஆட்டம் ஒரு பிரமாண்டமான பரமபத விளையாட்டு மாதிரியானது. இதில் ஒருவரின் காலை வாரிவிடப் பல பாம்புகளும், திடீர் ஏற்றத்தைத் தரப் பல ஏணிகளும் ஒளிந்திருக்கின்றன. எப்படியாவது காய்களை நகர்த்தி வம்சாவிருத்தி எனும் பரமபத பொற்கதவுகளை அடைந்தால்தான் ஜெயித்ததாக அர்த்தம்.

எத்தனையோ கோடி ஆண்டுகளுக்கு முன்பு, இந்த உலகில் தோன்றிய முதல் உயிருக்குள் இருந்த சாட்சாத் அதே மரபணுக்கள்தான், உங்கள் வரைக்கும் அறுபடாமல் அப்படியே பத்திரமாக வந்து சேர்ந்திருக்கின்றன. உங்கள் மரபணுக்களைப் பரிசோதனை செய்து பார்த்தால் அவற்றின் மிக நீண்ட தூரப் பயணத்தின் வரலாறும், அவை கடந்து வந்த பாதைகளின் அடையாளமும் தெரியும்.

இத்தனை யுகங்களால் அறுபடாமல், அழியாமல் மற்ற விதமான மரபணுக்களை ஜெயித்துக்கொண்டே வந்த உங்கள் மரபணுக்கள் இனிமேலும் தோற்றுவிடக் கூடாதென்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்கள் பெற்றோர் பொக்கிஷமாய் பாதுகாத்து உங்களிடம் ஒப்படைத்த உயிர் எனும் இந்த அதிசயத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செலுத்த நீங்கள் உங்களை எப்படித் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்?

சும்மா, உலகில் மற்ற எல்லா ஜீவராசிகளைப் போல, நீங்களும் இனப் பெருக்கம் செய்து, உங்கள் குட்டிகளைப் பாதுகாத்து வளர்த்து, அவர்கள் மூலமாய் உங்கள் மரபணுக்களை அழியாமல் தொடரச் செய்ய வேண்டும். கேட்பதற்கு மிக எளிதாக இருக்கிறதே, ஆனால் நடைமுறையில் இது எவ்வளவு கடினமான காரியம் தெரியுமா?

**(கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியீடு செய்த "கொஞ்சம் டார்வின் கொஞ்சம் டாக்கின்ஸ்" என்ற நூலிலிருந்து...)**



■ பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும். – *தந்தை பெரியார்*



# அயோத்தி அரசியல்

## அயோத்தியின் ஆரம்பம்

உத்தரப்பிரதேச மாநிலம் பைசாபாத் மாவட்டத்தில் சரயூ நதிக்கரையில் உள்ளது அயோத்தி நகரம் இங்குள்ள 2.77 ஏக்கர் நிலத்தில் தான் ஆரம்பிக்கிறது அயோத்தி அரசியலின் ஆரம்பப் புள்ளி 1528ஆம் ஆண்டு பாபர் கட்டிய மசூதியில் 1853 வரை இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தி வந்தனர். பின்னர் 1863இல் எழுந்த லேசான சர்ச்சையில் பிரித்தானிய அரசு தலையிட்டு இந்துக்களும் இஸ்லாமியர்களும் சேர்ந்தே வழிபடலாம் என தீர்ப்பை வழங்கியது. சுமார் 200 ஆண்டுகள் அமைதியாக சென்று கொண்டிருந்த சூழலை மாற்றவும் இந்த பிரச்சனையை மையப்படுத்தி தங்களின் அரசியல் அதிகாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தீட்டப்பட்ட திட்டம்தான் பாபர் மசூதிக்குள் ராமர் சிலையை நிறுவ வேண்டும் என்பது 1947இல் பல்ராம்பூர் அரசர் ஏற்பாடு செய்திருந்த யாக நிகழ்ச்சியில் உத்தரப்பிரதேச மாநில இந்து மகா சபையின் தலைவர் திக்விஜய் நாத், பைசாபாத் மாவட்ட நீதிபதி நய்யார் ஆகிய முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள பாபர் மசூதியின் உள்ளே ராமர் சிலையை நிறுவ அவரவர் தங்களுடைய அதிகார துணை கொண்டு உதவ வேண்டுமென தீர்மானம் நிறைவேறியது. அதனடிப்படையில் மதவாதப் பணிகளை அதிகாரத் துணையோடு செய்ய ஆரம்பித்து 1949ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வாரத்தில் ராமர் சீதா திருமண நிகழ்ச்சியை ஒன்பது நாட்கள் நடத்துவதும் கடைசி நாளான ஒன்பதாவது நாளில் ராம பக்தர்கள் ஒன்றாக சேர்ந்து பாபர் மசூதியின் உள்ளே ராமர் பிறந்ததாக நம்புகிற இடத்தில் குழந்தை ராமர் அதாவது ராம் லல்லா சிலையாக தோன்ற ராமனை வேண்டிக் கொள்வது என நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

ஒன்பதாம் நாள் முடிவில் வேண்டுதல் பலிக்கவில்லை. வேண்டுதல்கள் எப்போதும் சூழ்ச்சியின் துணைகொண்டு தானே பலிக்கப்படுகிறது அதேபோல நிகழ்ச்சி முடிந்து நான்கு நாட்கள் கழித்து டிசம்பர் 22 1949 இரவில் மசூதி வளாகத்திற்குள் காவல்துறை பாதுகாப்பை மீறி நுழைந்த மதவாதிகள் 26 அங்குலம் கொண்ட குழந்தை ராமர் சிலையை வைத்து சர்ச்சைக்கு சுழி போட்டனர். அடுத்தநாள் இந்த பிரச்சனையை விசாரணை செய்த பண்டிட் ராம் திபேத் துபே என்கிற நேர்மையான அதிகாரி 50க்கும் மேற்பட்டவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 147, 148 ,295 ன் கீழ் வழக்கு பதிவு செய்தார் ஆனால் அதன் பிறகு மதவெறிக்குத் துணைபோன காவல் அதிகாரி மத்தா பிரசாத் என்பவர் அபிராம் தாஸ், ராம் சகல் தாஸ், சுதர்சன் தாஸ் ஆகிய மூன்று பேர் மட்டும் சம்பவத்தில் ஈடுபட்டதாக இவ்வழக்கைச் சுருக்கி வழக்கின் போக்கை மாற்றி அமைத்தார்.

இந்தச் செயல்களை எல்லாம் கண்டிக்க வேண்டிய மாவட்ட நீதிபதி நய்யாரோ முழுமையான மதவாதி. அவர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையில், அயோத்தியில் எந்த பிரச்சனையும் இல்லை அமைதி நிலவுவதாக பச்சை பொய்யை எழுதி அனுப்பினார். உத்தரப்பிரதேச முதல்வரராக இருந்த வல்லப பந்த் என்பவரோ கடவுள் இல்லை என்பவருக்கு வாக்களிக்காதீர்கள் என்று பிரச்சாரம் செய்தவர், இந்து மகாசபையின் அபிமானி. இவ்விதமாக எல்லா அதிகார மையங்களும் மதவெறிக்கு ஆட்பட்டு கைகோர்த்து நின்று சர்ச்சைக்குரிய வகையில் வைக்கப்பட்டச் சிலையை அகற்றாமல் அந்த மசூதியை அரசு வசம் கொண்டு வந்து மதவெறியுடன் அத்துமீறி உள்ளே நுழைந்து பிரச்சினைக்குக் காரணமான குற்றத்தைச் செய்தவர்களைத் தண்டிக்காமல் குற்ற வழக்கை உரிமையியல் வழக்காக மாற்றி அமைத்து குழந்தை ராமரின் சார்பாக உரிமையியல் வழக்கும் தொடுக்கப்பட்டது.

நமது நாட்டின் உரிமையியல் சட்டத்தின் படி இந்து கோவில் கடவுள்கள் நேரடியாக வழக்கு தொடுக்க சட்ட உரிமை உள்ளது இது நமது நாட்டின் வினோதமான சட்டம்.

இவ்வாறாக நடைபெற்ற டிசம்பர் 22 1949 ஆம் தேதி இரவு நடந்த வரலாற்றில் மறைக்கப்பட்ட நிகழ்வை "Ayodhya  the dark night" the secret history of ramas appearance in babri masjid ("அயோத்தியின் இருண்ட இரவு" ரகசியமாக ராமர் அவதரித்த வரலாறு) என்ற நூலில் ஆதாரங்களோடு கிருஷ்ணன் ஜா திரேந்திர ஜா என்கிற பத்திரிக்கையாளர்கள் அம்பலப்படுத்தினார்கள்.

## ரத்தமும் ரதமும்

1949இல் சர்ச்சையைத் தொடங்க ஆயத்தக் கூட்டமாக 1947இல் யாகம் நடத்தியது போன்ற 1992 டிசம்பர் 6 நிகழ்வை நடத்த மதவெறியை திரட்ட 1990இல் ஆயத்தமானார்கள். 1990 ரத யாத்திரை மூலமாக ஆயத்தபணிகளை தொடங்கியவர் அத்வானி. இவர் ரத யாத்திரையை தொடங்கியதற்குப் பரிசாக 1984இல் பாபர்

## தோழர் திராவிடராசன்

மசூதியை கைப்பற்றுவதே நோக்கமாக ஆரம்பிக்கப்பட்ட பஜ்ரங்தள் ஆட்கள் தங்களுடைய ரத்தத்தை ஒரு கோப்பையில் பரிசாக அளித்தனர் என்றால் அதன் வெறித்தனத்தை அறிய முடியும். ரத்தத்தை ஆறாக ஓட விடுவதற்கு தயாரான ரத யாத்திரைக்கு ரத்தமே பரிசாக அளிக்கப்பட்டிருக்கிறது. எப்போதெல்லாம் நாட்டில் ரத்தம் ஆறாக ஓட வேண்டும் என இவர்கள் விரும்புகிறார்களோ அப்போதெல்லாம் ரதயாத்திரை நடக்கும், அறிவியல் நூல்களும் ஆய்வுகளும் நசுக்கப்படும், சிந்தனையாளர்கள் முற்போக்காளர்கள் படுகொலை செய்யப்படுவார்கள், சிந்தனையை வளர்க்கும் நூல்கள் எரிக்கப்பட்டு மதவெறி உண்டாக்கும் நூல்கள் பரப்பப்படும்.

எங்கெல்லாம் புத்தகங்கள் எரிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் மனிதர்கள் எரிக்கப்படுவது நிச்சயம் என்கிறார் ஹைன்ரிஷ் ஹைனே எனும் ஜெர்மானிய புரட்சிக்கவிஞர். இதற்கு நம் கண்முன்னே நடந்த சாட்சி யாழ் நூலகம் எரிக்கப்பட்டதும் இலங்கை மக்களை படுகொலை செய்து நடத்தப்பட்ட யுத்தங்களும்.

### அரசியல் லாபம்

ராம் லல்லா என்கிற குழந்தை ராமனை பாபர் மசூதிக்குள் வைக்கவும் ,அதனை அகற்றாமல் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் துணைநின்ற பைசாபாத் மாவட்ட நீதிபதி நய்யாருக்கு 1967இல் ஜன சங்கம் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தேர்வுக்கும் பதவிக்கும் வாய்ப்பு கிடைத்தது இதிலிருந்து தொடங்குகிறது அரசியல் லாபங்கள் .

இப்போது 2018இல் கூட மேகாலயா உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.ஆர். சென் என்பவர் மதச்சார்பற்ற நாடாக இல்லாமல் இந்து நாடாக இந்தியா இருக்க வேண்டும் என ஆசைப்பட்டு அவரது கருத்தை வெளிப்படுத்துகிறார். இவரும் எதிர்காலத்தில் தனக்கான வாய்ப்பு இருக்கும் என்று ஒரு விண்ணப்பம் போடுகிறார் என்றே தோன்றுகிறது.

17 நிமிடங்களில் மசூதியை இடித்துவிட்டோம் ஆனால் ராமர் கோவில் கட்ட எவ்வளவு காலம் ஆகிறது என மதவெறி ஆதங்கம் மதவாதிகளிடையே எழுகிறது அதனால்தான் ராமர் கோவில் கட்ட சட்டம் வேண்டும் என இந்துத்துவவாதிகள் கேட்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் என்பவர் இந்தியாவில் மாநில கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்கிறார். ஏனெனில் மாநில கட்சிகள் பலவும் அவர்களுடைய மதவெறி நோக்கத்திற்கு தடையாக இருக்கிறது. இந்து சட்ட மசோதாவை நிறைவேற்ற முயற்சித்த அம்பேத்கரின் உருவபொம்மையை எரித்து, கடைசியில் அம்பேத்கர் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய காரணமாக இருந்தவர்கள் ஆயிற்றே. இவர்கள் வளர்ச்சி என்கிற வெற்று முழக்கம் தேர்தலுக்கு ஆதாயம் அளிக்காத சந்தர்ப்பம் ஏற்படும் போது மதவெறி உணர்ச்சியை தங்களின் அரசியல் ஆயுதமாக கையில் எடுக்கிறார்கள் என்பது ஆதாரப்பூர்வ வரலாற்று உண்மையாகும். மதவெறி அரசியலை ஒழித்து மனிதம் காப்போம். ●

## பேரா. பழ.வெங்கடாசலம்

மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



### "கத்தியை விழுங்குதல்"

**தேவையானப் பொருட்கள்**

முக்கால் முதல் ஒரு அடி நீளம் உள்ள கைப்பிடியுடன் கூடிய ஒரு கத்தி

**மேஜிக் செய்யும் முறை**

மேஜிக் செய்யும் போது பார்வையாளர்களிடம் நாம் தயாராக வைத்துள்ள கத்தியைக் காண்பித்து 'இதோ இந்த கத்தியால் வெட்டினால் நமது உடம்பில் இரத்தம் வரும். நான் இப்போது இந்த கத்தியை விழுங்குகிறேன் பாருங்கள்' எனக்கூறி கத்தி முனையை வாயில் வைத்து கொஞ்சம் கொஞ்சமாக விழுங்க ஆரம்பிக்க வேண்டும். தலையை மேல்நோக்கி பார்த்து கத்தி மேலிருந்து நமது வாயின் உள்ளே செருக வேண்டும். கைப்பிடி மட்டும் வெளியில் தெரியும் படி இருக்கும். இதை பார்ப்பவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கி விடுவார்கள்.



**மேஜிக் ரகசியம்**

மேஜிக் செய்யும் கத்தி சுருளும் தன்மை கொண்டது. வாயில் கத்தியை வைக்கும் போது கத்தி நுனியை நாவின் மூலம் சுருட்டி விட்டால் மீதி பகுதி தானாக வாயினுள் சுருண்டு கொள்ளும். இதற்கென தனியே கிடைக்கும் கத்தியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ●

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

டிசம்பர் 2018 இதழில் வெளியான வீழ்த்தப்பட முடியாதவர் வீரமணி! என்ற கட்டுரையில் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் இயற்பெயர் தண்டபாணி என தவறுதலாகப் பதிவு செய்யப்பட்டது! அய்யாவின் இயற்பெயர் ''சாரங்கபாணி'' என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்!



▪ நீ என்னை உன் அடிமை என்று நினைக்கும் போது உன்னை கொல்லும் ஆயுதமாய் நான் மாறிவிடுவது என் கடமை. - *அம்பேத்கர்*

# எச்சில் தொட்டி

அதிகாலை நான்கு மணி அமாவாசை வீட்டின் குடிசை படலைத் தட்டினாள் செல்லாயி. "ஏய் புள்ள ஏய் எந்திரிடி இன்னுமா தூங்கற" என்றபடி படலை தட்டினாள் செல்லாயி.

"தோ வரேன்கா" என்றபடி எழுந்து வந்து குடிசை படலைத் திறந்தாள் அமாவாசையின் மனைவி.

''புள்ளைங்க தூங்குதா முழிச்சிருக்குதா?'' என குசுகுசுத்தபடி கேட்டாள்.

''தூங்கறாங்க'' என குசு குசுத்தபடி சொன்னாள் செல்லாயி.

"சரி சீக்கிரமா நாலு சொம்பு தண்ணி ஊத்திகிட்டு கௌம்பு. ஆலமரத்துகிட்ட வா மொத பஸ்சுக்கே போய்ட்டு வந்துடலாம்."

"ம் சரிக்கா. பத்து நிமிசத்துல வரேன்." என்றபடி கொல்லைப்புறமாய் ஒதுங்கிவிட்டு வேப்பங்குச்சியை உடைத்து பல் தேய்த்த படியே பொடக்காலி பக்கம் வந்து தண்ணீர் தொட்டியில் தண்ணீர் எடுக்க குனிந்தாள்.

கண்ணுக்கு ஏதோ புலப்படவே கண்ணை கூர்மைப்படுத்தி பார்த்தாள். பொடக்காலி தண்ணீர் தொட்டியின் கீழே இரையொன்றை விழுங்கிவிட்டு அசைய முடியாமல் கீழே பெரிய பாம்பொன்று படுத்துகிடந்தது.

சத்தம் போட எத்தனித்தவள். தன்கையை தானாகவே வாயில் வைத்து பொத்திக்கொண்டாள் ''வேணாம் புள்ளைங்க முழிச்சிரும். பொறவு மொத பஸ்சுக்கு போவமுடியாது. பாம்புக இருக்கற எடத்துல நாம வீட்ட கட்டிகிட்டு அதுகள கொற சொல்லி என்ன பண்றது.

அது இல்லாத எடம் எங்க இருக்குது நடக்கறது நடக்கட்டும் போ'' என மனதிற்குள் பேசியவாறே குடிசைக்குள் நுழைந்து டார்ச் லைட்டை எடுத்து கொண்டு கையில் வாகாக ஒரு தடியை எடுத்துகொண்டு பொடக்காலியின் உள்ளே நுழைந்து டார்ச்சை அடித்தாள் 'உஸ்' என்ற வேகத்துடன் சீறியது அந்த பாம்பு நன்கு அகலமாய் தலையை படம் எடுத்து சீறியது. ஆனால் அதனால் கொஞ்சம் கூட நகர முடியவில்லை நகர முயற்சித்தது ஆனாலும் முடியவில்லை.

"ஏய் சும்மா இரு ஒன்னைய நான் என்ன பண்ணபோறேன். நீ வாழற எடத்துல குடியிருக்கறது எங்க தப்பு என்ன பண்ணி தொலைக்கறது காசு பணம் கையில் இருந்தாக்க

21





▪ ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்ல; ஆடுகளாக இருக்க வேண்டாம்; சிங்கங்களைப் போன்று வீறுகொண்டெழுங்கள். – *அம்பேத்கர்*

தோழர் சிவா சடையன்

நல்ல பொழப்பு பொழக்கலாம் காலத்துக்கும் ஒழச்சு ஓடா தேயற எங்களுக்கு மட்டும் சேரி வலவு வாழ்க்கைனு ஆகிப்போச்சு. என்ன பண்றது எங்க பொறப்பு அப்படி" என முணுமுணுத்தபடியே அதை லாவகமாய் தடியால் தூக்கினாள்.

''அப்படியே கொஞ்சம் தொலைவு போய் பொழைச்சுப்போ" என்றபடி பாம்பை தூக்கி எறிந்துவிட்டு, வேகவேகமாய் பொடக்காலியில் நுழைந்து தண்ணீரை ஊற்றிக்கொண்டு விடுவிடுவென குடிசைக்குள் நுழைந்து கொஞ்சம் நல்ல புடவையாய் தேடி எடுத்து கட்டிகொண்டு விறுவிறுவென கிளம்பினாள்.

*மணி 5: 10*

வேக வேகமாய் சரக் சரக்கென சத்தத்தோடு வந்தாள் "செல்லாயி போலாமா ?" என்றாள்

"போலாம்க்கா!" என்றபடி முதல் பஸ் வருவதை எதிர்பார்த்தபடி நின்றாள் தொலைவில் பஸ்சின் முகப்பு விளக்கு மங்கலான வெளிச்சத்துடன் வந்தது.

"அக்கா பஸ் வருது"

"ம்ம் வரட்டும்" என்றபடி முன்னோக்கி வந்தாள்

பஸ்சில் ஏறி இடம் பிடித்து அமர்ந்துகொண்டாள் போகுமிடம் சொல்லி டிக்கட்டை வாங்கிகொண்டு.

"ஏன்க்கா ஒன்கிட்ட ஒரு விசயம் கேக்கட்டுமா?"

"கேளுபிள்ள" என்றாள்

"நீ எப்ப இருந்துக்கா இந்த வேலை செய்யற" என்றாள் கேட்டுவிட்டு யாரேனும் நம்மை பார்க்கிறார்களா என திரும்பிப் பார்த்துக்கொண்டாள்.

செல்லாயி கொஞ்சமாய் உதடு பிரியாமல் சிரித்தாள் "ஓம்புருசனும் எம்புருசனும் எவன் வூட்லயோ எழவு உழுவுதுனு மசுராப்போச்சுனு மீசைய நீவிகிட்டு போய் ஜெயிலுல கைல புடிச்சிகிட்டு ஒக்காந்துகிட்டானுக ஊர் சாதி சனம் மக்கள் னு துடியா துடிச்சு பண்ணையக்காரன கொன்னுபுட்டு போனானுங்களே, அந்த அதே ஊர்க்காரனுவ சாதிங்கறானுக, சனம்ங்கறானுக சம்பவம் நடந்து பத்து பதினைஞ்சு நாள் வரைக்கும் நான் இருக்கேன் நீ இருக்கேன்னு பிச்சை போடறமாதிரி பத்து அஞ்சுனு கொடுத்தானுக காலப்போக்குல காசுபணம் குடுக்கறமே அதுக்கு கைமாறு ஏதுமில்லையானு பல்ல இளிச்சிகிட்டு வந்தானுக. கொலைகாரன் பொண்டாட்டினு சுத்துபட்டு காடு கரை வாய்க்கா வரப்புல எங்கயுமே கால் வைக்க விடல வெளியூர் பக்கம் வேலைவெட்டி எதாச்சும் கெடைக்குமானு பாத்தாக்க பஞ்ச பரதேசியாட்டம் வட நாட்டானுக கையில் ஒன்னு இடுப்புல ஒன்னுனு தூக்கிட்டு நாம 200 ரூவா கூலிக்கு செஞ்சா அவனுவ 100 ரூவா கூலிக்கு மாரடிக்கறானுவ. மகளிர் குழுவுல வாங்குன லோன கட்ட முடியல குழு தலைவி அஞ்சலம் இருக்காளே திங்க கெழமை காலம்பற ஏழு மணிக்கு லோனு கட்டலனா ஊரே கேளு நாடே கேளு னு கத்தறா .

சொந்த பந்தம் சாதி சனம்னு பேசுன ஒரு நாயிங்க கூட ஒத்த ரூவா குடுக்கமுன் வரல. வாங்குன கடன கட்டமுடியாம ஊர்க்காரிக கிட்டயும் லோனு கலெக்கசனுக்கு வரவன் கிட்டயும் திட்டு வாங்கறப்ப நடு ரோட்டுல அம்மணமா நம்மள நிக்கவைச்சு ஊரே கைகொட்டி சிரிக்கறாப்போல ஒரு அவமானம் டி எனக்கு.



செத்துப்போயிரலாம்னு ரெண்டு தடவை அரளி வெதையும் ஒடுவந்தலையும் குடிக்கலாமுன்னு முடிவு பன்னிட்டேன் டீ. ஆனா எங்கொழந்தைங்க பச்ச மண்ணுங்க அடுத்தவேளை சோத்துக்கு வழியில்லாம அனாதையா திரியுமே னு சாகணும்னு தோணல அப்பத்தான் விஜயா இது மாதிரி ஒரு வாய்ப்பு இருக்குதுக்கா னு சொன்னா அவ அடிக்கடி போய்வரவ நாலு மனுசற பழகி வைச்சிருக்கா மொத தடவை எனக்கும் ஒரு மாதிரியாத்தான் இருந்துச்சு போவ போவ பழகிடுச்சு ப்ச்" என சளித்துகொண்டாள்.

"ஏன்க்கா ஒருவேளை நாம எங்கயாச்சும் எக்குதப்பா மாட்டிகிட்டா என்ன பண்றதுக்கா இந்த ஊர் ஒலகம் சாதிசனம்லாம் நம்மள தேவடியா னு பேசுமே ரொம்ப கேவலமா பாக்குமே பயமா இருக்குதுக்கா எனக்கு" என்றாள் அமாவாசையின் மனைவி

"அடி போடி இந்த நாய்ங்க கெடக்குது அடுத்தவேளை சோத்துக்கு வழியில்லாம மாத்தி கட்டிக்க துணி இல்லாம ஞாயித்து கெழமை நாளுல ஊரே கறிச்சோறு ஆக்கி திங்கறப்ப நானும் எம்புள்ளைங்களும் எம்புட்டு ஏங்கி இருப்பம் தெரியுமா? புள்ளைங்க பக்கத்து ஊட்ல கறியாக்குற வாசம் வந்தாக்க அம்மா கறி மா கறிமா னு ஏங்கி ஏங்கி வீங்கிபோய் ஆத்தரத்துல கொழந்தைங்கள நான் புடிச்சி அடிச்சி தூங்க வைப்பேன்.

பாவம் எம்மக்க வாய்க்கு ருசியா சோறு தின்னு பல நாளாவுது பச்ச மண்ணுங்க என்ன பாவம் பன்னுச்சுங்க

அடுத்தவூட்டு புள்ளைங்க நல்ல சோறு சாறு திங்குறப்போ நல்ல துணிமணி போடுறப்ப எம்புள்ளைங்க ஏக்கமா பாத்துட்டு கேட்டாக்க அம்மாகாரி அடிப்பாளேங்கற பயத்துல புழுங்கி புழுங்கி சாவுதுங்க.

அடுத்தவங்களோட பசியை ஏக்கத்த தேவைய வறுமைய பத்தி கொஞ்சம் கூட யோசிக்காத இந்த நாயிங்க நமக்கு தேவடியா பட்டம் கொடுக்குதுனா அவளுக தான் மொத தேவடியாளுக. இவளுக சொல்ற கற்பு மசுரு மண்ணாங்கட்டியெல்லாம் பசினு ஒண்ணை அனுபவிச்சா தெரியும்.

நம்மளை தேவடியா னு சொல்லவோ கற்பொழுக்கம் கெட்டவள்னோ சொல்றதுக்கு இங்க எவனுக்குமே எவளுக்குமே தகுதியில்ல புரியுதா நாம வாழத்தான்டி பொறந்தோம் சாகறதுக்கு இல்ல இதுக்கெல்லாம் பயந்துகிட்டு நாம சாகனும்னா சாகவேண்டியது நாம இல்ல இத்தனை சாதி சனம் ஒறவுனு இருந்தும் நம்ம துன்பத்துல பங்கெடுத்துக்காத இவளுகதான் இவனுகதான் மொதல்ல நாண்டுகிட்டு சாகணும் நீ எதுக்கும் கவலைப்படாத என்றாள் செல்லாயி.

– தொடரும்



▪ ஒரு இலட்சியத்தை மேற்கொள்ளுங்கள். அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள். – *அம்பேத்கர்*

# கரகாட்டம்

ஒவ்வொரு ஆங்கிலப் புத்தாண்டும் பிறக்கிறபோது அதைக் கொண்டாடி மகிழும் முறைகளைப் பார்க்கும் போது நாம் இன்னும் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறோமா அல்லது நாம் அவர்கள் கலாச்சாரம், வாழ்க்கை முறைகளை நமதாக்கிக் கொண்டோமா என்கிற ஐயம் ஏற்படுகிறது. இதற்கு காரணம் தமிழ்ப் புத்தாண்டின்போது இது போன்ற கொண்டாட்டங்களும் குதூகலங்களும் குறைந்து காணப்படுதலேயாகும். உண்மையிலேயே தமிழர்கள் கொண்டாடி மகிழ வேண்டியது தமிழ்ப் புத்தாண்டைத்தான். ஆங்கிலப் புத்தாண்டுக் கொண்டாட்டம் என்ற பெயரில் நட்சத்திர ஓட்டல்களில் அரங்கேற்றப்படும் நடனங்களும், பாடல்களும் தமிழர்களின் பாரம்பரிய ஆடல், பாடல், கலைகளை பின்னுக்குத் தள்ளிவிடுமோ என்ற பயமும் அவ்வாறு பின்னுக்குத் தள்ளி விடக்கூடாது என்கிற ஆதங்கமும் தமிழ் உணர்வாளர்களுக்கு இயல்பாகவே எழும். ஆகவே நமது கலை நடனங்களைப் பற்றி நாம், நம் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பதன் வாயிலாக இந்த பயம் மற்றும் ஆதங்கத்தில் இருந்து சற்று விடுபடலாம் என்பதால் கரகாட்டம் பற்றி சொல்ல இந்த கட்டுரை விரிகிறது.

கரகாட்டம் தமிழகத்தில் சோழர்கள் ஆண்ட தஞ்சையில் தோன்றினாலும், அது விரிவடைந்து புதுக்கோட்டை, ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருவண்ணாமலை, வேலூர், சென்னை என தமிழகம் முழுவதும் பரவிய தமிழர்களின் பாரம்பரியக் கலையாட்டமாகும். பின்பு கர்நாடக, ஆந்திரா என பரவி இன்று நாட்டின் எல்லைகளைக் கடந்து தமிழர்கள் குடிபெயர்ந்துள்ள சிங்கப்பூர், மலேசியா,இலங்கை,லண்டன் என தனது எல்லைகளை விரித்துக்கொண்டாலும், கரகாட்டத்தைத் தமிழகத்தின் மூலைமுடுக்குகளுக்கும் பட்டி தொட்டிகளுக்கும் எடுத்துச் சென்ற பெருமை *1989* ஆம் ஆண்டில் வெளியான கரகாட்டக்காரன் என்னும் திரைப்படத்தையே சாரும். இன்று நுனி நாக்கில் ஆங்கிலத்தை தடவி விட்டு இதயத்தில் இருந்து தமிழையும் தமிழ் கலாச்சாரத்தையும் வேரோடு பிடுங்கிக்கொண்டிருக்கும் ஆங்கில வழிக்கல்வி பயிலும் நம் தமிழ்க் குழந்தைகள் மனதில், நம் மொழியையும் கலாச்சாரத்தையும் வேரூன்ற வைப்பது நமது கடமையல்லவா?

சங்க காலம் தொட்டே இயல், இசை, நாடகம் என பல கலைகளின் பிறப்பிடமாகவும் அவற்றின் பாதுகாப்பான வளர்ப்பிடமாகவும் தமிழகம் விளங்கியுள்ளது. அதற்கு தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்கள் அதற்கு உறுதுணையாக இருந்ததும் ஒரு முக்கிய காரணமாகும். இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் நாயகன்கூட கலைக்கு அடிமையாக நடன மங்கையையே சுற்றி வந்துள்ளான். அதில் கூறப்பட்ட குடக்கூத்து என்ற ஆடல் கலையைத்தான் இன்று கரகாட்டம் எனக் கூறுவதாக ஆராய்ச்சியாளர்கள் குறிபிடுகிறார்கள். மண், செம்பு, பித்தளை போன்றவற்றால் செயப்பட்ட வாய்ப்புறம் குறுகியும் அடிப்பாகம் அகன்றும் காணப்படும் குடம் கரகம் எனப்படும். நீர், அரிசி, தானியம் போன்றவற்றால் நிரப்பி அதன் வாய்ப்புறததைதேங்காயால் மூடி அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்து அது கீழே விழாமல் ஆடும் தமிழரின் பாரம்பரிய நாட்டுப்புற நடனக்கலையாகும். கரகாட்டம் என்பதை நீர்ப் பானை நடனம் என்றும் அழைக்கிறார்கள், காரணம், கரகம் என்பது ஒரு பானை வடிவ கமண்டலத்தைக் குறிக்கும். மாரியம்மன் (மாரி என்றால் மழை என்று பொருள்) கோவில் திருவிழாக்களில், அம்மனின் வடிவமாகக் கருதப்படும் நதிகளில் இருந்து நீரெடுத்து வந்து பூஜைகள் செய்வது வழக்கம். அவ்வாறு குடங்களில் நீரெடுத்து ஊர்வலமாக வரும்போது, பக்தர்கள்




▪ வெற்றியோ தோல்வியோ எதுவரினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும் போது பகைவனும் நம்மை மதிக்க தொடங்குவான்.! *– அம்பேத்கர்*

அருள் வந்து ஆடுவதுண்டு. அதுதான் கரகாட்டக் கலையின் ஆதி வடிவம். பொதுவாக பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட மண் குடத்தில் வேப்பிலை, பூ போன்றவற்றைக் கொண்டு உருவாக்கிய கரகத்தை தலையில் வைத்தபடி,

*"ஒண்ணாங் கரகமடி எங்க முத்துமாரி*
*ஓசந்த கரகமடி எங்க முத்துமாரி*
*ரெண்டாங் கரகமடி எங்க முத்துமாரி*
*ரெத்தினக் கரகமடி எங்க முத்துமாரி"*

என்று கோயில் திருவிழாவில் மாரியம்மனைப் புகழ்ந்து பாடி ஆடிய பண்டைய நாட்டுப்புற நடனம். கால மாற்றத்தால் மண் குடத்திற்கு பதில் செம்பு, பித்தளை போன்றவற்றாலான குடத்தை அலங்கரித்து அதில் அரிசி அல்லது தானிய விதைகளை நிரப்பி அதன் மேல் பகுதியை மூடி கிளி, அன்னம், புறா போன்ற அலங்கார பொம்மையை பொருத்திய கரகத்தை தலையில் எடுத்து வைத்து நையாண்டி மேளம் மற்றும் நாதஸ்வரத்தில் இருந்து பிறக்கும் இசைக்கு தகுந்தவாறு ஆடினால் ஊரே கூடி நின்று வேடிக்கைப் பார்க்கும் கரகாட்டத்தை. கோயில் திருவிழாவில் இருந்த கரகாட்டம் மக்களை மகிழ்விக்கும் ஒரு கலையாக பயணிக்க ஆரம்பித்தது. கோயில்களில் ஆடிய கரகத்தை சக்தி கரகம் என்றும் பொது மக்களை மகிழ்விக்கும் கரகத்தை ஆட்டகரகம் என்றும் அழைத்தனர். மேலும் கரகம் எந்த பாத்திரத்தில் செய்யப்படுகிறது என்பதைப் பொருத்து தோண்டிக்கரகம் என்றும் செம்புக்கரகம் என்றும் அழைத்தனர். தோண்டிக்கரகம் என்பது மண்ணால் செய்யப்படுவது, செம்புக்கரகம் என்பது பித்தளையால் செய்யப்படுவது. தொடக்கத்தில் ஆண்கள் மட்டுமே ஆடிய இந்த ஆட்டத்தை இன்று பெண்களும் ஆடுகின்றனர். இவ்வாட்டத்திற்கு நையாண்டிமேளம் மட்டுமன்றி தவில், பம்பை, உடுக்கை, சத்துக்குழல், செண்டை மேளம், பறை என பல இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன. மேளம் முழங்க, நாதஸ்வரத்தில் பாடல் வாசிக்க அந்த இசைக்கேற்ப கரகாட்டக் கலைஞர்கள் தன் உடலைமட்டும் அசைத்து தலையில் உள்ள கரகம் கீழே விழாதபடி ஆடி மகிழ்விப்பார்கள்.

இன்று திரைப்படக் கலை, கணினி தொழில்நுட்பத்தை தனக்குள் இணைத்துக்கொண்டு பல கிராபிக்ஸ் சாகசங்களை செய்வது போல கரகாட்டக் கலையும் காலப்போக்கில் ரசிகர்களை ஈர்க்க, தலையில் கரகம் வைத்தபடி ஏணிகளில் ஏறுவது, கரகம் விழாமல், கண் இமைகளால் கீழிருக்கும் ஊசியை எடுப்பது, கைக்குட்டையை எடுப்பது என சில சாகசங்களை தன்னுடன் இணைத்துக்கொண்டன. அதுமட்டுமன்றி கராகட்டம் ஆடிக் கொண்டிருக்கும் போது ஒருவரைப் படுக்க வைத்து அவரது நெஞ்சில் வாழைக்காயை வைத்து, கராகட்டம் ஆடுபவர்கள் கண்ணைக் கட்டிக் கொண்டு, கரக ஆட்டம் ஆடிக்கொண்டே, கரகம் கீழே விழாமல், கத்தியால் வாழைக்காய் வெட்டுவதைப் பார்வையாளர்கள் உற்சாகத்துடன் கண்டு களிக்கின்றனர். அதேபோல் கரகாட்டக்காரர்கள் வட்டமான தீப்பந்தத்திற்குள் நுழைந்து வெளியே வருவது, சிறு ஏணியின் மீது ஏறி தீப்பந்த விளையாட்டு செய்வது போன்ற ஆபத்தான சர்க்கஸ் சாகசத்தையும் செய்கின்றனர். கரகாட்டக்காரர்கள் அகன்ற பித்தளைத் தட்டு மீது இருகால்களையும் வைத்து தட்டை நகர்த்திக் கொண்டே கரகாட்டம் ஆடுகின்றார்கள். இன்று நகரங்களில் பொதுமக்கள் மத்தியில் கரகம் ஆடுபவர்கள் ஒருகரகத்தின் மேல் மற்றொன்று என ஏழு கரகத்தை தலையில் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி அது கீழே விழாமல் மக்களை ஆடி மகிழ்விக்கின்றனர்.மேலும், சில கரகாட்டக் கலைஞர்கள் சைக்கிள் பெடல் மீது நின்று சைக்கிள் ஓட்டிக் கொண்டே கரகாட்டம் ஆடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கரகாட்டக் கலைஞர்கள் கரகாட்டத்தில் பல சாகசச்செயல்களை நிகழ்த்திக் காட்டி கரகம் ஆடி வருவது அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவும் மற்றும் தனக்கு சோறுபோட்ட கரகாட்டக் கலையை அழிவின் விளிம்பிலிருந்தும் காப்பதற்கும்தான்.



கரகாட்டக் கலையை நம் குழந்தைகளும் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்கு முக்கியக்காரணம் நமது பாரம்பரியக் கலை அடுத்த தலைமுறையிலும் பயணிக்க வேண்டும் என்பதற்குத்தான். பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் நடைபெறும் கலை விழாக்களில் மாணவர்கள் கரகாட்டம் ஆடுவதன் மூலமும், தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல் மற்றும் கிராமியத் திருவிழாக்களில் கரகாட்டம் ஆடுபவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதன் மூலமும் கரகாட்டக் கலையை வாழவைக்கலாம். மேலும் அரசு விழாக்கள், கட்சி விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் செண்டைமேளம் போன்ற கேரளாவின் கலைநிகழ்ச்சியைத் தவிர்த்து கரகாட்டக் குழுவிற்கு வாய்ப்பு வழங்கலாம்.

திரைப்படத்தின் தாக்கத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட கிராமீயக் கலைகளில் கரகாட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. கரகாட்டக் கலையில், பரத நாட்டியத்தின் நளினத்தையும், உடல் மற்றும் மன நலத்திற்காக, யோகாசனத்தில் கைகளால் செய்யப்படும் முத்திரைகளான, ஹஸ்த முத்திரைகளையும் கரகாட்டத்தில் காணலாம் என ஆட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆகவே கரகாட்டத்தை கற்றுக்கொள்வதன் மூலம் நளினத்தையும் முத்திரைகளையும் அதன் பயன்களையும் நம் குழந்தைகள் பெறுவார்கள். தற்போது இந்த கரகாட்டம் என்னும் நடனக்கலை பல்வேறு உடற்பயிற்சி நிலையங்களில் உடலினைச் சீராக வைத்துக்கொள்ள கற்றுக்கொடுக்கப் படுகிறது. கரகாட்டத்தில் கரகத்தை தலையில் வைத்து அது கீழே விழாமல் உடலை வளைத்து ஊசியை எடுத்தல், கைக்குட்டையை எடுத்தல், உருளும் பலகையில் நடத்தல் போன்ற சாகசங்கள் நம் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பதன் வாயிலாக நல்ல உடற்பயிற்சியும் மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சியையும் அவர்கள் கற்றுக்கொள்ள முடியும். இன்றும் கலையம்சம் நிறைந்த கரகாட்டத்தைக் கிராமப்புறங்களில் ஒருசில பகுதிகளில் காண முடிகிறது என்றால் அதற்குக் காரணம் படித்த பெண்கள் சிலர் கரகாட்டம் கற்றுக்கொண்டு ஆட வந்ததுதான். இது தொடரவேண்டுமெனில் இளைய தலைமுறைக்குள் கரகாட்டம் செல்லவேண்டும்.

எனவே பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை வெறும் மேற்கத்திய நடனத்தைக் கற்கவும், பரத நாட்டியத்தைக் கற்கவும் ஊக்குவித்து அவர்களை பயிற்சி வகுப்பிற்கு அனுப்புவது போல கரகாட்டக் கலையையும் கற்றுக்கொள்ள ஊக்கமளியுங்கள். அது வெறும் நடனம் அல்ல நம் கலாச்சாரம் பண்பாடு. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற நல்ல உடற்பயிற்சி, மனப்பயிற்சி என்னும் மிகப்பெரிய சொத்து. அதைப் பேணிக்காக்கவேண்டியதும் அடுத்த தலைமுறைக்கு சொல்லிக்கொடுப்பதும் நமது கடமை. நமது கடமையை நிறைவேற்றுவோம்.

**– இன்னும் விளையாடலாம்**

# இன்றைய இந்தியாவில் பெண் குழந்தைகளின் நிலையென்ன?

ஜனவரி 24 தேசிய பெண் குழந்தைகள் தினம். இந்த நாட்டில் அதாவது இந்தியாவில் பெண்களின் நிலை என்ன? சுதந்திரமாக இந்த நாட்டில் பெண் (கள்) குழந்தைகள் வாழ முடியுமா? அதற்கு இன்று நம் நாட்டை ஆளும் பா.ஜ.க மற்றும் அதன் பரிவாரங்கள் அதை அனுமதிக்குமா? நிச்சயம் இது நடக்காது காரணம் இதோ:-

உலகிலேயே பெண்களுக்கு மிகவும் ஆபத்தான நாடு என்ற பெருமையை இந்தியாவுக்கு பிஜேபி பெற்றுக் கொடுத்திருக்கின்றது. அவர்கள் நடத்திய போராட்டம் வீண் போகவில்லை. காஷ்மீரில் 8 வயது சிறுமி ஆசிஃபா மிகக் கொடூரமாக பிஜேபி- ஆர்.எஸ்.எஸ் காவி பயங்கரவாதிகளால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்ட போது, குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக பாஜகவைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் பேரணியில் கலந்து கொண்டார்கள்.

நாடு முழுவதும் மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் ஆசிஃபாவுக்காக குரல் கொடுத்தபோது காவி பயங்கரவாதிகள் ஆசிஃபாவின் கொலையை நியாயப்படுத்தி வந்தார்கள். கதவே இல்லாத கோயிலில் எப்படி அடைத்து வைத்து பாலியல் பலாத்காரம் செய்திருக்க முடியும் என்று கேள்வி கேட்டபுண்ணியவான் நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த எச். ராஜா. ஆனால் அது அப்பட்டமான பார்ப்பனப் பொய் என்பது நிரூபிக்கப்பட்டது.

“அந்தப் பெண் கொல்லப்பட்டது நல்லது, ஏனெனில் அவள் கொல்லப்படவில்லை என்றால் நாளைக்கு இந்தியாவுக்கு எதிராக மனித வெடிகுண்டாக உருவாகியிருப்பாள்” என்று



கேரளாவில் வங்கி மேலாளராகப் பணியாற்றி வந்த ஓர் ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதி சொல்லியதும் உண்டு..

இவ்வளவு நடந்தும் நமது பிரதமர் என்பவர் (மோடி) வாயைத் திறக்கவில்லை. அய்.நா.வின் பொதுச் செயலாளர் அன்டோனியோ கெட்டரஸ் இந்த கொடூரத்தைக் கண்டிக்கும் நிலை உருவான பிறகே மோடி வாய்திறந்தார்; அமைச்சர்களையும் பதவி விலக வைத்துள்ளார்.

இதுதான் பெண்கள் பற்றிய ஆர்.எஸ்.எஸ் பிஜேபி காவி பயங்கரவாதிகளின் உண்மையான நிலைப்பாடு. அவர்களை இயக்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனிய சித்தாந்தம் அடிப்படையில் பெண்களை மிகக் கீழ்த்தரமான உடைமையாகக் கருதும் கருத்தியலைக் கொண்டது. நாடு முழுவதும் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறை அதிகரித்திருப்பதற்குக் காரணம்.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தின் படி 2015 ஆம் ஆண்டு மட்டும் 34651 பாலியல் வன்கொடுமை வழக்குகளும், 4437 பாலியல் வன்கொடுமை முயற்சி வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறுவர்கள், சிறுமிகள் மீதான வல்லுறவுத் தாக்குதல் வழக்குகளும், 2012-2016 இடைப்பட்ட காலத்தில் இரண்டு மடங்காக அதிகரித்து இருக்கின்றது. 2015 ஆம் ஆண்டு மட்டும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வழக்குகளில் 14913 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்கு எதிராக வன்முறை குறித்து ஒரு மணி நேரத்துக்கு 26 வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

தொடர்ச்சியாக பெண்கள் மீதான வன்முறை அதிகரிப்பதற்குக் காரணம் இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் பார்ப்பனியத்தை தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்களாய் இருப்பதே ஆகும். பார்ப்பனியம் ஒட்டுமொத்தமாக பெண்களின் உரிமைகள் அனைத்தையும் நிராகரிக்கின்றது. தற்போது வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வுகள் கூட சுகாதாரம், பாகுபாடு பார்த்தல். கலாசார மரபுகள், பாலியல் வன்கொடுமை, பாலியல் அல்லாத வன்கொடுமை, ஆள்கடத்தல் என்ற ஆறு பிரிவுகளின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் பாகுபாடு பார்த்தல், பாலியல் வன்கொடுமை, ஆள்கடத்தல் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளில் எதுவும் மிகைப்பட்டது என்று நாம் கருதவில்லை. கலாசார மரபுகள் என்ற பகுதியில் பெண் பிறப்புறுப்பு சிதைவு, குழந்தை திருமணம், கட்டாயத் திருமணம், உடல்ரீதியான துன்புறுத்தல், பெண்சிசுக் கொலை போன்றவையும், பாலியல் வன்கொடுமை என்ற பிரிவில் பாலியல் ரீதியான வன்முறை, குடும்ப வன்முறை, யாரென்று தெரியாத நபரால் பலாத்காரம் செய்யப்படுவது போன்றவையும், ஆள்கடத்தல் பிரிவில் வீட்டில் அடிமைப்படுத்துதல், கொத்தடிமையாக நடத்துதல் போன்றவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு இந்தியாவில் உள்ள 550 அறிஞர்களிடம் கருத்து கேட்கப்பட்டு அதன் அடிப்படையிலே முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.


■ மாபெரும் லட்சியத்தையும் வெற்றியில் நம்பிக்கையையும் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டால், யாரும் உயர்ந்த நிலையை அடைய முடியும்! – அம்பேத்கர்

தோழர் கா.தமிழரசன்

இதில் இந்தியா முதலிடத்திலும், ஆஃகானிஸ்தான் இரண்டாமிடத்திலும், சிரியா மூன்றாமிடத்திலும், சோமாலியா நான்காம் இடத்திலும், சௌதி அரேபியா ஐந்தாம் இடத்திலும், பாகிஸ்தான் ஆறாம் இடத்திலும், காங்கோ குடியரசு ஏழாம் இடத்திலும், ஏமன் எட்டாம் இடத்திலும், நைஜீரியா ஒன்பதாவது இடத்திலும் அமெரிக்கா பத்தாவது இடத்திலும் உள்ளது. மேற்கூறிய நாடுகளின் பட்டியலில் இந்தியாவையும், அமெரிக்காவையும் தவிர பெரும்பாலான நாடுகள் இஸ்லாமிய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. இதை வைத்துக்கொண்டுதான் பெண்களை பாலியல் அடிமைகளாக நடத்தும் இஸ்லாமிய நாடுகளை எல்லாம் விட்டுவிட்டு இந்தியாவிற்கு முதலிடம் கொடுத்தது இந்தியாவின் பெயரைக் கெடுக்க நடக்கும் சதி என்று கூப்பாடு போட்டுக்கொண்டு இருக்கின்றனர். அந்த நாடுகள் எல்லாம் பாலியல் வல்லுறவு குற்றவாளிகளுக்கு ஆதரவாகப் போராட்டம் செய்பவர்கள் இல்லாமல் இருப்பதால் ஒரு வேளை அந்த நாடுகளுக்கு முதலிடம் கொடுக்கப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் மோடி பதவியேற்றவுடன் சந்து பொந்துகளில் கஞ்சா விற்றவன், விபச்சார தொழில் செய்து வந்தவன், லேகியம் விற்றவன் என அனைவரும் சாமியார்கள் என்ற பெயரிலும், எம்.எல். ஏக்கள், எம்.பிக்கள் என்ற பெயரிலும் சுதந்திரமாக உலாவர ஆரம்பித்தார்கள். பாலியல் வழக்கில் மாட்டிய நித்தியானந்தா, ஆஸ்ராம்பாபு, ராம் ரஹீம் என அத்தனை சாமியர்களுடனும் நாட்டின் பிரதமர் நெருக்கமான உறவில் இருந்தார். ஒரு பிட்டு பட நடிகரை உத்திரப் பிரதேச முதலமைச்சர் ஆக்கினர். நாட்டிலேயே அதிகபட்சமாக பாலியல் குற்றவாளிகளை எம்.எல்.ஏ, எம்.பிக்களை கொண்ட கட்சியாக பாஜகவே விளங்குகின்றது. பாஜகவில் மட்டும் 12 பேர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் உள்ளது. அதே போல மற்றொரு காவிக் கட்சியான சிவசேனாவில் 7 பேர் உள்ளார்கள்.

தமிழ்நாட்டில் பல காவி பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட வழக்குகளில் அவர்களின் முறைகேடான பாலியல் உறவுதான் கொலைக்குக் காரணம் என காவல்துறை விசாரணையில் தெரியவந்தது. அரியலூர் நந்தினியை கருவறுத்துக் கொன்ற மணிகண்டன் இந்து முன்னணி அமைப்பைச் சார்ந்தவன். தமிழ்நாட்டுப் பெண்களை வைத்து விபச்சார தொழில் செய்ய முயன்ற நிர்மலா தேவி பிஜேபியைச் சேர்ந்தவர். இதுபோன்ற நிலைமையை நாம் மற்ற நாடுகளில் பார்க்க முடியாது. அங்கே பாலியல் குற்றவாளிகள் மாட்டிக் கொண்டால் சட்டப்படி தண்டிக்க வாய்ப்பிருக்கின்றது. இஸ்லாமிய நாடுகளில் பல, மிகக் கொடூரமான தண்டனைகளை விதிக்கின்றன. ஆனால் இந்தியாவில் நிலைமை அப்படியல்ல. நாட்டின் பிரதமர் பாலியல் குற்றவாளிகளோடு சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்கின்றார். அவரது கட்சியினர் பாலியல் கொலை குற்றவாளிகளுக்கு ஆதரவாகப் பேரணி போகின்றார்கள். அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை ஆதரித்துப் பேசுகின்றார்கள்.

நாட்டில் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் பார்ப்பனியம் அங்கீகாரம் வழங்குகின்றது. வட மாநிலங்களில் நடைபெறும் கப் பஞ்சாயத்துக்கள் முழுக்க முழுக்க மனுநீதியை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கு எதிராக நடத்தப்படுபவை. பெண்களுக்கு எதிரான வன்முறை என்று எடுத்துக்கொண்டால் வரதட்சணைக் கொலைகள், கணவனை இழந்த பெண்கள் மறுமணம் புரிந்துகொள்ளும் போது அல்லது அதற்கு சமூகம் மறுக்கும் போது, தங்களது பாலியல் தேவைகளை மாற்றுவழியில் பூர்த்திசெய்து கொள்ள முயலும் போது கொல்லப்படுவது, அல்லது அவர்களை சமூக புறக்கணிப்பு செய்வது, பெண் குழந்தைகள் பிறந்தால் சொத்து வெளியே சென்றுவிடும் என்று அதைக் கருவிலேயே அழிப்பது, வேலைக்குச் செல்லும் பெண்கள் எல்லாம் நடத்தை கெட்டவர்கள் என்று சொல்லி அவர்களை வீட்டிலேயே அடைத்துவைத்து அடிமையாக நடத்துவது, தங்களது வாழ்க்கை துணையைப் பற்றி சுதந்திரமாக முடிவெடிக்கும் வயது வருவதற்குள் வலுக்கட்டாயமாக சிறுவயதிலேயே திருமணம் செய்துவைப்பது, பெண்களை பாலியல் ரீதியான பொருளாகக் கருதி அவர்களை அழகுப் பதுமைகளாக நடத்துவது, சாதிக் கலவரங்கள் ஏற்படும் போதும் மதக்கலவரங்கள் ஏற்படும் போதும் பெண்களை பாலியல் வன்புணர்வு செய்வதை இலக்காகக் கொண்டு செயல்படுவது என அனைத்துமே பார்ப்பனியத்தாலும், அது உருவாக்கிய சாதியாலும் இந்திய சமூகத்தில் உருவாக்கப்பட்டது.



அதற்காக மற்ற மதங்கள் எல்லாம் பெண்களுக்கு எல்லா உரிமைகளையும் கொடுத்திருக்கின்றது என்பது அர்த்தமில்லை. அனைத்து மதங்களுமே பெண்களுக்கு எதிரான கருத்துக்களை கொண்டதுதான். பெண்களின் மீது வன்முறை செலுத்துவதுதான். பல இஸ்லாமிய நாடுகள் மதரீதியான சட்டத்தை வரித்துக் கொண்டவை. அங்கே ஜனநாயகம் என்பது மதச்சட்டங்களுக்கு உட்பட்டவைதான். ஆனால் இந்தியா தன்னை ஒரு மதச்சார்பற்றதாக அறிவித்துக் கொண்ட நாடு. இங்கே பெண்களை மத ரீதியான கருத்தியலின் அடிப்படையில் ஒடுக்குவதையும், அவர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விடப்படுவதையும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் ஒரு இஸ்லாமியப் பெண்ணோ அல்லது கிருஸ்தவப் பெண்ணோ பாலியல் வன்முறைக்கு பலியாக்கப்பட்டால் எந்த ஒரு இஸ்லாமிய, கிருஸ்தவ அமைப்புகளும் அந்தக் கொடுஞ்செயலை செய்த குற்றவாளிகளுக்கு ஆதரவாகப் போராட மாட்டார்கள். அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றுதான் போராடுவார்கள். ஆனால் இந்து அமைப்புகள் மட்டும்தான் பாதிக்கப்பட்டவன் என்ன சாதி, குற்றம் புரிந்தவன் என்ன சாதி என்று பார்த்து, போராடலாமா வேண்டாமா என்று முடிவு செய்யும்.

இந்தியாவைப் பொருத்தவரை பெண்கள் மீதான வன்முறையைத் தீர்மானிப்பதில் சாதியும், அதைக் காப்பாற்றும் மதமும் முக்கிய பங்கு வகிக்கின்றது. பெண்களைப் பற்றி ஆண்கள் கொண்டிருக்கும் ஆணாதிக்க சிந்தனை மாற வேண்டும் என்றால் நாம் பெண்ணடிமைத்தனத்தைப் போற்றி பாதுகாக்கும் பார்ப்பன இந்துமதத்தை ஒழிக்க வேண்டும். மேலும் பெண்கள் தங்களை இழிவுபடுத்தும், அடிமைப்படுத்தும் மதங்கள் எதுவாக இருந்தாலும் அதைத் தூக்கி குப்பைத்தொட்டியில் வீசிவிட்டு அதிலிருந்து வெளியேற வேண்டும். பெண்களின் மீது நிகழ்த்தப்படும் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக போராடும் முற்போக்கு அமைப்புகளில் தங்களை இணைத்துக் கொண்டு, ஆதிக்க சக்திகளுக்கு எதிராக களமாட வேண்டும். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இன்றைக்கு மத்தியில் ஆளும் பாஜக அரசை ஆட்சி அதிகாரதிலிருந்து அப்புறப்படுத வேண்டும். அதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து அப்பணியை சிறப்பாக செய்து முடிப்போம் என்று உறுதியேற்போம். ●



▪ உங்களின் வறுமை உடன் பிறந்தது; தவிர்க்க முடியாதது, தீர்க்க முடியாதது என்றெண்ணுவது மடமை ஆகும். அடிமை வாழ்வுதான் கிடைத்த கதி என்ற எண்ணத்தைக் குழிதோண்டிப் புதையுங்கள். - அம்பேத்கர்

# அய்ம்பது ஆண்டு திராவிட கட்சிகளின் ஆட்சியில்

# தமிழகம் வளர்ந்திருக்கிறதா? வீழ்ந்திருக்கிறதா?

*"பாடலில் பழமுறை பலநடை என்பதோர்*
*காடு முழுதும் கண்டபின் கடைசியாய்ச்*
*சுப்ரமணிய பாரதி தோன்றி யென்*
*பாட்டுக்கு புதுமுறை புதுநடை காட்டினார்"*



என்று பாரதிக்கு புகழாரம் சூடிய சுப்புரத்தினம்; தான் எப்படி பாரதிதாசன் ஆனதுபற்றி குயிலில் எழுதுகிறார். வ.வே.சு. ஐயர், பாரதியாருடன் புதுவையில் சில காலம் தங்கியிருந்தபோது பாவேந்தருக்கு ஐயருடன் பழக்கம் ஏற்பட்டது. இதனால் ஐயரின் இறப்பிற்குக்கூட பாவேந்தர் இரங்கற்பா எழுதினார் என்பர். ஐயருடன் இவ்வளவு நெருக்கமாக இருந்த பாவேந்தர் சேரன்மாதேவி ஆசிரமத்தில் தொடர்ந்து நடந்துவந்த அக்கிரமங்களும் சாதிய வன்முறைகளும் பாவேந்தர் நெஞ்சில் சாதி மத எதிர்ப்புத்தீயை உண்டாக்கிற்று.

இதற்கிடையில் தந்தை பெரியார் எஸ்.இராமநாதன் அவர்களின் கட்டுரைகளான மூடப்பழக்கவழக்கங்களை எதிர்ப்பது, புராண இதிகாசங்களை விமர்சிப்பது போன்றவைகள் குடியரசில் தொடர்ந்து இடம்பெற்று வந்தன. இவைகள் வெகுவாகப் பாவேந்தரை பாதித்தது மட்டுமன்றி 1928ஆம் ஆண்டு தந்தை பெரியார் புதுவைக்கு சென்றிருந்தபொழுது பாவேந்தரைச் சந்தித்துப் பேசினார். அந்த ஆண்டுமுதல் தீபாவளி கொண்டாடுவதையே விட்டுவிட்டார் பாவேந்தர். அதோடு நில்லாமல் 1929இல் புதுவையில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் பாவேந்தரும் கலந்துகொண்டு தந்தை பெரியாருக்கு மாநாட்டுப்பந்தலில் ஒரு வரவேற்புப் பத்திரத்தையும் வசித்துக்காட்டினார் பாவேந்தர். அதே ஆண்டில் தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு எனும் நூலை எழுதி அது சுயமரியாதை நூலாக வெளிவந்தது.

பாவேந்தர் புதுவை முரசில் எழுதிய கவிதைகள் அனைத்தும் திரட்டப்பட்டு முதல் தொகுதியாக தொகுக்கப்பட்டு 1938இல் தமிழரின் புத்தாண்டு பரிசாக தந்தை பெரியாரின் சிறப்புரையுடன்(குடியரசில்) வெளிவந்தது.

6

இந்த நூலில் இடம்பெற்றுள்ள பெரும்பான்மையான கவிதைகள் அனைத்தும் மதவாதத்தை சாடும் அளவில் இடம்பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலைப்பற்றி தந்தை பெரியார் பேசுகையில் பெண்ணடிமை மூடநம்பிக்கைகளை அகற்றுதல் சாதியியல் எதிர்ப்பு விதவைக்கொடுமை சாதிபேதம் பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றவைகளை கண்டித்தும் எதிர்த்தும் முக்கியமாக பாமரர்களுக்கும் புரியும்படியாக எழுதப்பட்ட புத்தகம் இது என்று பாராட்டினார். தந்தை பெரியாரின் சுயமரியாதை சிந்தனைகள் பாவேந்தரிடம் தீவிரமடைந்த காலமிது என்பதை நாம் இங்கே புரிந்துகொள்ளவேண்டும்.

கம்யூனல் ஜி.ஒ, சமூகநீதி, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இடஒதுக்கீடு, வகுப்புரிமை மற்றும் ரிசர்வேஷன் என்றழைக்கப்படும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ போராட்டங்களே திராவிட இயக்க வரலாற்றில் மிக முக்கியமான போராட்டங்கள் என இன்றுவரை அழைக்கப்படுகின்றன என்றால் மிகையாகாது. இந்த மாபெரும் போராட்ட வரலாற்றில் அயோத்திதாசர் தொடங்கி ரெட்டைமலை சீனிவாசன், பிட்டி தியாகராயர், டாக்டர். டி.எம்.நாயர், முத்தையா முதலியார், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் மு. கருணாநிதி வரை என்றாலும் இதில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மற்றும் பெருந்தலைவர் காமராசர் ஆகியோருக்கும் இந்த போராட்டங்களில் பங்குண்டு என்பதை மறுக்கமுடியாது என்க.

எல்லாம் சரி ஆங்கிலேயர்கள் ஆட்சியில் வர்ணபேதம் எப்படி சாத்தியம் என்கிற கேள்வி நம்முள் இயல்பாகவே இந்த இடத்தில் எழவேண்டுமல்லவா? 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்ததினால் இவ்வளவு பெரிய பரந்து விரிந்த ஆனால் சிதைந்து கிடந்த தேசத்தை ஆள்வதில் சிக்கல் எழுந்தது. அதோடின்றி இருக்கிற ஒருசில அரசு பணிகளையும் அவர்களுக்கே கொடுக்க நேர்ந்தது. இது அன்றைய எழுதப்படிக்கத்தெரியாத நம்முடைய பாட்டன் பூட்டன்மார்களுக்கு தெரியவில்லை மாறாக அன்றைய நிலையிலேயே வேதம் கற்றிருந்த பார்ப்பனர் தங்களுக்கும் கணிதம் தெரியும் எனவே

**ஒரு வரலாற்று ஆய்வு**



■ பணம், பட்டம், பதவிகளுக்காக நாம் போராடவில்லை, நமது வாழ்வின் அடிப்படை உரிமைகளுக்காவும், மனிதர்களாக வாழ்வதற்காவுமே போராடுகிறோம். - *அம்பேத்கர்*

குமாஸ்தா பணிகளை எங்களுக்கே தாருங்கள் என்றார்கள். வெள்ளையர்களின் அன்றைய தேவையை இது ஒருவகையில் பூர்த்திசெய்வதாக இருந்தபடியால், பார்ப்பனர்களுக்கு தொடக்கத்தில் சிலபல அடிப்படை கணக்கர் பணிகள் அரசு பணிகளாக கொடுக்கப்பட்டன. பிறகு மெல்ல மெல்ல எல்லாப்பணிகளும் தங்கள் பிராமண சமூகத்திற்கே தரவேண்டுமெறு பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை வைத்தனர். அதன் பயனாக பணிகளையும் பதவி உயர்வுகளையும் பெற்றனர். ஆங்கிலேயர்களுக்கு தொடக்கத்தில் இந்த நாட்டின் அமைப்பு முறை பற்றிய புரிதல் இல்லாத காரணத்தால்; 1853இல் நெல்லூர் மாவட்ட வருவாய்த் துறையில் ஒரே சாதியை சேர்ந்த சுமார் 50 பேர்கள் கொண்ட பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இது மெல்ல மெல்ல உயர்ந்து 1894 முதல் 1904 வரையிலான காலகட்டங்களில் அனைத்து அரசுப்பணிகளிலும் பிராமணர்களே ஆதிக்கம் செலுத்தினர்.

இது பிராமணரல்லாதோருக்கும் பார்ப்பனர்களுக்கும் மனக்கசப்பையும் விரோத மனப்பான்மையும் உருவாக காரணமாக இருந்ததோடு, போராட்டங்களாக வெடித்தன. இந்த நிலை நீதிக்கட்சி ஆட்சிக்கு வரும்வரை பல வடிவங்களில் தொடர்ந்தது எனினும்; வெள்ளையர்கள்; பெருவாரியான சாதிய அமைப்புமுறைகள் இருப்பதையும் இவர்களின் ஒற்றுமையின்மையையும் பயன்படுத்திக்கொள்ள எதுவாக எப்பொழுதும் ஒருவித கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். அதற்கு அரசு உயர் பதவிகளில் எல்லாம் பார்ப்பனர்களே எல்லா இடங்களையும் நிரப்பிக்கொண்டனர் என்பதும் ஒரு காரணமாயிற்று.

உண்மையில் சொல்லப்போனால் வெள்ளைக்காரர்கள் வரும்வரை நமக்கு அதாவது சூத்திரர்களுக்கு கல்வி உடை நாகரீகம் எல்லாம் எட்டாக்கனியாகவே இருந்துவந்தது. வெள்ளையர்கள் வந்தபின்புதான் அனைவருக்கும் சமமான கல்வி அடிப்படை அதிகாரங்களின் வேலைவாய்ப்பில் உரிமைகள் என கிடைக்கப்பெற்றது. அதனால்தான் தந்தை பெரியார் சுதந்திர இந்தியாவை வெறுத்தார். நீங்கள் (வெள்ளைக்காரர்கள்) போய்விட்டால் நாங்கள் மீண்டும் இங்கே உயர் சாதி இந்துக்களுக்கு அடிமைகளாகிவிடுவோம் எங்கள் சுதந்திரம் மீண்டும் மறுக்கப்படும் என்று சுதந்திர தினத்தை கருப்பு நாளாக கொண்டாட முடிவு செய்ததோடன்றி அதை நடத்தியும் காட்டினார் தந்தை பெரியார் என்பதை பிறகு விரிவாக பார்ப்போம்.

1835இல் மெக்காலே அறிமுகப்படுத்திய கல்விமுறையைத்தான் சில சில மாற்றங்கள் செய்து இன்றைக்கும் நடைமுறையில் பயன்படுத்திவருகிறோம்; மெக்காலே எனும் கல்விப்புரட்சியாளன் வரும்வரை நமக்குக் கல்வியே கிடையாது. இராமாயணமும், மகாபாரதமும், வேதங்களும், சாஸ்திரங்களும்தான் இந்தியாவில் பாடங்கள். அதுவும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே அவை கிடைக்கும். பார்ப்பனர் அல்லாத மற்ற ஜாதியினர் அனைவருக்கும் அதுவும் இல்லை. எழுத்தறிவு பெற்றிடக் கூட நமக்கு உரிமை இல்லை. எனவேதான் நமது முன்னோர்கள் கைநாட்டுகளாக இருந்தார்கள்.

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வரும்வரை நமக்கு; இன்னும் சொல்லப்போனால் பாண்டிய, சேர, சோழ, தெலுங்கு, கன்னட, மராட்டிய மற்றும் வடநாடுகளின் அரசுகளிலும் கல்வியே கிடையாது. இதை அனைத்தையும் நொறுக்கித்தள்ளியவர் 1835இல் தாமஸ் பேபிங்டன் மெக்காலே. பின்னாளில் வகுப்புரிமை, இடஒதுக்கீடு என்றெல்லாம் நாம் போராடிப் பெற்ற அனைத்து உரிமைகளுக்கும் மிகவும் அடிப்படையாக அமைந்தது அந்தக் கல்வி முறைதான் என்பதை நன்றியுடன் நாம் நினைத்துப்பார்க்கத்தான் வேண்டியுள்ளது.




“வார்தா” எனும் குலக்கல்வித்திட்டத்திற்கு முன்னோடியே மிஸ்டர் காந்திதான் சனாதானியான அவரால் மெக்காலேயின் கல்விக்கொள்கையை ஒப்புக்கொள்ள இயலவில்லை; 1937ஆம் ஆண்டு அக்டோபர் 22, 23 ஆகிய நாள்களில் மராட்டிய மாநிலத்தில் உள்ள வார்தா என்னும் ஊரில் மிஸ்டர் காந்தியின் தலைமையில் தேசியக் கல்வி மாநாடு கூடியது. ‘ஹரிஜன்’ இதழில் நாட்டின் கல்வி குறித்து விரிவான ஒரு கட்டுரையை காந்தி எழுதினார். அதில் கல்விமுறையின் 10 பலவீனங்களைப் பட்டியலிட்டிருந்தார்.

1. நமது மரபுக்கும் பண்பாட்டுக்கும் முரண்பட்டதாக இந்த மெக்காலே குமாஸ்தா கல்வி உள்ளது.
2. இந்தக் கல்வி, குழந்தையை நேரடியான சமுதாயச் சூழ்நிலையிலிருந்தும் உடல் உழைப்பிலிருந்தும் பிரித்துவிடுகிறது
3. கற்றவர்களைத் தனி இனமாக, பிரிவாக இன்றைய கல்வி உருவாக்கிவிட்டது
4. அரசு மற்றும் தனியார்க்கு பணியாளர்களாக மாணவர்களை மாற்றுவதற்கான பயிற்சி மட்டுமே இன்றைய கல்வி.
5. மாணவர்களின் மனதில் சமுதாய உணர்வு இன்றி சுயநல தனிமனித உணர்வு புகுந்துவிட்டது.
6. ஒரு நூற்றாண்டாகத் தொடரும் இந்த அந்நியர் கல்வியில் தொடக்கப் பள்ளி என்பது எந்த முன்னேற்றமுமின்றி வதங்கிவிட்டது
7. கல்வித் திட்டத்தின் பெரும்பகுதி வாழ்க்கைக்குப் பயன்படாததாக வீணானதாக உள்ளது.
8. பொதுமக்கள் கல்வி முன்னேற்றம் பற்றி இன்றைய கல்வி எண்ணிப்பார்ப்பதே கிடையாது.
9. இயந்திர முறையில் ஒரே மாதிரி கல்வியை அனைத்துக் குழந்தைகளுக்கும் - அவரவர் தேவை உணராமல் வழங்குகிறார்கள்.
10. கல்விமுறையும் தேர்வுகளும் கல்வியை மாணவர்களின் உள்ளத்தில் பயத்தை உருவாக்கிப் பெரிய சுமையாகவே மாற்றிவிடுகிறது

இதற்கு மாற்றாக காந்தியக் கல்வி ஆறு முக்கிய அம்சங்களைக் கொண்டது. அதன் முதல் அம்சம், ஏழாண்டு ஆதாரக் கல்வியைக் கட்டணமின்றி அரசே தரத்தோடு வழங்க வேண்டும் என்பது. இரண்டாவது



▪ குருட்டு பக்தி தன்னறிவை இழக்கச் செய்யும், பகுத்தறிவை பயன்படுத்தாமல் யாருடைய வாக்குறுதியையும் நம்பக்கூடாது. - அம்பேத்கர்



அம்சம், ஆதாரக் கல்வி முழுக்க முழுக்கத் தாய்மொழியில் அதாவது ஒரே மொழியில் "இந்தியில்" மட்டுமே நடைபெற வேண்டும். மூன்றாவது அம்சம், கைத்தொழில் மூலமோ, ஆக்கப்பணி மூலமோ கல்வி கற்றுத்தரப்படும். நான்காவது அம்சம், பள்ளியின் சட்ட திட்டங்களிலிருந்து தாங்கள் கற்க வேண்டிய தொழில் உட்பட மாணவர்களே தீர்மானித்து சுயகட்டுப்பாட்டுடன் ஒரு சமூகமாக பள்ளியை வழிநடத்துவார்கள். தங்களது சூழலோடு பொருந்துகிற கல்வி என்பது ஐந்தாவது அம்சம். ஆறாவது அம்சம், குடிமைப் பயிற்சி. நாட்டின் உயர்ந்த லட்சியங்களாக காந்தி கருதிய மதச்சார்பின்மை, வாய்மை, நேர்மை, பொது வாழ்வியல், சமுதாயப் பங்கேற்பு, அகிம்சை வழியில் உரிமைகளைப் பெறும் வழிகளை அறிதல் என அவரது கல்வி விரிவடைகிறது என்பது போல் தெரிந்தாலும் உற்று படித்தால் அதன் ஆபத்து புரியும் என்பது நம் போன்றோர் கருத்து.

இந்திய நாடு முழுக்க தொடக்கக் கல்வி முறையை மாற்றி அமைக்க டாக்டர் சாகிர் உசேன் தலைமையில் அம்மாநாட்டில் குழு அமைக்கப்பட்டு அதற்கு "வார்தா கல்வித் திட்டம்" என்று பெயர் கொடுக்கப்பட்டது. இந்த திட்டத்தில் ஏட்டுப் படிப்போடு உடலுழைப்பும் தேவை என்றும் மதம் தொடர்பான கல்வி இடம்பெறாது என்றும் சொல்லப்பட்டது. இந்திய பண்பாட்டை மாணவர்களுக்கு பாடமாக வைப்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்ததால், இதை முசுலிம் லீக்கும் தந்தை பெரியாரும் கடுமையாக எதிர்த்தார்கள்.

காந்தியின் பெருமுயற்சியால் வார்தாவிலும் செகாவோனிலும் சர்வோதய மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன என்றாலும், விரைவில் அவை தோல்வியே கண்டன. மதபோதனை இல்லாத கல்வி என்பதால், இஸ்லாமிய மதரஸா கல்வியாளர்களும், சாதி பார்க்காத கல்வி என்பதால் இந்துத்துவவாதிகளும் காந்தியக் கல்வியை எதிர்த்தார்கள். ஆரம்பத்தில், காந்தியின் கொள்கைப் பிடிப்போடு செயல்படுவதுபோல ஈடுபாடு காட்டிய மெக்காலேவாதிகள் சர்வோதயப் பள்ளித் திட்டத்தைப் பகிரங்கமாகவே எதிர்த்தார்கள்.


1948-இல் அமைக்கப்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் கல்விக் குழு இந்தியக் கல்வியை - ஆக்ஸ்போர்டு கல்விக்கு நிகராக ஆக்க என்ன செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கவே அமைக்கப்பட்டது. காந்தியின் ராட்டையும் கலப்பையும் நம் கல்விக்கூடங்களுக்குள் நுழைந்துவிடாமல் தடுப்பதில், அவரது வழிவந்ததாகக் கூறிக்கொள்ளும் இந்திய ஆட்சியாளர்களே அதிக உக்கிரத்தோடு செயல்பட்டுள்ளார்கள் என்பதே வரலாறு. விதிவிலக்காக கோத்தாரி கல்விக் குழு நமது வகுப்பறைகளுக்குள் தறி வாத்தியார் ஒருவரை அனுப்பிவைத்தது. மற்றபடி, எல்லாக் கல்விக் குழுக்களுமே மெக்காலேவாதிகளால் அமைக்கப்பட்டவையே. மேலும் மத ஒருங்கிணைப்பில் செய்த அதே போலதொரு மாபெரும் பிழையைத்தான் மொழி சார்ந்த ஒருங்கிணைப்பிலும் செய்துள்ளார் காந்தி.

தன்னுடைய கற்பனை சக்திக்கு முக்கியத்துவம் கொடுத்தாரே தவிர, நிலவியல் ரீதியாக நிலவும் யாதார்த்தமான கருத்தியலை காந்தி உணர்ந்திருக்கவில்லை. இந்திய சுயாட்சிக்காக நாட்டையே ஒருங்கிணைந்த தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்காக "இந்தி" என்ற மொழியை பொதுமொழியாக அறிவித்தார். அவர் அன்று செய்த இந்த தவறுதான், தமிழகத்தில் இன்றளவும் "இந்தி" மொழி திணிப்பு நடத்தப்பட்டு வருவதற்கும், அதை தமிழர்கள் தொடர்ந்து எதிர்ப்பதற்கும் தொடக்கப்புள்ளி ஆகும். குறிப்பாக டெல்லி இந்திமயம் ஆக்கப்பட்டதற்கும் காரண கர்த்தா மிஸ்டர் காந்தியே.

இவை அனைத்தும் காந்தியின் தவறுகள் மட்டுமல்ல அவரது அரசியல் தோல்விகளும் கூட. ஒவ்வொரு அரசியல்வாதியும் காந்தியின் கொள்கைகளையும், அவரது தவறுகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் சுதந்திர இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலத்தினை நோக்கி மக்களை இணைத்து நடைபோட வேண்டும் என்பதே இந்த வரலாற்று ஆய்வுத்தொடரின் முக்கிய நோக்கம் ஆகும். ஒரு மாமனிதரின், நாட்டின் புனிதரின், மகாத்மாவின் இரு பக்கங்களையும் தெரிந்துகொள்வதில் தவறு ஒன்றும் இல்லையே?

இதை எதிர்த்து 09.01.1938 மற்றும் 06.02.1938இல் குடிஅரசில் தந்தை பெரியார் இப்படி எழுதுகிறார்;

> அதாவது, காந்தியார் விரும்பும் வார்தா கல்வித்திட்டம் அமுலுக்கு வந்து அவனவன் ஜாதித்தொழிலே அவனவனுக்கு கற்பிக்கப்படவேண்டும் என்கின்ற முறை ஆரம்பித்துவிட்டால் பதினென்குடி மக்கள் கதி அதோகதிதான் என்பதை எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆகவே இந்த நிலையில் இருக்கும் இந்தியர்களில் முஸ்லீம்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்த பிறவியில் தீண்டாமையோ, இழிவோ ஒழிவது என்பது காந்தி ராஜ்யத்திலோ, காங்கிரஸ் ராஜ்யத்திலோ சுலபத்தில் எதிர்பார்க்கக் கூடிய காரியமல்ல என்பதே நமதபிப்பிராயம்.
>
> பழைய காலத்து அரசர்களோ ஆரிய ஆதிக்கத்திற்கே அடிமையாய் இருந்ததால் ஆரியர்கள் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாது என்கிற ஆரியக் கொள்கையை அப்படியே காப்பாற்றிக் கொடுத்தவர்கள். அதனால் கல்வி பயிலுவதற்கு ஆரியர்களைத் தவிர மற்றவர்களுக்கு வாய்ப்பேயில்லை. கடவுள்களே அரசாண்ட காலம்



என்னும் ராமன் கிருஷ்ணன் காலத்திலும், அதன்பிறகு அரசாண்ட சேர, சோழ, பாண்டியர்கள் காலம் வரை பார்ப்பனர் தவிர மற்றவர்களுக்குக் கல்வியில்லை.

*என்கிறார் தந்தை பெரியார்.*

*23.10.1938 குடிஅரசு இதழில் எழுதிய கட்டுரையில் இப்படி கேட்கிறார் தந்தை பெரியார்;*

அதாவது, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் உங்களுக்கு ஏற்பட்ட நன்மையும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தால் ஏற்பட்ட நன்மையும் அடியோடு ஒழிந்து போகும்போல் இருக்கிறது. புதிய அரசியல் உங்கள் சமூகத்துக்கு எமனாய்த் தோன்றி இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். உங்கள் கல்வி ஒழிந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள். வார்தா கல்வித் திட்டப்படி இனி உங்கள் ஜாதித் தொழில்கள் என்பவை புதிப்பிக்கப்படப் போகின்றன. அப்படியானால் உங்கள் தொழில் என்ன? என்கிறார். வேதத்தை உச்சரித்தால் நாக்கையறுக்க வேண்டும், கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றவேண்டும், மனதில் இருத்தினால் நெஞ்சை பிளக்க வேண்டும் என்பன போன்ற கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டன!

வெள்ளைக்காரர்கள் ஆட்சி வந்த பிறகுதான் படிக்கக் கூடாதென்ற சமூகங்கள் படிக்க முன் வந்தது; இப்படிப் படிக்க முன் வந்ததன் பயனாக தாழ்த்தப் பட்டவர்களாக இதுவரை இருந்தவர்களும் பிற்போக்காகவும், கொடுமைப் பட்டவர்களாகவும், இருந்து வருகிறவர்களும் படிக்க முன் வந்து உத்தியோகத்துக்கு போட்டிபோட ஆரம்பித்துவிட்டார்கள். இதைப்பார்த்த காங்கரஸ்காரர்கள் இதன் தலையில் கைவைக்க யுக்தி செய்து தந்திரமாக வார்தா கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து திணிக்கப் பார்க்கிறார்கள்."

*1939இல் இராஜாஜி இந்தத் திட்டத்தை அமல்படுத்திய போது கடுமையாக எதிர்த்தார் தந்தை பெரியார். இராஜாஜி பதவி விலகியதைத் தொடர்ந்து, அப்போதைக்கு இத்திட்டம் கைவிடப்பட்டது; மீண்டும் 1952இல் தமிழ்நாட்டு முதலமைச்சராக இராஜாஜி பதவியேற்றார். பதவியேற்றவுடன் கிராமப்புறங்களில் இருந்து 6000 தொடக்கப்பள்ளிகளை இழுத்துமூடினார். மீதியுள்ள பள்ளிகளில் பாதி நேரம் கல்வியும், மீதி நேரம் அவரவர் தமது ஜாதியின் குலத்தொழிலைச் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டார். 13ஆம் நாள் ஜூன் 1953இல் திராவிடர்கழகம் நிர்வாகக்குழுவை கூட்டி, குலக்கல்வி எதிர்ப்புக்காக ஜூலை14 முதல் சட்டசபை மறியல் போராட்டம் நடத்துவது என முடிவுசெய்யப்பட்டது; 20 தேதி முதல் தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலும் மறியல் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது.*

*சட்டசபை மறியல் தொடங்கிய நாளில் இருந்த அரசு போராளிகளைக் கடுமையாக ஒடுக்கியது. தி.க.வின் முக்கியத் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். சென்னையில் மட்டும் தி.க. தோழர்கள் 1700 பேர் கைது செய்யப்பட்டனர். தூத்துக்குடி, கல்லக்குடி ஆகிய ஊர்களில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 10 தோழர்கள் வீரமரணம் அடைந்தனர். காவல்துறை தாக்குதலால் 50 தோழர்கள் படுகாயமுற்று மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டனர். 10 தோழர்கள் கை, கால்களை இழந்தனர்; சென்னை நீங்கலாக தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் நடந்த மறியலில் 2450 திராவிடர் கழகத் தோழர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்; 27ஆம் நாள் மே 1953இல் புத்தர் விழாவைக் கொண்டாடி அதன் இறுதியாக கணபதி உருவ பொம்மையை உடைத்து மண்ணோடு மண்ணாக்கி விடுங்கள்; நானும் திருச்சியில் உடைப்பேன் என முன்னமே அறிவித்திருந்தார் தந்தை பெரியார். திட்டமிட்டபடி விநாயகர் பொம்மை உடைப்புப் போராட்டம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து கிருஷ்ணன் பொம்மை உடைப்புப் போராட்டத்தையும் அறிவிக்கப்போவதாக அறிவித்தார் பெரியார் பிறகு அது கைவிடப்பட்டது.*

*1953 டிசம்பர் 2 மற்றும் 3 தேதிகளில் மதுரையிலும் ஈரோட்டிலும் நடைபெற்ற குலக்கல்வி எதிர்ப்பைத் தொடர்ந்து 1954 ஜனவரி 24இல் ஈரோட்டில் குலக்கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு கூட்டப்பட்டது. மேலும் தொடர்ச்சியாக தமிழ்நாடு முழுவதும் குலக்கல்வி எதிர்ப்பு மாநாடுகள் நடத்தப்பட்டன. மார்ச் 30இல் உடல்நலம் சரியில்லை என்று கூறி இராஜாஜி பதவி விலகியதைத் தொடர்ந்து; அதே ஆண்டு ஏப்ரல் 14இல் காமராசர் பொறுப்பேற்றார். ஏப்ரல் 18ஆம் நாள் குலக்கல்வித்திட்டத்தை நீக்குவதாக அறிவிப்பு வெளியானது. தந்தை பெரியார் என்ற ஒரு தன்னலம் கருதாத மாமனிதர் இல்லாமல் போயிருந்தால்...... இந்நேரம் என்ன ஆகியிருக்கும்? அதுவும் இன்றய காவி பயங்கரவாத ஆர் எஸ் எஸ் ஆட்சியில் என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன் !*

**– ஆய்வு தொடரும்**



▪ நீங்கள் உங்கள் நண்பரையும் உங்கள் நண்பர் உங்களையும் நன்றாக அறிந்து கொண்டால் நன்மையை யார் அதிகம் செய்தார்கள் என்பது விளங்கிவிடும். – *காமராஜர்*

மருத்துவர் எஸ்.சிவராஜ்



# வயதான பெண்/ ஆண்களை வதைக்கும் எலும்புப்புரை நோய் (Osteoporosis)

நமக்கு வயதாகும் போது எலும்புகளும் சேர்ந்தே பலவீனமாக ஆகும். எலும்புகளின் நுண்ணிய கட்டமைப்பு மாறி எலும்புத்தாது அடர்த்தி குறைந்து எலும்புகள் வலுவிழந்து இருக்கும். சாதாரணமாக கீழே விழுதல் போன்றவைகளில் கூட எலும்பு முறிய வாய்ப்பு அதிகம். இதுவே எலும்புப்புரை (Osteoporosis) வியாதி என்றழைக்கப்படும்.

இந்த எலும்புப்புரை பொதுவாக மாதவிடாய் நின்றுவிட்ட பிறகு பெண்களுக்கு ஆரம்பமாகலாம். முக்கிய ஹார்மோன்கள் இல்லாததே இதற்கு காரணம். இது ‘‘மாதவிடாய்க்கு பிந்தைய எலும்புப்புரை’’ என்றே அழைக்கப்படும். ஆண்களுக்கும் வயது முதிர்வின் போது இத்தகைய எலும்புப்புரை நோய் ஏற்படும்.

இப்போதைக்கு உலகில் ஒவ்வொரு 3 வினாடிக்கும் ஒரு எலும்புமுறிவு எலும்புப்புரை வியாதியால் ஏற்படுகிறது. 50 வயதுக்கு மேற்பட்ட மூன்று பெண்களில் ஒரு பெண்ணும், ஐந்து ஆண்களில் ஒரு ஆணும் எலும்புப்புரை வியாதியால் அவதிப்படுகிறார்கள். (2017 data)

இந்த வியாதி பொதுவாக முதுகு முள்ளந்தண்டு(Spine), இடுப்பு பந்து கிண்ணமூட்டு, தோள்பட்டை எலும்பு மற்றும் கை மணிக்கட்டு பகுதிகளில் எலும்பு பலமின்மையை உண்டாக்கி சிறு அடி மற்றும் பாரம் விழுந்தாலும் கூட எலும்புமுறிவை உண்டாக்கும்.

## எப்படி கண்டுபிடிப்பது?

50 வயதுக்கு மேலானவர்கள் தங்களது இரத்தத்தில் வைட்டமின் D அளவு மற்றும் எலும்பு அடர்த்தி சோதனை எனும் BMD Bone Mineral Densitytest செய்து தங்களது எலும்பு அடர்த்தியை அறிந்து கொள்ளலாம். எலும்பு அடர்த்தி குறைவாக இருப்பின் மருத்துவர் அறிவுரைப்படி சிகிச்சை பெற்று எலும்பு அடர்த்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

## வருமுன் காப்பதே மேல் – உடற்பயிற்சி

சிறுவயதில் இருந்தே உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிப்பதன் மூலம் எலும்பு அடர்த்தியை பராமரிக்கலாம். முக்கியமாக வயதானவர்களுக்கு நடைப்பயிற்சியுடன் உடற்பயிற்சியும் அவசியம்.

## உணவுப்பழக்கம்

- கால்சியம் என்னும் எலும்புச்சத்து மிக்க உணவுப்பொருட்களான பால் மற்றும் பாலாடை கட்டி, பீன்ஸ், பாதாம் மற்றும் பருப்பு வகைகள் அதிகம் சேர்க்கவும்.
- நமது உடலில் வெயில்படுமாறு (Sunlight enposure) செய்வதனால் தானாகவே வைட்டமின் D சத்து கிடைக்கும்.
- வைட்டமின் D சத்து அதிகம் உள்ள மாமிச உணவுப் பொருட்களான மீன் மற்றும் மீன் ஈரல் எண்ணெய், முட்டை மஞ்சள் கரு, மாட்டு ஈரல் போன்றவைகளைச் சேர்க்க வேண்டும்.
- காய்கறிகள் மற்றும் பழ வகைகள் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளுதல்.
- புரதச்சத்து மிக்க உணவுப் பொருட்களைச் சேர்த்தல்.
- சிகரெட் மற்றும் மது அருந்துவதைத் தவிர்த்தல்.

இவற்றுடன் உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறையை (Sedentary Life Style) மாற்றி உடற்பயிற்சி/ நடைப்பயிற்சி மேற்கொள்ளுவதுடன், ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளையும் சேர்த்து, 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் வருடம் ஒரு முறை மருத்துவரிடம் பரிசோதனை செய்துக் கொள்வதனால் இந்த எலும்புப்புரை வியாதியினால் முதியவர்கள் அவதிப்படாமல் வாழலாம். ●

சாதாரண எலும்பு



எலும்புப்புரையால் பாதிக்கப்பட்ட எலும்பு




▪ நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடு முன்னேறியதாக சொல்ல முடியாது. - *காமராஜர்*

# ஒரு கேள்விக்குறியின் ஊடாக

நாகை **பாலு**



"ஆடுவோமே
பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று ...!!
இது
எனது
பாட்டனின் குதூகலம் ...!!
அந்த சுதந்திரம் அடைந்து
முப்பதே ஆண்டுகளுக்குள்
எனது தந்தை
முணு முணுத்தார்...!!!!
"இந்தியக் கொல்லையில்
முல்லை தான் இல்லை ....!!
கள்ளியும் காளானுமாவது
களைபரப்பா
திருந்திருக்கக் கூடாதா ..!! என்று
ஆரம்பக் கவலை
அனலாக மாற
பத்தே ஆண்டுகளில்
பதைபதைத்து சாகிறார்...!
"வெள்ளைக்காரனை
வெளியேற்றி விட்டு
கொள்ளையடிக்கும் உரிமையை
உள்ளூர்காரனிடம்
ஒப்படைக்கத்தானா இந்த சுதந்திரம் ?
என்றபடி ....!!
அவரது சிதைக்கு எரியூட்டிய
அடுத்த நாள் முதல்
எனது சகோதரன்
இப்படிப் புலம்புகிறான் .....!!
"இரவில் வாங்கினோம்
விடியவே இல்லையே....!!!"
தெளிவுக்கு வந்தானே தவிர
அவன்
தெருவுக்கு வரவில்லை ...!!
இருளின் அடர்த்தி
இன்னும் கூட
விடியல் என்பது
வினாக்குறியாக
இந்தியச் சுதந்திரம்
இன்றளவும் மயக்கத்தில் ...!!

சாதிக் கொடுமை
தீரவில்லை ..!!
சமதர்மம்
வந்து சேரவில்லை ...!!
எண்பது கோடி மக்கள்
இன்றளவும்
வறுமைக் கோட்டுக்குக் கீழே தான்
வதைபட்டுக் கிடக்கிறார்கள் ...!!!
ஆனாலும்
அமெரிக்க அதிபர்
அங்கிருந்தபடியே
பாராட்டுகிறார் ...!!
"இந்தியா இனி
உலகிற்கே வழிகாட்டும் ..!!" என்று
எதற்கு ..?
ஊழலுக்கா..?
லஞ்சத்துக்கா ..?
கௌரவக் கொலைகளுக்கா ...??
மதவெறியால் மானுடம்
கொத்துக் கொத்தாகக்
குழிதோண்டிப் புதைக்கப்படுகிறதே
அந்த கொடுமைக்கா ?
எதற்கு இந்தியா இனி
வழிகாட்டப் போகிறது ..?
மேட்டை மேடாக்க
மேலும் குழிபறிக்கும்
ராட்சத யந்திரமாய்
அரசாங்கம்
கேட்டால் உயிர்பறிக்கும்
சாட்டைச் சொடுக்கோடு
அதிகாரம் ...!!
இரண்டுக்கும் இடையே
நீ ... நான் ?
சுரண்டலுக்கும் அறியாமைக்கும்
எதிரான போரை
சுயமரியாதையுள்ள எவனும்
தானே தான் முன்னெடுக்க வேண்டும் ...!!
தனித்தனியாக அல்ல ..!!
அலையலையாக...!!
புற்றின் ஈசலாய்
புறப்பட வேண்டும்
புலியின் வெறியோடும்
புயலின் வேகத்தோடும்....!!! •

▪ மாறுதல்கள் நிச்சயம் தவிர்க்க முடியாதவை. மாற்றங்களை எதிர்கொள்ள மன உறுதி வேண்டும். மாற்றம் என்பதைத் தவிர மாறாதது உலகில் இல்லை. *– கார்ல் மார்க்ஸ்*

# சட்டமும் பேஸ்புக்கும்

சுதந்திர நாட்டில் அனைவரும் சுதந்திரமாக இருக்கும் உரிமை இருந்தாலும் நாம் அனைவரும் அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பது விதி. விதி என்றுதான் குறிப்பிடுகிறேன், தலைவிதி என்று குறிப்பிடவில்லை, அரசியல் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பது விதிமுறை என்று தான் குறிப்பிடுகிறேன்.

குற்றம் செய்யாத நபர்களே கிடையாது என்று சொல்லும் காலகட்டத்தில் தான் இருந்து வருகிறோம். இன்றெல்லாம் மக்கள் அதிகம் பயன்படுத்துவது முகநூல் போன்ற சமூக வலைதளங்களைத் தான். அவர்கள் இன்று வெறும் பொழுதுபோக்கிற்கு மட்டும் பயன்படுத்தாமல் தன்னுடைய வெறுப்பு, விருப்பங்களை முகநூல் போன்ற சமூகவலைதளங்கள் மூலம் பகிர்ந்து வருகிறார்கள்.

அப்படி அவர்கள் பகிரும் கருத்துக்களில் பல்வேறு வகையில் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் அப்படி பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவே சில சட்டதிட்டங்களை வகுத்து உள்ளனர். அப்படி வகுக்கப்பட்ட சட்டதிட்டங்களை அனைவரும் தெரிந்து இருக்கிறார்களா? என்றால் இல்லை, என்ற பதிலே அதிகம் வருகிறது.

## 66 ஏ என்ன சொல்கிறது?

இந்தியாவில் சுதந்திரமாக கருத்துக்களை தெரிவிக்கவும், வெளியிடவும் பேச்சுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த *2000*-வது ஆண்டு தகவல் தொழில்நுட்ப சட்டப் பிரிவு *66*ஏ மற்றும் அதில் *2009*-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின்படி, சுதந்திரமாக கருத்துக்கள் வெளியிட தடை விதிக்கப்பட்டுள்ளது. பிறரை எரிச்சலூட்டும் வார்த்தைகள், அச்சுறுத்தல், ஏளனம், புண்படுத்துதல், பகை உணர்வைத் தூண்டுதல் போன்ற கருத்துக்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவோரைக் கைது செய்யலாம் என்று அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.


இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்க முடியும். தற்போது இச்சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டதையடுத்து, வலைதளக் கருத்துச் சுதந்திரம் மீட்கப்பட்டுள்ளது. இதுபோன்ற தகவல்களை முழுமையாக விரிவான ஆதாரங்களுடன் இந்தப் பகுதியில் தந்துள்ளோம்.

## தகவல் தொழில்நுட்பச் சட்டம்

இலக்கமுறை (டிஜிட்டல்) கையெழுத்து, பாதுகாப்பு, மற்றும் திருட்டு செய்தல் (ஹேக்கிங்) உள்ளிட்ட இணையப் பயன்பாடு மற்றும் வர்த்தகத்தைக், கட்டுப்படுத்த ஒரு சட்டக் கட்டமைப்பை அளிக்க ஜூன் *2000*-ஆம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றம் தகவல் தொழில்நுட்ப (IT) சட்டத்தை உருவாக்கியது. சட்டம் மின்னணு ஆபாசத் தகவல்களை வெளியிட குற்ற நடவடிக்கையாக்குகிறது. மேலும் சட்டத்தை மீறும் தனிநபர்களைக் கைது செய்யவும் எவ்விடங்களையும் ஒரு ஆணை இல்லாமல் தேடவும் காவலர்களுக்கு (போலீஸுக்கு) அதிகாரங்களை வழங்குகிறது.

## தகவல் தொழில்நுட்ப சட்டத் திருத்தம்(2008)

இணைய தளங்கள் மற்றும் உள்ளடக்கம் மேலும் தூண்டக் கூடிய அல்லது குற்றமுள்ளதாகக் கருதப்படும் குற்றச் செய்திகளைத் தடுக்க அரசு அதிகாரத்தை






▪ நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது. *- கார்ல் மார்க்ஸ்*

வலுப்படுத்தியது. தகவல் தொழில்நுட்ப சட்டத்திற்கு *(2000)* (ITA) ஒரு நிகராக *"2011* தகவல் விதிகள்" ஏற்கப்பட்டன. அதிகாரிகளால் ஆட்சேபணைக்குரியதாக கருதப்படும் குறிப்பாக "சிறார்களுக்குத் தீமையானது", "வெறுப்பானது", "தீங்கானது", அல்லது "பதிப்புரிமையை மீறுவதாக" உள்ளதாக இருக்கும் எந்த உள்ளடக்கத்தையும் இணைய நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்ட *36* மணி நேரத்திற்குள் அகற்ற வேண்டும் என தேவையளிக்கிறது. இணையக்கடை உரிமையாளர்கள் வாடிக்கையாளர்களின் புகைப்படங்களைப் பாதுக்காக்க வேண்டும்.

அவர்களுடைய கடைகளை எப்படி அமைக்கவேண்டும்?. அனைத்து கணினித் திரைகளும் பார்வையில் படும்படி இருக்கவேண்டும். வாடிக்கையாளர்களின் அடையாளங்கள் மற்றும் அவர்களின் உலாவல் வரலாற்றின் பிரதிகளை ஒரு ஆண்டு வரை வைத்திருக்கவேண்டும். இவ்வகைப் பதிவுகளை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் போன்ற பரைந்துரைகள் உள்ளன. *2003*-இல் இந்திய அரசு இணையப் பாதுகாப்பை உறுதிப்படுத்த "செயல்திறனுடன் நடவடிக்கை மற்றும் பயனுள்ள ஒத்துழைப்பு மூலம் இந்தியத் தகவல் தொடர்பு மற்றும் தகவல் உட்கட்டமைப்புப் பாதுகாப்பை மேம்படுத்த" இந்திய கணினி அவசரநிலைப் பிரதிசெயல் (CERT-IN) நிறுவனத்தை நிறுவியது.

அனைத்து உரிமம் பெற்ற இந்திய ஐஎஸ்பி-க்கள் சிஇஆர்டி-இன் முடிவுகளுக்கு இணங்க வேண்டும். மறு ஆய்வு அல்லது முறையீடுகள் இல்லை. இது குறிப்பிட்ட வலைதளங்களில் அணுக்களை தடுக்கிறது மற்றும் வேண்டுகோள்களை மறு ஆய்வு செய்கிறது. தொலைத் தொடர்புத் துறைக்கு (DOT) தடை உத்தரவுகளை வழங்கும் தனி அதிகாரத்தைப் பெற்றது.

## பிரிவு 66 முதல் 69 வரை

*66* ஏ பிரிவு: தகவல் தொழில் நுட்பச் சட்டம் *2008* ரொம்ப விரிவானது. சமூக வலைதளம் சார்ந்த குற்றங்களுக்கானது மட்டுமில்லை. தானியங்கி பணம் அளிக்கும் இயந்திரங்கள், வலைதள தகவல்திருட்டு, காப்புரிமை இதெல்லாமும் சேர்ந்தது. இணைய தளத்தில் தவறான, அவதூறான தகவல்களை பதிவதைப் பற்றியது தான் *66* ஏ பிரிவு. இந்த சட்டத்தின் *66* முதல் *69* வரையிலான எல்லாப் பிரிவுகளிலும் இணைய தளம் சார்ந்த குற்றங்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

யாரேனும் ஒருவர் கணினி சாதனத்தைப் பயன்படுத்தியோ அல்லது தொலைத்தொடர்பு சாதனத்தைப் பயன்படுத்தியோ விகல்பமான முறையிலோ (ஒருவருடைய மனதுக்கு வருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில்) அல்லது பயமுறுத்தலை விளைவிக்கும் முறையிலோ தகவல்களை அனுப்பினாலோ; அல்லது தவறு என்று தெரிந்தும் ஒரு தகவலைத் தொல்லை செய்யும் விதமாகவோ; அசவுகரியத்தை ஏற்படுத்தும் விதமாகவோ; அபாயம் ஏற்படுத்தும் விதமாகவோ; தடங்கல் ஏற்படுத்தும் விதமாகவோ; அவதூறு செய்யும் விதமாகவோ; ஊறு விளைவிக்கும் விதமாகவோ; பயமுறுத்தும் விதமாகவோ; பகைமை விளைவிக்கும் விதமாகவோ; வெறுப்பைத் தோற்றுவிக்கும் விதமாகவோ; அல்லது கெட்ட நோக்கத்துடன் மற்றவருக்கு அனுப்பினாலோ; அல்லது யாரேனும் ஒருவருக்குத் தொந்தரவு தரும் விதத்தில் அல்லது அசவுகரியத்தை விளைவிக்கும் விதத்தில் அல்லது தகவல் எங்கிருந்து அனுப்பப்பட்டது என்று தெரியாத விதத்தில் (ஏமாற்றும் நோக்கில்) அல்லது திசை திருப்பும் விதத்தில் தகவல்களை அனுப்பினாலோ அவருக்கு (தகவலை அனுப்பியவருக்கு)மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.



பிரிவு *67:* பாலுறவு தொடர்பான காட்சிகளை எலக்ட்ரானிக் வடிவத்தில் வெளியிடுவோரை முதல் தடவை தண்டிக்கும்போது ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும், மறுமுறை இதே தவறை மீண்டும் செய்தால் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும், இவற்றோடு இரண்டு லட்ச ரூபாய்வரை அபராதமும் விதிக்கலாம்..

## 69(1) பிரிவு மற்றும் 69(2) பிரிவு

மத்திய அரசு, மாநில அரசு அல்லது அதன் அதிகாரிகள் இதற்கென சிறப்பாக அதிகாரம் அளிக்கப்பட்டு அவர்களின் விருப்ப அதிகாரத்திற்கு உட்பட்டு, இந்திய அரசின் இறையாண்மை அல்லது ஒருமைப்பாடு, பாதுகாப்பு, நட்பு நாடுகளின் நலன்கள் அல்லது பொது ஒழுங்கு ஆகியவற்றைக் காத்திட, மேற்குறித்தவைகள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய குற்றம் ஏதேனும் இழைப்பதைத் தடுத்திட, அக்குற்றங்கள் குறித்து புலன் ஆய்வு ஏதேனும் மேற்கொள்ள, எழுத்து மூலம் காரணங்கள் பதிவு செய்து, எந்த ஒரு அரசாங்கத்தையோ அல்லது ஒரு முகவாண்மையையோ, கணினி வழியாக அனுப்பப்படும் எந்த ஒரு தகவலையோ, கணினியில் காத்து வைக்கப்படும் தகவலையோ, இடையீடு செய்து கண் காணிக்க, மறித்திட, உத்தரவு அளித்து செயல்பட முடியும். இவ்வகை செயல்பாட்டிற்கு உகந்த வழிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்படி, காவல்துறைக்கு எல்லை மீறிய அதிகாரத்தை இச்சட்டம் அளிக்கிறது. அரசாங்கங்கள் உங்களின் மின்னஞ்சல், குறுந்தகவல், தொலைபேசி உரையாடல் போன்ற, அனைத்து தகவல் தொடர்பு நடவடிக்கைகளையும், கண்காணித்திட முடியும். நீதிமன்ற உத்தரவு ஏதும் இல்லாமலே, காவல்துறை ஆய்வாளர் ஒருவர், ஒரு இல்லத்தில் நுழைந்து தேடுதல் நடவடிக்கை செய்திடமுடியும், கணினியைக் கைப்பற்ற முடியும், புலன் விசாரணை நடவடிக்கையில் ஈடுபடமுடியும்.

**ஆதாரம்: லாயர்ஸ் லைன் மாத இதழ்**

இவ்வாறு லாயர்ஸ் லைன் மாத இதழ் மூலம் நாம் அறிந்த செய்திகள் அனைத்தும் உண்மையானவைகளே! இதன் மூலம் நாம் அறிவது முகநூலில் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் தவறான பதிவுகளைப் பதிவிடுவோர் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட முடியும் இதனால் இவர்கள் இந்த தவறுகளைச் செய்யாமல் இருக்க இந்தக் தகவல் பயன்படும் என்று கருதி வெளியிடுகிறோம்.

"தவறுகள் நடப்பதைக் குறைப்போம்...!

தவறுகள் இல்லா உலகைப் படைப்போம்...! ●



▪ சமுதாய ரீதியில் துணிந்து செயலாற்றும் சக்தி படைத்த வர்க்கம் தொழிலாளர் வர்க்கம் தான். - *கார்ல் மார்க்ஸ்*

# உயிர்மெய்

## 4

நல்ல தம்பியும், அரிமாவும் பொன் மதியிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். பொன்மதியின் கண்களில் வேதனையின் வலி கண்ணீராய் வழிந்தது. அதனைப் பார்த்து அரிமா,

“அண்ணி நான் நீங்க சொன்னதால் இரண்டு நாளாய் அமைதியாயிருந்தேன். இனிமேல் என்னால் முடியாது. எங்கிருந்தாலும் அண்ணனை கண்டுபிடிச்சி கொண்டு வந்திடறேன். உங்க கண்ணீரை பாக்கற சக்தி எனக்கில்லை”... என்றபடியே குமுறிவிட்டான்.

அவனைப் பிடித்துக் கொண்டு பொன்மதி. “இன்னும் ரெண்டு நாள் பொறு. உங்க அண்ணன் நல்லயிருக்கார்னு நல்லதம்பி அண்ணன் தானே செல்பேசியில் பேசிட்டு சொன்னார். நாம நல்லவங்களா மட்டும் இருந்தா போதாதுன்னு அவரு அடிக்கடி சொல்வாரு. அதை நினைச்சிக்கோ. நான் கலங்கியதற்கு காரணம் அவர் உயிருக்கே ஆபத்தான நிலையில் நான் அருகில் இல்லையே என்பது தான். அண்ணே இப்ப என்ன நிலவரம் ஏதாவதுதெரிஞ்சா சொல்லுங்கண்ணே” என்று நல்லதம்பியிடம் கேட்டாள்.

“பயப்பட ஒண்ணுமில்லை. அறிவேந்தி விவேகமாய் போராடுகிறான். இந்த நாட்டில் அதிகாரத்தில் இன்னும் நல்லவங்களும் இருக்காங்கம்மா. கடமையும் நேர்மையும் உள்ளவர்கள் பழிவாங்கப்பட்டிருக்கலாம் ஒதுக்கப்பட்டிருக்கலாம். ஆனா சட்டப்படி நீக்க முடியாமல் இருக்கிறார்கள். எனக்கு நம்பிக்கையிருக்கிறது. நாம நம்மால் முடிந்த பணிகளை செய்வோம். அறிவேந்தி மனபலம் கொண்டவன்” என்று முடிக்கும் முன் “என்னண்ணே, கூட்டத்தில் பேசுறா மாதிரி பேசுறீங்க. இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க. அண்ணியின் மனவேதனையை கவலையை என்னால் பார்த்து கொண்டிருக்க முடியல. குணா வந்தா நான் என்னண்ணே சொல்லுவேன்” நல்லதம்பியின் கையைப் பிடித்துக் கொண்டு மௌன அழுகையை அரிமா தலைகுனிந்து வெளிப்படுத்த, பொன்மதி தெளிவாகவும் உறுதியாகவும் “அண்ணே, நீங்க சொன்னது தான் மெய், அரிமாவும் நீங்களும் என்னை மன்னிக்கவும்...”

நல்லதம்பியும், அரிமாவும் வியப்புடன் அவளைப் பார்த்தார்கள். அவள் தொடர்ந்தாள்.

“கண்டெய்னர்கள் பற்றி மந்திரிகள், பணத்து அடிமையாகி விலைப்போன அதிகார வர்க்கம் எல்லாம், மிரட்டிய இரவே, அவர் வீட்டிற்கு வந்தவுடன் என்னிடம் சொல்லி வருந்தியிருக்கிறார். கொஞ்சமும் அச்சப்படவில்லை. எப்படி இந்த அநியாயத்தை மக்கள் அறிய செய்வது என்று தான் துடித்தார். நானும் அவருடன் வாழ்பவள், அதிலும் காதலித்து மணந்தவள். அவரின் பகுத்தறிவு, நேர்மை, படைப்பாற்றல், மனிதநேயம், பண்பு, இந்த குணநலன்கள் பெரியார் பாசறையில் உருவான என்னை ஈரத்தது. அதன் விளைவே எங்களைப் பொறுத்தவரை காதலானது. அண்ணே நீங்க அறியாததா.! அரிமாவுக்காகச் சொல்கிறேன். தம்பி, ஆத்திரம் முழுமையாக எதையும் சாதிக்காது. அறிவுப் பார்வையின் பயணமே நினைப்பை நிலைக்க வைக்கும். உடனே கூட்டத்தில் பேசுவதாக கூறி சாதாரணமாக்கி விடாதே. நீ எதிர்பார்த்ததைச் சொல்றேன். உங்க அண்ணன் விபரத்தை சொன்னவுடன், நானும் சராசரிப் பெண்ணின் மனநிலையைப் பெற்று முதலில் கலங்கினாலும், அவரின் அஞ்சாமன நிலையைப் பார்த்து பெருமிதம் கொண்டேன். மக்களிடம் கொண்டு சேர்த்து போலித்தனமும் காலித்தனமும் கொண்ட அரசியல்வாதிகளின் முத்திரையை கிழித்தெறிய வேண்டும் என அவர் உயிருக்கு துணிந்து மெய்யை நிலைநாட்ட நிமிர்ந்து நிற்கும் போது அவரது வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சமமாய் இருப்பேன். அய்யா பெரியாரின் திருமணமுறை உறுதியேற்பில் மனம் ஒன்றி உறுதிமொழிப் படித்து ஏற்றுக் கொண்ட நான், என்னையே ஆய்ந்து ஒரு கணத்தில் தெளிவானேன். எதுவந்தாலும் பார்ப்போம் என்று எனக்கு தோன்றியதுதான் ஒரு கண்டெய்னரை கடத்தும் திட்டம்.” பொன்மதி சொல்ல..சொல்ல இருவரும் வியந்து போய் அவரின் மன உறுதியிலும், தன் கணவனுடன் இணைந்து வாழ்வையே பணயம் வைத்த சமூகப்பார்வை செயலிலும் மனம் நெகிழ்ந்து அடுத்து பொன்மதி சொல்லப்போவதை ஆவலுடன் எதிர்நோக்கினார்கள். பொன்மதி தொடர்ந்தாள்.

“அண்ணே, அரிமா என்னுடன் இருப்பதைப்போல குணநீதி தன் திராவிட மாணவர்கள் அமைப்பு தோழர்களுடன் அவருக்கு துணையாக இருக்கிறான். எனக்கு பாதுகாப்பாய் அரிமாவை வைத்துக் கொள்ள அவர் கூறி குணாவை அன்றிரவே தொடர்பு கொண்டு கல்லூரியில் இருந்து வரவழைத்தார். வீட்டுக்கல்ல பாசறை அலுவலகத்திற்கு ...மிகவும் ரகசியமாக திட்டம் போடப்பட்டது.”

அரிமா குறுக்கிட்டான்

“அண்ணி, உங்க பாதுகாப்புக்கு என்பதால் உண்மையை என்னிடம் சொல்லாதது நியாயமா அண்ணி”.

“அரிமா விளக்க இது நேரமில்லை. இன்னும் நாம் அபாயக்கட்டத்தைத் தாண்டவில்லை. யாரும் அறிய முடியாத வகையில் இன்னொருவர் துணையும் பக்க பலமும் நமக்கு இருக்கிறது.” சற்று நிறுத்தினாள்.

“அப்படியாம்மா, சொல்றதுன்னா சொல்லு.... நாங்க என்ன செய்யணும். புகழ இது நேரமில்லைன்னு நீயே சொல்லிட்ட முதல்ல அறிவேந்தியின் அறப்போரை வெற்றியடைய வைக்கணும். சொல்லும்மா.” நல்லதம்பி சற்று உணர்ச்சிவயப்பட்டதை வார்த்தைகள் வெளிப்படுத்தின.

“அண்ணே, அமைதியாவுங்க, அரிமாவுக்கு வேண்டியவங்க தான் நமக்கு எல்லாவுமாயிருக்காங்க. நான் இந்தளவுக்கு தைரியமா இருக்க அவுங்க ஒரு காரணம்”அரிமா, மகிழ்வுடனும் குழப்பத்துடனும் பொன்மதியைப் பார்த்து “அண்ணி யார் அண்ணி” என்று கேட்க பொன்மதி “செம்மொழி *IPS*” என்றாள். கல்லுடைக்கும் தொழிலாளியின் மகளாகப் பிறந்து இன்னைக்கு *IPS* அதிகாரி. பெரியாரின் இட ஒதுக்கீடு, பெண்ணுரிமைச் சின்னம்.

“செம்மொழி நம்ம பொன்னாச்சே ....செம்மொழி என்ன செய்தது அண்ணி” அரிமா உற்சாகத்துடன் கேட்க. அவனைப் பார்த்து பொன்மதி இளநகை புரிந்த படியே, நல்லதம்பியிடம்.

“அண்ணே, பாத்தீங்களா அரிமாவை, செம்மொழின்னா எவ்வளவு ஆர்வமா இந்த நிலையிலும் கேக்கறான்.”

“ஆர்வத்தைவிட ஆசையா கேக்கறான்னு சொல்லு, பிரச்சனை முடியட்டும்.... அரிமாவின் எண்ணத்தை


■ எந்த அளவுக்கு உங்கள் அறிவை தொழிற்கல்வியோடு சேர்த்துப் பயன்படுத்துகிறீர்களோ அந்த அளவிற்கே முன்னேறுவீர்கள். – **இங்கர்சால்**

கடலூர் இள.புகழேந்தி

**அய்யா பெரியாரின் திருமணமுறை உறுதியேற்பில் மனம் ஒன்றி உறுதிமொழிப் படித்து ஏற்றுக் கொண்ட நான், என்னையே ஆய்ந்து ஒரு கணத்தில் தெளிவானேன். எதுவந்தாலும் பார்ப்போம் என்று எனக்கு தோன்றியதுதான் ஒரு கண்டெய்னரை கடத்தும் திட்டம்." பொன்மதி சொல்ல..சொல்ல இருவரும் வியந்து போய் அவரின் மன உறுதியிலும், தன் கணவனுடன் இணைந்து வாழ்வையே பணயம் வைத்த சமூகப்பார்வை செயலிலும் மனம் நெகிழ்ந்து அடுத்து பொன்மதி சொல்லப்போவதை ஆவலுடன் எதிர்நோக்கினார்கள்.**

நிறைவேற்றுவோம்... என்னம்மா நான்சொல்றது.'சரியாதான் சொன்னீங்க..அண்ணே அவரு என்கிட்ட போன்னவுடன் செம்மொழியிடம்பேசலாம்னு முடிவெடுத்தேன். ஆனா... அவரு யோசிச்சாரு, நம்மளால செம்மொழிக்கு தொல்லை வந்துடப் போவுது. இரண்டு அரசாங்கம் சம்மந்தப்பட்டது. நல்லபொண்ணு கடமையை செய்துன்னு நல்ல பேரு. நம்ம திட்டத்துக்கு ஒத்துவருமா? என்றெல்லாம் சிந்தித்து, அப்புறம் ஒரு முடிவுக்கு வந்தோம். வெற்றியா மக்கள் முன்னிறுத்தும் போது செம்மொழிக்கு பாராட்டும் புகழும் கிடைக்கும். சொல்லலாம்னு தொடர்பு கொண்டேன். நம்ம நாட்டு நிலையைப் பாருங்க PM 60-வது முறையா போகாத ஒரு நாட்டை கண்டுபிடிச்சி ... அவர் நண்பருடன் வெளிநாட்டுப் பயணமாம். டெல்லியில் இருந்து செம்மொழி பேசிச்சி. மத்திய அரசுப் பணியில் இப்ப செம்மொழி. PM விமானம் ஏறும் வரை பாதுகாப்புப் பிரிவில் உள்ளதாம். எதைப் பற்றியும் கவலைப்படாமல் இனமாறன் IPS-சை தொடர்பு கொள்ள சொல்லிட்டுது. அப்புறம் பேசினோம். இனமாறன், காஞ்சிபுரம் நம்ம தோழர் அண்ணா நம்பி மகன். இனமாறனே, களத்தில் மறைமுகமாக இறங்கி குணநீதி குழுவினருடன்பேசியதுடன், 2008-இல் அன்றைய முதல்வர் கலைஞரால் பணி உயர்வுப் பெற்ற நல்ல அதிகாரியிடமும்பேசி யூகம் வகுத்துள்ளார்."

நல்லதம்பி குறுக்கிட்டு,

"அவரால் வந்தவர்னா....விட்டு வைக்க மாட்டானுங்களே"

"ஆமாம் அண்ணே காத்திருப்போர் பட்டியல்ல வைச்சிருக்கானுங்க....இருந்தாலும் காவல்துறையின் புத்தி சாலித்தனமான யுக்தியுடன் அவர் இனமாறனை ஊக்கப்படுத்தினார்" என்றாள் மேலும்

"இவனுங்க ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர நல்லவழி" என்ற பொன்மதியிடம்

அரிமா,

"எப்படிண்ணி, சொல்றீங்க" என்று கேட்க அவள்

"அரிமா, டெல்லிக்கு கப்பம் கட்டற மாதிரி ஒரு கண்டெயினர் பேரம் பேசியிருக்கானுங்க. அது போவலைன்னா... கடுப்பாகி, ஏற்கனவேயிருக்கிற பிரச்சனைகளை வைத்து, தாங்கள் தான் பிடித்ததாகக் கூறி, ஊடகங்களில் திடீர் காந்தியாயிடுவானுங்க. எப்படியோ.! மக்களை ஏமாற்றி அதிலும் மருத்துவம், கல்வி, பால் ரேஷன் பொருட்களில், விவசாயம் போன்ற துறைகளில் பெற்ற கமிஷன்கள் தானே கண்டெயினராநிக்குது. அது வெளியில் நம்மால் வரப்போகுது. அப்புறம் இந்த ஆட்சியை அவன் கலைக்கட்டும். அவன் ஆட்சியை மக்கள் விரட்டட்டும். நமக்கு நல்ல வேலையிருக்கிறது" என்ற பொன்மதியிடம் "அறிவு வேற எதாவது பேசனானா... இப்ப என்ன நிலை" நல்லதம்பி கேட்க,



"அண்ணே, அவரை தேடி ஒரு கூட்டமே அலையுது. மூணுநாள் ஆயிடுச்சி..... நாம போய் காவல்நிலையத்தில் அவரை காணோம்னு புகார் செய்யலாம். ஊடகங்களில் எப்படியும் என்னை கேப்பாங்க துறை மந்திரி அவசரமாக வரச் சொல்லிப் போனவர் தான் வரவும் இல்ல. தொடர்பும் இல்ல பயமாயிருக்குன்னு சொல்லிடறேன். அரசு அலுவலர்கள் சங்கத்திலும் சொல்லிடுவோம். நாம பொய் ஒண்ணும் சொல்லலையே. நடந்ததுல தொடக்கத்தை சொல்றோம். என்னண்ணே சொல்றீங்க."

"சரியான திட்டம் மந்திரி பய பதில் சொல்லட்டும். டெல்லி முழிக்கட்டும். DRO ன்னா சும்மாவா. அரசியல் கட்சிகள் தலையிடட்டும். நானும், அரிமாவும் எதிர்கட்சித் தலைவர்கிட்ட சொல்லிடறோம். சட்டமன்றத்தில் செயல்வேகத்தில் பிரச்சனையை வைப்பார். மக்கள் பேச்செல்லாம் கண்டெய்னர் பத்தியேயிருக்கட்டும். எவனும் அறிவுக்கிட்ட போக பயப்பட்டு ஓடிடுவானுங்க. இதுவரை நம்ம நாட்டில இப்படி நடந்தது இல்லை. சீனப்புரட்சியாளர் மாவோ சொன்னபடி "நாம எடுக்க வேண்டிய ஆயுதத்தை எதிரிதான் தீர்மானிக்கிறான்"எவ்வளவு பொறுத்தமாயிருக்குது பாத்தியாம்மா,"

"அண்ணே அதைத்தான் "முள்ளை முள்ளால் எடுக்கணும்னு" அந்த காலத்திலேயே நம்மவங்க சொன்னது" பொன்மதி சொல்லி முடிப்பதற்குள் முத்தையா வேகமாக வந்தான். அவன் கையில் அறிவேந்தியை அட்டைப்படமாக போட்ட நக்கீரன் இதழ்.

"அம்மா அய்யாவைப் பத்தி நல்லா எழுதியிருக்கிறான் ஆனா உயிருக்கு ஆபத்துன்னு போட்டுயிருக்கிறது பயமா இருக்கும்மா" முத்தையா பதற்றத்துடன் சொல்ல, பொன்மதி,

"நக்கீரன்னா சரியாகத்தான் இருக்கும்."

"அண்ணே, காலம் வந்துடுச்சி, நான் சொன்னபடி காவல் நிலையம் போலாம். அரிமா புகார் எழுது. முத்தையா நீ பத்திரிக்கையாளர்களை அங்க வர சொல்லிடு" என்றபடியே மூவரும் காவல்நிலையம் புறப்பட்டார்கள்.

காவல்துறையினர் பல வழக்குகளில் கைப்பற்றிய வாகனங்கள் நீதிமன்ற உத்தரவுடன் நிறுத்தப்படும் இடத்தில் எப்பொழுதும் இல்லா அளவுக்கு கண்டெய்னர்களே பத்துக்கும் மேற்பட்டவை நின்று கொண்டிருந்தன. மாநகர காவல் அலுவலர் இனமாறன் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அருகில் வந்த ஆய்வாளர் அய்யனார்.

"சார், நீங்க சொன்னமாதிரி பேசியதால் தான் துறை முகத்தில் காத்திருப்பு கண்டெய்னர்களை ஒருவாரக் காலத்திற்கு இங்க கொண்டு வந்து நிறுத்திட்டோம்".

"குட் .....அய்யனார், நாம கொண்டு வந்த கண்டெய்னர்"

"அது நடுவுலே காவிக்கலர்ல இருக்கு சார்"

"எச்சரிக்கை, எவனையும் எவரையும் நெருங்கவிடக்கூடாது"

"சார்...அய்யனார் காவல் சார்", கம்பீரமாக அய்யனார் சொல்ல அர்த்தப் புன்னகையுடன் இனமாறன் நடந்தார்.

– தொடரும்



▪ துருப்பிடித்த இரும்பும் சோம்பல் ஏறிய உடம்பும் உதவாது. – இங்கர்சால்



கவிஞர். **நா.காமராசன்** மண்டகொளத்தூர்

# செல்லக்கண்ணு



வயலும் வயல்சார்ந்த
மருத நிலம்தான் அவன் வாழ்விடம்;
ஆத்தங்கரையோரம் மாமரத்தோப்பில்
மாட்டுக் கொட்டகையோடு
இவனும் ஒட்டிக்கொள்ள ஒத்த
பனையோலைக் குடிசை!

நாலைந்து தென்னை மரமும்
ஒரு கிச்சிலி மரமும்
வளர்ந்திருந்த வாய்க்காலில்தான்
பம்புசெட் நீர் இறைக்கும்; வாய்க்காலே
குளம் மாதிரிதான் இருக்கும்;
மின்சாரம் தடைபடாமல் இருந்தால்
வற்றாமல் இறைக்கும் ஆற்றுநீரூற்று;
சிலநேரம் எங்கள் பள்ளிக்கூட பயணம்
இங்கிருந்துதான் தொடங்கும்!

ஒரு பழைய வேட்டியும்
தோள்மீது ஒரு துண்டும்
மாடுகள் ஓட்டிச்செல்ல
துணையாக ஒரு மூங்கில் கொம்பும்
இவனின் ஒட்டுமொத்த சொத்து!

இவன் மனிதர்களோடு
பேசியதைவிட இந்த மண்ணோடும்
அந்த மாடுகளோடும் பேசிய
நாட்களே அதிகம்; மாடுகளும் பேசுமா?
பேசும்,எங்கள் செல்லக்கண்ணுவின்
முகத்தில் அவ்வப்போது முத்தமிட்டு!

இப்போதும் செல்லக்கண்ணு மீது
எனக்கு பொறாமைதான்; நாங்கள் வாழ
நினைத்த வாழ்க்கையை இவன் மட்டுமே
ஒட்டுமொத்தமாய் வாழ்ந்ததை!

இவன் சண்டையிட்டும் இவனோடு
யாரும் சண்டையிட்டும்
ஒருநாளும் பார்த்ததில்லை;
மண்ணை நேசிப்பவனால் எப்படி
மானுடத்தை நேசிக்காமல் இருக்க முடியும்!

கரடுமுரடான பாதைகளிலும்
கருவேலங்காடுகளிலும்
மாடுகளைவிட வேகமாகவே பயணித்தது
இவன் கால்கள்; மேற்கால செங்காடுமுதல்
கெழக்காலே நெருப்போடை வரை
அத்தனை ஒற்றையடிப்பாதையும்
இவனுக்கு அத்துப்படி!

மேய்ச்சலுக்கு போன மாடு
தொலைந்து விட்டது என்று
யாராவது தேடி வந்தால், "கோணாங்குட்டை
பக்கம் போய் பார்த்தியா,அங்கதான் ஆள்
ஒசரத்துக்கு கோரைப்புல்லு வளர்ந்திருக்கு,
திக்குத்தெரியாம
கத்திக்கினு இருக்கும் போய்ப்பாருடாம்பாரு"

நாங்கூட சிலநேரம் மாடுமேய்க்க
போவதுண்டு, ஆத்தங்கரைத்தாண்டிதான்
ஓட்டிப்போவோம்; "ஊரோரமா
கழனிக்கரம்புல மேய்க்காம இவ்வளவு
தூரம் எதுக்குடா கொழந்தைங்க ஓட்டி
வர்றீங்கனு" கேப்பாரு "அப்பப்போ
ஆத்துல குளிக்கவும் மீன்பிடிக்கவும்னு
சொல்லுவோம் "அவர்கிட்ட!

கொல்லையில வெயிச்ச மொச்சக்காய
துண்டுல கட்டி எடுத்துட்டு வந்து
எங்க எல்லாத்துக்கும் குடுப்பாரு;
நாங்கூட கேட்டதுண்டு, ஏம்பெரியப்பா
ஊர்ப்பக்கமே வரமாட்டேங்குறீங்க,இந்த
கழனி,ஆறு,ஏரி இப்படியே இருக்குறீங்க"
"இதாண்டா என் ஒலகம்,இதைத்தாண்டி
வேற என்ன இருக்குனு" சொல்லி
பொழுது சாயும்போது மாம்பிஞ்சுகளை
கையில் திணித்து அனுப்புவாரு
எங்களிடம்!

எப்பவாவது தெருக்கூத்து
நடக்குது என்று தெரிந்தால்
மட்டுமே அப்போது அவர் தலையை
ஊருக்குள் பார்க்க முடியும்;புழுதிப் பறக்கும்
ஆட்டத்தை
கண்கொட்டாமல்
பார்ப்பார்;
விடியலுக்கு முன்னே
காடு திரும்பியிருப்பார்!

காலங்கள் கடந்தது
ஊருக்குள் பயணித்த
ஓர்நாள்,
இளமைக்கால இரவுகளை
இரவல் வாங்கிய பாரதக்கொட்டாய்
எங்கள் செல்லக்கண்ணுவுக்கும் இன்று
அடைக்கலம் தந்திருந்தது;

மாடுகளை மேய்த்துத் திரும்பிய
ஒரு கறுக்கல்பொழுதில்
வழுக்கி விழுந்ததில் நடக்கமுடியாமல்
படுத்த படுக்கையாய் இந்த
பாரதக்கொட்டாயில் முடங்கிக்கிடந்தது
ஓடியாடித்திரிந்த ஓயாத அவரின் கால்கள்!


இதோ எங்கள் கண்களில்
நீர்த்திவலைகள்;
சில மனிதர்களை இப்படியாக
மட்டுமே பார்க்க வேண்டுமென
நினைத்திருப்போம்;
அப்படியான மனிதன்தான் செல்லக்கண்ணு;
எந்திரம்போல் உழைக்கக்கூடிய
கால்களை முடக்கி காலம்
அவனுக்கு ஓய்வைத் தந்திருக்கிறது!

அந்தக்காடு கழனிகள்,
வாய்க்கால் வரப்புகள்,
ஆற்றங்கரை ஓலைக்குடிசை,
கொஞ்சித்தழுவிய மாடுகள்
இவையனைத்தும்
ஏங்கித்தவித்துதான் கிடக்கும்
இவன் குரலுக்காவும் இவன் வருகைக்காவும்!

இதோ உறங்கிக்கொண்டிருக்கிறான்
எங்கள் செல்லக்கண்ணு;
இனி விழித்துவிடாத தூரத்தில்
அவன் பயணம்!
தாலாட்டுகிறது
மாமரத்துத் தென்றல்;
கண்ணீர் சிந்துகிறது வானம்!

●

# தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்



**Jora**
Life Care



ஒய்வும் சலிப்பும் தற்கொலைக்கு சமம்.
- தந்தை பெரியார்

**ச.செல்வகுமார்**
நிறுவனர் மற்றும் தலைவர்

Special for

- இருதய நோய்
- புற்றுநோய்
- உடல்பருமன்
- கண்நோய்
- எய்ட்ஸ்
- தோல் நோய்கள்
- இரத்த குறைபாடுகள்
- முடி உதிர்தல்
- இளமையான தோற்றத்திற்கு
- பக்கவாதம் ஆகிய அனைத்து விதமான நோய்களிலிருந்து விடுதலை பெறலாம்

**எமது தயாரிப்புகள்**




இயற்கை வாழ்வியல் முறை மற்றும் உணவு பழக்க வழக்கங்கள் மூலமாக அனைத்து விதமான நோய்களுக்கும் நிரந்தர தீர்வு

புத்துணர்ச்சி பெறும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பொருந்தும்

**எங்களது தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்ய**
**மாவட்ட வாரியாக முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தேவை!**

**அலுவலகத்தில் பணிபுரிய அலுவலக ஊழியர்கள் தேவை!**

**தகுதியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்**

**கல்வி தகுதி:** 10 முதல் அனைத்து டிகிரி. **சம்பள அளவு:** 10000 முதல் 30000 வரை

மேலும் விபரங்களுக்கு

## JORA LIFECARE LLP MUMBAI

4th Floor of 'Chandreshwar Bhavan' 178, Road: Laxmibai Kelkar Marg,,
Location: Sion Hospital, near videophone gallery Sion, Mumbai - 400022

**022 24010280 9321220209 Call:9930720123**

KAITHADI TAMIL MONTHLY Title-Code:-TNTAM23722


# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்



அஞ்சல் வழியாக
'கைத்தடி' இதழ் பெற விரும்புபவர்கள்
ஆண்டுக் கட்டணம் ரூ.300
செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
வங்கி வழியாக ஆண்டுக் கட்டணம் செலுத்த...

ஓராண்டு சந்தா செலுத்தி சேமிப்பீர் ரூ.60/-

NAME : KAITHADI
A/C NO : 20160200001582
IFSC CODE : FDRL0002016
A/C TYPE : CURRENT ACCOUNT
FEDERAL BANK, DHARMAPURI

தொடர்புக்கு:

**73733 33078 / 86673 42047**

kaithadimonthly@gmail.com kaithadi.com


Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.

FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com

அச்சிடப்பட்ட செய்திநூல் அஞ்சல் – தனிச்சுற்று

Printed Magazine Book Post - Private Circulation